உ

கணபதிதுணை,

திருச்சிற்றம்பலம்.

வட திருமுல்லைவாயிலந்தாதி.

இஃது,

திருவாவடுதுறை ஆதீனத்துத்

திராவிடமகாபாஷ்யகர்த்தராகிய

சிவஞானயோகிகள்

அருளிச்செய்தது.

மதுராபுரிவாசியாகிய

இ. இராமசுவாமிப்பிள்ளை என்று

வழங்குகின்ற

ஞானசம்பந்தப்பிள்ளை

செய்த உரையுடன்

இராமநாதபுர சமஸ்தானம் ம-ா-ா-ஸ்ரீ

பொன்னுச்சாமித்தேவரவர்களுடைய

புத்திரர் ம-ா-ா-ஸ்ரீ

பாண்டித்துரைத்தேவரவர்கள்

விரும்பியவண்ணம்

சபாபதிநாவலரவர்களது

சித்தாந்தவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சென்னை: ஏகவல்லியம்மன்கோயில்வீதி - 79.

1889.

விரோதி ஹு

Copy-Right Registered.

சிறப்புப்பாயிரம்.

பொருட்டுறை மலிந்த முல்லையந் தாதி
புலவர்கட் கமிழ்தெனப் பொழிந்த
தருட்டுறை யடியர் நிதியமாய்ப் போந்த
வண்ணன்மெய் கண்டமா தேவன்
மருட்டுறை யொழிப்பான் வார்த்திகப் பொழிப்பான்
வகுசிவ ஞானபோ தத்தின்
றெருட்டுறை பிறங்கப் பாடிய முறையிற்
செய்சிவ ஞானவான் முகிலே.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருமுல்லைவாயிலந்தாதி.

மூலமும் உரையும்.

காப்பு.

மல்லைவினாயகனிந்தெம்மையாளொற்றிவைபுகல்வே
றில்லைவினாயகனன்கேனுமில்லென்றிகழ்வெனுஞ்
சொல்லைவினாயகனைந்திரப்போர்க்கருள்சோதிபெற்ற
முல்லைவினாயகன்முல்லையந்தாதிக்குமுன்னிற்குமே.

(இதனது பதப்பொருள்.) மல்லை வில் நாய கனிந்து எம்மை ஆள் ஒற்றி வை வில் வேறு புகல் இல்லை—மேருமலையை வில்லாகவுடைய முதல்வரே திருவுளமிரங்கி அடியேங்களை அடிமை பூண்டருளும் (பூண்டு) ஒற்றிசெய்தருளும் (அல்லது) விற்றருளும் பிறிது பற்றுக்கோடு இன்று,—நாய் அகன் நன்கு ஏனும் இல் என்று இகழ்வு எனும் சொல்லை வினாய்—நாயிடத்துள்ள நன்மையாயினும் இல்லையேயென இகழாதிரும் என்று புகழ்கின்ற விண்ணப்பத்தைக் கேட்டருளி,—அகன் நைந்து இரப்போர்க்கு அருள் சோதி பெற்ற முல்லை வினாயகன்—மனம் உருகி யாஜிக்கின்ற (அத்) திருவடியார்களுக்குக் கருணைசெய்யுஞ் சிவபிரான் தந்தருளிய முல்லைவினாயக மூர்த்தியானவர்,—முல்லையந்தாதிக்கு முன்னிற்கும்— (யான், பாடத்தொடங்கிய) திருமுல்லைவாயிலந்தாதி என்னும் இப்பிரபந்தத்தின்பொருட்டு (வரும் இடையூற்றைப்போக்கி) முன்னின்றருளுவர். என்றவாறு.

மலையென்பது மல்லையென ஓரொற்று விரிந்து நின்றது, எதுகை நோக்கி. மூன்றாமடியில் வினாயென்பது கேட்டென்னும் பொருளில் வந்தது. ஏகாரம் ஈற்றசை.

நூல்.

திருத்தங்குமாமுல்லைவாயிற்பிரானிருசேவடிநீர்த்
திருத்தங்குமார்க்கத்திற்செல்லாமலாடப்பெற்றேமினிமால்
திருத்தங்குமாரனென்றேதிப்பிறனைப்பின்சென்றுநின்று
திருத்தங்குமாதுமுனிந்தாலுநைந்துளந்தேம்பிலமே.

(இ - ள்.) திருத் தங்கு மா முல்லைவாயிற் பிரான் இரு சேவடி நீர்த் திருத்தம்—அழகுதங்கிய பெரிய திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற கடவுளாகிய சிவபெருமானுடைய சிவந்த இரண்டு திருவடிகளில் (அபிடேகிக்கப்படும்) திவ்விய தீர்த்தத்திலே,—கு மார்க்கத்தில் செல்லாமல் ஆடப் பெற்றேம்—கீழ்மையாகிய வழியில் ஒழுகாவண்ணம் மூழ்கப்பெற்றோம்,—(ஆதலால்) இனிப் பிறனை மால் திருத்தம் குமாரன் என்று ஓதிப் பின் சென்று நின்று திருத்தம்—இனி (உலகத்தையாளும் அரசராகிய) அயலோரை விஷ்ணுவுக்கும் இலக்குமிக்கும் புத்திரனாகிய மன்மதனென்று புகழ்ந்து பின்னே போய் நின்று சீர்ப்படுத்தமாட்டோம்,—கு மாது முனிந்தாலும் உளம் நைந்து தேம்பிலம்—(அங்ஙனம் புகழாமை பற்றிப்) பூமாது கோபித்தவிடத்தும் மனம் வருந்தித் தளரமாட்டோம். எ - று.

இரு சே வடி நீர்த் திருத்தமென்பதற்கு நிருமலமாகிய பேருட்சத்தி (பதிந்த) தீர்த்தத்திலெனினும் அமையும். மூன்றாமடியில் தம் சாரியை. (க)

தேங்கொன்றையாரணவுஞ்சடைவாழ்வைத்திசையனைத்துந்
தேங்கொன்றையாரணவல்லாரெமைச்சினஞ்செய்துபொறி
தாங்கொன்றையாரணஞ்செய்யாதுமுல்லைத்தலத்திறைவா
தாங்கொன்றையாரணவென்றிரந்தேத்துந்தவம்பெறினே.

(இ - ள்.) தேம் கொன்றை ஆர் அணவும் சடைவாழ்வை—தேன்பொருந்திய கொன்றைமலரும் ஆத்திமலரும் அணிந்த சடையையுடைய செல்வமாயுள்ளவரும்,—திசை அனைத்தும் தேங்கு ஒன்றை அண வல்லார் யார்—திக்குகள் முழுவதும் நிறைந்துள்ள ஒரு பொருளுமாகிய சிவபெருமானை அடையமாட்டாதவர் யாவர்,—பொறிதாம் எமைச் சினஞ்செய்து கொன்று ஐயாரணஞ்செய்யாது—பஞ்சேந்திரியங்களானவை எங்களைக்கோபித்து மிக வருத்தி பிதாவே

புண்ணுக்காது,—முல்லைத் தலத்து இறைவா தாங்கு—திருமுல்லைவாயிலாகிய திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் முதல்வரே காத்தருளும்,—ஒன்று ஐ ஆரண என்று இரந்து எத்தும் தவம் பெறின்—ஒன்றிய அழகிய வேதப்பொருளானவரே என்று வேண்டிப் புகழ்கின்ற தவத்தைப்பெற்றால். எ - று.

பிதாவே முதல்வரே ஆனவரே புண்ணுக்காது காத்தருளுமென்று புகழ்கின்ற தவத்தைப்பெற்றால் சிவபெருமானை அடையமாட்டாதவர் யாவரெனக்கூட்டுக. முதலடியில் கொன்றை ஆர் ஆகுபெயர்கள். மூன்றாமடியில் இரணம் ரணமெனத் தொகுத்தல்விகாரம் பெற்று நின்றது. (௨)

தவலரும்பல்கலைதேர்முல்லைவாயிற்சயிலவில்லார்
சுவலரும்பல்கலைதந்திடக்கொண்டவர்தூயமதி
நுவலரும்பல்கலைநீர்முடியாரை நுவன்றறியா
வவலரும்பல்கலைவேண்டியென்வீணிலலைவதுவே.

(இ-ள்.) தவல் அரும் பல் கலை தேர் முல்லைவாயிற் சயில வில் ஆர் சுவலர்—கெடுதலில்லாத பலநூல்களை ஆராய்ச்சிசெய்கின்ற திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிராநின்ற மேருமலையாகிய வில்லானது பொருந்திய பிடரினையுடையாரும்,—உம்பல் கலை தந்திடக் கொண்டவர்—யானையானது தோலாகிய வஸ்திரத்தைக் கொடுக்க (அதனை) அணிந்துகொண்டவரும்,—நுவல்தூய மதி அரும்பு அலை நீர் அல்கு முடியாரை—சொல்கின்ற சுத்தமுடைய பிறைக்கண்ணியும் திரையையுடைய கங்கைநீரும் தங்கிய திருமுடியையுடையாருமாகிய சிவபெருமானை,—நுவன்று அறியா அவலரும்—துதித்தறியாத எளியரும்,—பல்கலை வேண்டி வீணில் அலைவது என்—(போகங்கள்) அபிவிருத்தியாதலை விரும்பி வீணாக உழல்வது என்னையோ. எ-று.

யான் அறியேனென்பது எஞ்சி நின்றது. துதித்தால் எண்ணியவற்றை இருக்குமிடத்தே கூட்டுவரென்பது கருத்து. (௩)

அலைவனமந்தரங்காற்றங்கிமண்ணெனுமைந்துமல்லாத்
திலைவனமந்தரங்கத்தானமாத்திருமுல்லையின்வாழ்
தலைவனமந்தரங்காட்டுநஞ்சுண்டுதருவிசும்பிற்
கலைவனமந்தரங்காப்பினைமாற்றுங்கருணையென்னே.

(இ-ள்.) அலை வனம் அந்தரம் காற்று அங்கி மண் எனும் ஐந்தும் அல்லா—அலையையுடைய நீரும் ஆகாயமும் காற்றும் அக்கினியும் பூமியுமாகிய பஞ்சபூதங்களுமல்லாத,—இலை வனம் அந்தரங்கத் தானம் ஆ—(சிதாகாசவடிவமான) சிதம்பர ஸ்தலத்தை இரகசிய ஸ்தலமாகக்கொண்டு,—திருமுல்லையின் வாழ் தலைவன்—(அத்தாணித்தானமாகிய) திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கும் முதல்வராகிய சிவபிரான்,—அ மந்தரம் காட்டும் நஞ்சு உண்டு—(கடலைக்கடைந்து) அந்த மந்தரகிரியினாற் கொடுக்கப்பட்ட விடத்தை உண்டு,—தரு விசும்பிற் கலைவு அன மந்தர் அங்காப் பினை—(பஞ்ச) தருக்களையுடைய சுவர்க்கலோகத்திலுள்ள குலைவுற்றோடிய அத்தன்மையுடைய அறிவிலிகளாகிய தேவர்கள் வாய்திறந்தழுதலை,—மாற்றும் கருணை என்—போக்கிய திருவருள் (இருந்தபடி) என்னை. எ-று.

அத்தாணித்தானம் அரசிருக்கைத்தலம். தில்லை என்பது இலையென இடைக்குறைந்து நின்றது. மூன்றாமடியில் அம்மந்தரமென்பது அமந்தரமென நின்றது. இறுதியடியில் அன்னமென்பது அனவென இடைக்குறைந்து நின்றது. பஞ்சதருக்களாவன அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பனவாம். இரண்டாமடியில் அந்தரங்கத்தானமென்பதற்கு அழகையுடைய அம்பலத்தானமெனினும் அமையும். அப்பொருள் கொள்ளுங்கால் அரங்கமென்பது ரங்கமென அகரம் தொகுத்தல் விகாரம் பெற்று நின்றதாகக்கொள்க. (ரு)

கருமமலங்கொடுமாயையுநீக்கிக்கதிர்த்துவரா
றருமமலங்கொடுபாய்தடஞ்சூழ்முல்லைதன்னிலொன்றோர்
மருமமலங்கொடுசெற்றோன்பரசவரும்பெருமா
னருமமலங்கொடுமோமாசிலாமணியாண்டகையே.

(இ-ள்.) கருமம் மலம் கொடு மாயையும் நீக்கி—கன்மமும் ஆணவமும் கொடிய மாயையுமாகிய பாசங்கள் மூன்றையும் கெடுத்து,—வரால் கதிர்த்து தரும மலங்கொடு பாய் தடம் சூழ் முல்லை தன்னில்—வரால்மீன் கருவங்கொண்டு இயல்பாகிய மலங்குமீனோடு பொருகின்ற வாவிகள் சூழ்ந்த திருமுல்லைவாயிலின்கண்ணே,—ஒன்றோர் மருமம் அலங்கொடு செற்றோன் பரசவரும் பெருமான்—பகைவருடைய மார்பத்தைக் கலப்பையாகிய படைக்கலத்தாற் (பிளந்து) கொன்ற பலராமன் புகழும் வண்ணம் எழுந்தருளிய கடவுளே,—அரும் அம

லம் கொடு—அரிய பரிசுத்தத்தன்மையை (அடியேனுக்குக்) கொடுத் தருளும்,—மா மாசிலாமணி ஆண்டகையே—பெருமையாகிய மாசி லாமணி யீசரே. எ-று.

கடவுளே ஈசரே பாசங்கள் மூன்றையும் கெடுத்துப் பரிசுத்தத் தன்மையைக் கொடுத்தருளுமெனக் கூட்டுக. (௫)

கைதவநாடகங்காட்டியறிவைக்கமரகத்தே
பெய்தவநாடகவாக்கழித்தாய்புகழ்பெற்றதொண்டைச்
செய்தவநாடகமுல்லைப்பிரான்பதஞ்சிந்தைசெய்தே
நைதவநாடகமேயெங்குளானெங்கணம்பனென்றே.

(இ-ள்.) கைதவ நாடகம் காட்டி—வஞ்சகமாகிய நடிப்பைச் செய்து,—அறிவைக் கமரகத்தே பெய்து—உணர்வை (உலகமார்க்கமாகிய) பிளவிலே ஒழுகவிட்டு,—தகவு நாள் அவம் ஆக் கழித்தாய்—பயன்பெறத்தக்க காலங்களை (இதுவரையும்) வீணாகப் போக்கினாய் (இன்னமும் அவ்வாறாக்காது),—புகழ் பெற்ற தவம் செய் தொண்டைநாடு அகம் முல்லைப் பிரான் பதம் சிந்தை செய்தே—(சான்றோருடைத்தென்பதுமுதலிய) கீர்த்திகள் அடைந்த பதிபுண்ணியங்கள் செய்யத்தக்க தொண்டைமண்டலத்தி னிடத்ததாகிய திருமுல்லைவாயிலின்கண் வீற்றிருந்தருளும் கடவுளுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டே,—அகமே எங்கள் நம்பன் எங்கு உளான் என்று தவநாடு நை—மனமே நம்முடைய நம்பனென்னுந் திருநாமமுள்ள(அச்) சிவபிரான் எங்கே எழுந்தருளி யிருப்பனெனப் பெரும்பான்மையும் ஆராய்ச்சி செய்வாயாக (செய்து) உருகுவாயாக. எ-று.

இங்ஙனம் பத்திசெய்தலே புத்தி முத்தி சாதனமென்பது கருத்து. மனமே யென்பதை முதலிற் கூறிக்கொள்க. சான்றோருடைத்தென்பதற்குப் பிரமாணம் தமிழ்நாட்டு மூவேந்தரும், ஒருங்குகூடிய அவைக்களத்தே, தேயவியற்கைகளைப் பற்றி வினாநிகழ்ந்தவழி, ஓதாதுணர்ந்த ஔவையார் "தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" எனக்கூறிய, உண்மைத் திருவாக்கானு முணர்க. (௬)

எங்கணம்பன்பரசேரடியாரினிணைமலர்த்தா
ளெங்கணம்பன்பரசேமுல்லையாயருளென்றமரர்
தங்கணம்பன்பரசேய்கரத்தான்முல்லைதன்னிறையாஞ்
செங்கணம்பன்பரசேதனன்பாதமென்சிந்தையதே.

(இ-ள்.) எங்கள் நம்பன்—நம்முடைய நம்பனென்னும் திருநாமத்தை யுடையவரே,—பரசு அடியாரின் மலர் ஏர் இணைத்தாள் அங்கண் நம்பு அன்பு—(உலக முழுவதும்) துதிக்கின்ற (உம்முடைய) திருத்தொண்டர்களது செந்தாமரை மலர்போலும் அழகிய இரண்டு திருவடிகளை அவ்விடத்து விரும்புகின்ற பத்திமையை,—அரசே முல்லையாய் அருள் என்று அமரர் தம் கணம் பன்—நாயகரே திருமுல்லைவாயிலையுடையவரே தந்தருளுமெனத் தேவர்கூட்டங்கள் புகழ்கின்ற,—பரசு ஏய் கரத்தான்—மழுப்படையைத் தாங்கிய திருக்கையை யுடையவரும்,—முல்லை தன் இறையாம் செங்கண் அம்பன்—முல்லை நிலத்திற்குக் கடவுளாகிய சிவந்த கண்ணையுடைய விஷ்ணுவைப் பாணமாகவுடையவரும்,—பரசேதனன் பாதம்—பரஞானவடிவினருமாகிய சிவபிரான் திருவடியானது,—என் சிந்தையது—என்னுடைய மனசின்கண் இருக்கின்றது. எ-று.

உடையவரே நாயகரே உடையவரே பத்திதந்தருளுமெனப் புகழ்கின்ற வென்க. செங்கண் அன்மொழித் தொகை. (எ)

சிந்தைத்திருக்குமரமுங்களவுஞ்செறிந்தவஞ்ச
கந்தைத்திருக்குமரநேர்விழியவர்காமங்களு
முந்தைத்திருக்குமரன்மாயமுமுடித்தாளுமொரு
விந்தைத்திருக்குமரபறியாமுல்லைமெய்ப்பொருளே.

(இ-ள்.) சிந்தைத் திருக்கு மரமும்—கோணிய மரம்போன்ற மனத்தையும்,—களவும்—களவையும்,—செறிந்த வஞ்சகம் தைத்து இருக்கும் அரம் நேர் விழியவர் காமங்களும்—மிக்க கபடத்தை அடைத்திருக்கின்ற அராவுங் கருவிபோன்ற கண்களையுடைய பெண்களிடத் துண்டாகிய ஆசைகளையும்,—திரு முந்தைக் குமரன் மாயமும்—இலக்குமியின் மூத்தபிள்ளையாகிய மன்மதன் (செய்கின்ற) வஞ்சகத்தையும்,—முடித்து ஆளும் ஒரு விந்தைத்து—கெடுத்து (நண்பர்களே என்னை) ஆண்டருளும் ஒரதிசயத்தை யுடையதாயிருக்கின்றது,—இருக்கும் மரபு அறியாமுல்லை மெய்ப்பொருள்—வேதங்களாலும் இவ்வியல்பினதென்று உணரப்படாத திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளி யிராநின்ற தத்துவப்பொருள். எ-று.

பொருப்புக்குழைத்தகரத்தார்வமுல்லைப்புரத்தநியான்
கருப்புக்குழைத்தகரத்தார்நகக்கலங்காதருளும்

விருப்புக்குழைத்தகரத்தார்மலர்க்குழன்மெல்லியலா
மருப்புக்குழைத்தகரத்தார்தலைமைத்தென்வாழ்முதலே.

(இ-ள்.) பொருப்புக் குழைத்த கரத்து—மேருமலையை 'வில் லாக வளைத்த திருக்கையையுடையது,—ஆர்வ முல்லைப் புரத்தது—(தேவரும்) விரும்பத்தக்க திருமுல்லைவாயிலாகிய திருப்பதியையு டையது,— யான் கருப் புக்கு உழைத்து அகரத்தார் நகக் கலங்காது அருளும்—நான் (இன்னமும் அன்னை) வயிற்றிற் புகுந்து வருந்தி உலகத்தார்(இகழ்ந்து) நகைக்கும் வண்ணம் சஞ்சலட்படாமற் கருணை செய்கின்ற,—விருப்புக் குழைத் தகரத்து ஆர் மலர்க்குழல் ஆம் மரு ப்பு மெல் இயற்கு உழைத்து—விரும்புதலுடைய காதணியையும், மயிர்ச்சாந்தையும் இணைத்த புஷ்பங்களையும் (அணிந்த) கூந்தலையும், (வளப்ப) மாகிய பூங்கொம்புபோன்ற மிருதுவாகிய தன்மையையு டைய திருமேனியையும் பெற்ற உமாதேவியாருக்கு (வலப்) பாகத் தையுடையது,—அகரத்து ஆர் தலைமைத்து—(மெய்யும் உயிருமாகிய எழுத்துக்களெல்லாவற்றினு நிறைந்த தலைமையுடைய)அகாரத்தைப் போல [ச் சடாசடப் பிரபஞ்சங்களெல்லாவற்றினும்) நிறைந்த தலை மையையுடையது,—என் வாழ் முதல்—என்னுடைய (மெய்ச்)செல் வமாகிய முதற்பொருள். எ-று.

முதலடியில் கரத்தது எனற்பாலது கரத்து என அகரச்சாரியை தொக்கது. மெல்லியல் அன்மொழித் தொகை. வாழ்வு என்பது வாழ் என முதனிலை மாத்திரையாக நின்றது. (௯)

வாரம்படைத்தகருநீலக்கண்மயில்பாகரயில்
வாரம்படைத்தகருவந்தகோன்றொழுமன்னர்செய்யின்
வாரம்படைத்தகருவறுப்பார்க்கிடம்வண்டொழில்செய்
வாரம்படைத்தகருவாற்குலைசெய்வளமுல்லையே.

(இ-ள்.) வாரம் படைத்த கரு நீலக் கண் மயில் பாகர்—நீரி னுண்டாகிய கரிய நீல மலர்போலும் கண்களையும் மயில்போலும் சா யலையுமுடைய உமாதேவியாரைப் பாகத்திலே வைத்தருளியவரா யும்,—வார் அம் அயிற்படைத் தகர் உவந்த கோன் தொழும் மன் னர்—நீண்ட அழகிய வேற்படையோடு ஆட்டுக்கடாவையும் மகிழ்ச்சி யாகக் கொண்டருளிய முதல்வராகிய முருகக் கடவுளால் வழிபடப் பெற்ற நாயகராயும்,—வாரம் செய்யின் படைத்த கரு அறுப்பார்க்கு இடம்—பத்திசெய்தால் (வினைக்கீடாகப்) பெற்ற பிறவியை ஒழிக்கி

ன்றவராயுமுள்ள சிவபிரான் எழுந்தருளியிருத்தற்குத் தானமாவ
து,—வண் தொழில் செய்வார் அம்பு அகருவால் அடைத்துக் குலை
செய் வளம் முல்லை—நல்ல (உழவுமுதலிய) தொழில்செய்வாராகிய
மள்ளர் நீரை அகிற்கட்டைகளால் அடைத்துக் கரைசெய்யப்பெற்ற
பெருமையுடைய திருமுல்லைவாயிலாகும். எ - று. (௰)

முல்லைப்பதிகமஞ்சூற்கொண்டல்சூழ்முதுகுன்றினும்வாழ்
தில்லைப்பதிகமடமார்பன்மூவர்திருத்தமிழின்
சொல்லைப்பதிகமலர்த்தொடையானன்றுணைமலர்த்தா
ளொல்லைப்பதிகமனத்தேயமன்வருமுப்பொழுதே.

(இ - ள்.) முல்லைப்பதி—திருமுல்லைவாயிலாகிய திருப்பதியிலு
ம்,—கமம் சூற் கொண்டல் சூழ் முது குன்றினும்—நிறைவுபெற்ற
கருப்பத்தையுடைய மேகங்கள் சூழ்கின்ற பழமலையாகிய திருப்பதி
யிலும்,—தில்லை வாழ் பதி—ஸ்ரீசிதம்பரமாகிய திருப்பதியிலும் எழு
ந்தருளியிருக்கின்ற முதல்வராயும்,—கமடம் மார்பன்—கூர்மத்தின்
புறவோட்டை (ப் பதக்கமாகத் தரித்த) திருமார்பையுடையவரா
யும்,—மூவர் திருத்தமிழ் இன்சொல் மலர் ஐப் பதிகத் தொடையான்
றன்—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார்,
சுந்தரமூர்த்தி நாயனாராகிய மூவரும் (திருவாய் மலர்ந்தருளிய) திரு
நெறித் தமிழாகிய இனிய சொல்லாகிய மலர்களால் (அமையப்பெ
ற்ற) அழகிய திருப்பதிக மாலையை அணிந்தவராயுமுள்ள சிவபெருமா
னுடைய,—மலர்த் துணைத்தாள் மனத்தே எல்லைப் பதிக உப்பொழு
தே யமன் வரும்—செந்தாமரை மலர்போலும் இரண்டு திருவடிகளை
(நண்பர்களே) மனசின்கண்ணே சீக்கிரம் அழுந்தக்கடவீர் உந்தக்
கணப்பொழுதிலே இயமன் வருவனாதலால். எ - று.

கமடம் ஆகுபெயர். இறுதியடியில் பதிக்க வெனற்பாலது பதிக
வெனக் ககரமெய் விகாரத்தாற் றொக்கது. (௰௧)

தேங்கடம்புந்திகழுமலர்ச்சென்னிச்செவ்வேளைப்பெற்றோய்
தாங்கடம்புந்திகழுமலக்கோன்றமிழ்சூடியடி
யோங்கடம்புந்திகழுமலற்றேறுங்கவுயர்முல்லையா
யாங்கடம்புந்திகழுமலத்தெவ்வறவாணைகொண்டே.

(இ - ள்.) தேம் கடம்பு மலரும் திகழும் சென்னிச் செவ்வே
ளைப் பெற்றோய்—தேனையுடைய கடப்பம்பூவும் (வெட்சிப்பூவும்)

விளங்குகின்ற திருமுடியையுடைய முருகக் கடவுளைத் தந்தருளியவரே,—தாங்கு—காத்தருளும்,—அடம்பு உந்தி சழுமலக்கோன் தமிழ் சூடி—அடம்பந்தளிரையும் கங்கையாற்றையும் சீர்காழிப்பதிக்குத் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகமாலையையும் தரித்துள்ளவரே,—அடியோங்கள்தம் புந்தி கழுமல் அற்று ஓங்க—அடியேங்களுடைய அறிவு மயக்கத்தினின்றும் நீங்கித்தெளிவையடையும்பொருட்டு,—உயர்முல்லையாய்—மேலாகிய திருமுல்லைவாயிலையுடையவரே,—ஆங்கு அடு—அவ்வறிவின்கண் அடுத்தருளும்,—இகழும் மலத் தெவ் அறக் கொண்டு ஆணை அம்பு உந்து—நிந்திக்கப்படும் ஆணவமலத்தினது பகைமைகெடும் பொருட்டுத் திருவுளங்கொண்டு திருவருளாகிய பாணத்தைத் தொடுத்தருளும். எ - று.

திருநாமங்களை அடுக்கித், தெளியும்பொருட்டு அடுத்தருளும்காத்தருளும் தொடுத்தருளுமெனக் கூட்டுக. இரண்டாமடியில் அடம்பு ஆகுபெயர். சூடியென்பது பெயர். (௰௨)

கொண்டலங்கண்டருமால்போலுமுல்லைக்குழகர்முன்னாள்
விண்டலங்கண்டருமாலுழந்தேங்கவெகுண்டெழுநஞ்
சுண்டலங்கண்டருமாபதியார்முடியூடுமதித்
துண்டலங்கண்டருமாவாவெனைத்தொண்டுகொண்டனரே.

(இ - ள்) மால்போலும் கொண்டல் அங்கு அண் தரு முல்லைக் குழகர்—(வணங்கும்படி-வரும்) விஷ்ணுவைப்போலும் (மேகங்கள் சூழும்) திருமுல்லைவாயிலையுடைய அழகரும்,—முன்னாள் விண் தலம் கண்டு அருமால் உழந்து ஏங்க—பண்டைக்காலத்தே தேவர்கள் கண்டு பெரிய மயக்கம் அடைந்து பயப்படும்வண்ணம்,—வெகுண்டு எழு நஞ்சு உண்டு அலம் கண்டர்—(திருப்பாற்கடலினின்றும்) கோபங்கொண்டு தோன்றிய விடத்தையுண்டு அமைந்த கழுத்தையுடையவரும்,—உமா பதியார்—உமாதேவியாருக்குத் தலைவரும்,—முடியூடு மதித்துண்டு அலங்கு அண்டரும்—திருமுடியிலே பிறைமதி விளங்கப்பெற்ற (மகா) தேவருமாகிய சிவபிரான்,—ஆ ஆ எனைத்தொண்டு கொண்டனர்—ஆ ஆ (பரிபக்குவமில்லாத) என்னையும் அடிமையாக்கிக் கொண்டனர். எ - று.

அன்பர்களே இவர் பெருங்கருணை இருந்தபடி என்னையென்பது எஞ்சி நின்றது. முதலடியில் அங்கு அசை. விண்டலம் ஆகுபெயர் இழிவு சிறப்பும்மை தொக்கு நின்றது. (௰௩)

கொண்டானனங்கனஞ்சக்கொடும்பார்வைகுரைகடனஞ்
சுண்டானனங்கனம்வாவியுங்காவுமுலாவுமுல்லைக்
கண்டானனங்கனகம்புத்திமுத்தியுங்காட்டவஞ்சு
பிண்டானனங்கனற்கண்ணொடுவாழும்பெருமையென்னே.

(இ-ள்.) அனங்கன் அஞ்சக் கொடும் பார்வை கொண்டான்—மன்மதன் அஞ்சும்பொருட்டுக் கொடிய பார்வையைச் செய்தவரும், குரை கடல் நஞ்சு உண்டான்—ஒலிக்கின்ற கடலில் (உதித்த) விடத்தை யுண்டவருமாகிய சிவபெருமான்,—அனம் கனம் வாவியும் காவும் உலாவும் முல்லைக்கண்தான்—அன்னங்களும் மேகங்களும் (முறையே) தடாகங்களிடத்தும் சோலைகளிடத்தும் சஞ்சரிக்கப்பெற்ற திருமுல்லைவாயிலின் கண்ணே,—அனம் கனகம் புத்தி முத்தியும் காட்ட—அமுது திரவியம் (முதலாகிய இகபர) போகங்களும் வீடுபேறும் (பத்தர்களுக்குத்) தந்தருளும்பொருட்டுத் (திருவுளங்கொண்டு), கனற் கண் அஞ்சு பிண்ட ஆனனமொடு வாழும் பெருமை என்—அக்கினிக்கண்கள் (அமைந்த) ஒற்றுமையாகிய ஐந்து திருமுகங்களோடும் (சிவலிங்கமூர்த்தியாக) எழுந்தருளி யிருக்கின்ற மகிமை (இருந்தபடி) யாது. எ-று.

மூன்றாமடியில் தான் அசை. (௧௪)

பெரும்புங்கவருமகிழ்ந்தேத்துமுல்லைப்பெம்மான்களவே
விரும்புங்கவருமதியாளர்நட்டைவிழையும்வெறுந்
துரும்புங்கவருமனமிதுதீர்ந்தென்றுரிசுளத்தே
யரும்புங்கவருமவைகளுமாயவரும்பொருளே.

(இ-ள்.) பெரும் புங்கவரும் மகிழ்ந்து ஏத்து முல்லைப்பெம்மான் (தேவர்களிலே) சிறந்த அரிபிரமேந்திராதி தேவரும் (மற்றும் யாவரும்) மனமகிழ்ந்து துதிக்கும் திருமுல்லை வாயிலையுடைய கடவுளே,—களவே விரும்பும் கவரும் மதியாளர் நட்பை விழையும்—(பிறர்பொருளை) அபகரித்தலையே இச்சிக்கின்ற இரண்டுபட்ட புத்தியையுடைய தீயோரது சிநேகத்தை விரும்பும்,—வெறுந் துரும்பும் கவரும் என் மனம்—(அன்றி) வறிதாகிய துரும்பையும் (பொருளாகக்கொண்டு) கிருகிக்கும் என்னுடைய (அசுத்த) மனம்,—துரிசு இது தீர்ந்து உளத்தே அரும்பு—(ஆதலால்) குற்றமாகிய இதனைப் போக்கி (என்னுடைய சுத்த) மனத்தில் எழுந்தருளியிரு,—உங்கு அவரும் அவைக

ளும் ஆய அரும் பொருளே—உயர்திணைப் பிரபஞ்சமும் அஃறிணைப் பிரபஞ்சமுமாகிய பெரும் பொருளே. எ-று.

கடவுளே பெரும் பொருளே என அடுக்கி யுரைத்துக்கொள்க. இறுதியடியில் உங்கு அசை. (கரு)

அருவினையேனையெவர்புரப்பாரென்றழுங்கிநெஞ்சே
கருவினையேனைகரமின்றித்தென்முல்லைகாவலன்றாண்
மருவினையேனைவினைகளுநீங்கினைமாற்றினையிவ்
வுருவினையேனையுறுதியினியுனக்கென்குறையே.

(இ-ள்.) நெஞ்சே அரு வினையேனை எவர் புரப்பார் என்று அழுங்கிக் கருவில் நையேல்—மனமே பொறுத்தற்கரிய தீவினையை யுடைய என்னை யாவர் காத்தருளுவார் என்று அஞ்சி (இப்) பிறப்பின்கண்ணே தளராதே,—நைகரம் இன்றித் தென் முல்லை காவலன் தாள் மருவினை—வருத்தமின்றி (எளிதாக) அழகிய திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிராநின்ற முதல்வருடைய திருவடிகளை அடைந்தாயல்லவா,—ஏனை வினைகளும் நீங்கினை—(ஆதலால் ஆணவமலத்தோடு) மற்றைய வினைகளும் ஒழியப்பெற்றாய்,—இவ் உருவினை மாற்றினை—(மாயாகாரியமாகிய) இந்த உடலையும் (அசுத்தம் துக்கம் அநித்தியம் என உவர்த்து) வேறுபடுத்தினாய்,—இனி ஏன் ஐயுறுதி உனக்கு என்குறை—இனி எதன்பொருட்டுச் சந்தேகிக்கின்றாய் (பசுத்துவம் நீங்கிய) உனக்கு யாது குறையுளது. எ-று.

சிவத்துவம் விளங்குதல் சத்தியமே யென்பது எஞ்சிநின்றது—இனம்பற்றி ஆணவமலம் வருவிக்கப்பட்டது. கரு இனையேல் எனப் பிரித்துக் கருவின்கண் வருந்தாதே எனப்பொருள் கூறினும் பொருந்தும். (கசா)

குறைமதியாதவமாற்றுநர்கேண்மைவெங்கோளர்பொய்ம்மை
மறைமதியாதவமாமோபரமதமார்க்கமிந்த
மிறைமதியாதவமாதவர்வாழ்முல்லைமேவுமன
னிறைமதியாதவமால்விழியாளாநினைநெஞ்சமே.

(இ-ள்.) குறை மதியாது அவம் ஆற்றுநர் கேண்மை—(தமது) குற்றத்தை எண்ணாமல் (உலக) வம்புகளைச் செய்கின்ற அறிவிலிகளது நண்பையும்,—வெங் கோளர் பொய்ம்மை மறைமதி—கொடிய குறளையர் (கூறும்) அசத்தியத்தையும் மறுத்தல் செய்வாய்,—பரமத

மார்க்கம் ஆதவம் ஆமோ—புறச்சமய ஒழுக்கம் ஆதவனிலையாகுமா,—இந்த பிறை மதியா—இந்தக் குற்றத்திற் கேதுவானவைகளைக் கோடல் அறிவா,—(ஆதலால் இதனையும் போக்கி)—மாதவர் தவ வாழ் முல்லை மேவும்—பெரிய தவத்தினர் மிகுதியும் தங்கப்பெற்ற திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கும்,—பிறை மதி ஆதவம் அனல் மால் விழியானை நெஞ்சமே நினை—(கலைகள்) நிறைந்த சந்திரனும் சூரியனும் அக்கினியுமாகிய முச்சுடரையும் பெருமைபொருந்திய கண்களாகவுடைய சிவபெருமானை மனமே சிந்திக்கக்கடவாய். எ-று.

இரண்டாமடியில் மதியென்பது முன்னிலை யசைச்சொல். இறுதியடியில் ஆதவமுடைய சூரியனை ஆதவமென உபசரித்தார். ஆதவம் ஒளி. (கஎ)

நெஞ்சகங்கோடிமறமேபயின்றுநன்சீர்மையின்றி
வஞ்சகங்கோடிசெய்தாலும்பொறுத்தருள்வாயையனே
யஞ்சகங்கோடிரிந்தும்பர்குன்றாமலமுதுசெய்த
நஞ்சகங்கோடிவளைமுத்தமீன்முல்லைநாயகனே.

(இ-ள்.) நெஞ்சகம் கோடி—(என்னுடைய) மனம் கோணுதலுற்று,—மறமே பயின்று நல் சீர்மை இன்றி—பாபச்செய்கைகளிலே பழகி நன்மையாகிய குணம் இல்லாமல்,—கோடி வஞ்சகம் செய்தாலும் பொறுத்தருள்வாய்—அளவுகடந்த கபடத்தைச் செய்தாலும் சகித்தருளும்,—ஐயனே—பிதாவே,—கோள் திரிந்து அம் சகம் உம்பர் குன்றாமல் அமுதுசெய்த நஞ்ச—நவக்கிரகங்களும் பிறழ்ந்து அழகிய மண்ணுலகமும் விண்ணுலகமும் நிலைகுலையாவண்ணம் விடத்தையுண்டருளியவனே,—வளை சங்கு ஓடி முத்தம் ஈன் முல்லை நாயகனே—சங்குகள் வாய்புகளிலே ஓடி முத்துக்களை ஈன்றெடுக்கின்ற (கழனிகள் சூழப்பெற்ற) திருமுல்லைவாயிலுக்கு முதல்வனே. எ-று. (கஅ)

நாயகங்கைக்கிளைதாந்தெங்கங்காயுதின்னென்செயுந்
றூயகங்கைக்கிளைமீனமெல்லாமச்சுவைகொள்ளுமோ
தீயகங்கைக்கிளையார்சேர்கிலாமுல்லைத்தென்பதிசெக்
றாயகங்கைக்கிளையாற்பயன்கோடைத்தன்னையதே.

(இ-ள்.) நாய் அகம் கைக்கு இளைதாம் தெங்கங்காய் உதின் காய் என் செயும்—நாயினிடத்தே கைக்கு முதிராததாகிய தேங்காய் அகப்பட்டால் (அதனை அந்த) நாயானது யாது செய்யற்பாலது,—

தூய கங்கைக்கிளை மீனம் எல்லாம் அச்சுவை கொள்ளுமோ—சுத்தமாகிய கங்காஜலத்திலே வளர்கின்ற மீன்களெல்லாம் அந்த (நறுநீரின்) இரதத்தைக் கிருகிக்குமா,— தீ அகம் கைக்கு இளையார் சேர்கிலா முல்லைத் திண் பதி எந்தாய் - தீமையாகிய பாவவொழுக்கத்திற்குத் தளராதார் அடையப்பெறாத திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிராநின்ற வலிமையுடைய முதல்வரே என்னுடைய பிதாவே,—அகம் கைக்கிளையாற் பயன் கோடல் அத்தன்மையது-(தேவரீர் திருவருள் கைகூடாது) நான் ஒருதலைக்காமத்தாற் பிரயோசனத்தைப்பெறுதல் அவ்வியல்பிற்றாகும்(எ—று.) நாயகமென்பதற்குத் தலைமையுடையவரே என இலக்கணையாகப் பொருள் கூறினும் பொருந்தும்.

தன்னகராவதுதென்முல்லையே தன்பணிமணிகண்
மின்னகராவதுவைப்பெண் கொடியிடைவெள்விடைநஞ்
சன்னகராவதுசெற்றதுவாமன்பர் நால்வர்க்கறஞ்
சொன்னகராவதுலாவென வேத்துநந்தோன்றலுக்கே.

(இ-ள்.) தன் நகர் ஆவது தென் முல்லையே—தமது திருப்பதியாவது அழகையுடைய திருமுல்லைவாயிலே,— தன் பணி மின் நகு மணிகள் அரா-தம்முடைய ஆபரணங்களாவன மிக்க விளக்கமுள்ள மாணிக்கங்கள் (அமைந்த தலைகளையுடைய) பாம்புகளே,—வதுவைப் பெண் கொடியிடை - திருமணஞ்செய்யப்பெற்ற திருமணவாட்டி கொடியிடையம்மையே,—வெள் விடை நஞ்சு அன்னகரா அது செற்றதுவாம்-வெள்ளியஇடபமாவது விடம்போலும் (கொடிய) முதலையைக் கொன்றவிஷ்ணுவே,—அன்பர் நால்வர்க்கு அறம் சொன்ன கரா அதுலா என ஏத்தும் நம் தோன்றலுக்கு-சநகர் சநந்தனர் சநாதனர் சநற்குமாரர் ஆகிய நான்கு பக்தர்களுக்கும் சிவதன்மங்களை விளக்கிய (சின்முத்திரைபொருந்திய) திருக்கையை யுடையவரே ஒப்பில்லாதவரே என்று துதிக்கின்ற நம்முடையதலைவராகிய சிவபெருமானுக்கு (எ—று.) சிவபெருமானுக்கென்பதை முதலின் எடுத்துரைக்க. மூன்றாமடியில் அது பகுதிப்பொருள் விகுதி. (உ௰)

தோன்றற்கரியபொருளெளிதேவந்துதோன்றிநற
ஊன்றற்கரியகுழன்மாதொடு முல்லையுள்ளிருந்து
கூன்றற்கரியல்பறியா முடிபுண்மைகூறியென்னை
யேன்றற்கரியபனேனோ ரழுக்கறுத்தென்பயனே.

(இ-ள்.) தோன்றற்கு அரிய பொருள் எளிதே தோன்றி வந்து, வெளிப்படுதற்கு அருமையாகிய முதற்பொருள் (பெருங்கருணையினாலே திருவுருக்கொண்டு) எளிமையாக வெளிப்பட்டு (இப்பூமியின்கண்) வந்து,—நறவு ஊன்று அல் கரிய குழல்மாதொடு முல்லையுள் இருந்து - தேன்றங்கிய (பூக்களை அணிந்த) இருள்போலும் கரிய கூந்தலையுடைய உமாதேவி சமேதராகத் திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருந்து,--- கூன் தற்கர் அறியா முடிபு உண்மை இயல்புகூறி-குதர்க்கிகளால் உணரப்படாத (சிவாகமத்தின்) ஞானபாதச் சிறப்பிலக்கணத்தை விளக்கியருளி,--- என்னை என்றற்கு --- என்னை (ஒரு பொருட்படுத்தி) அங்கீகரித்தருளினமைக்கு,--- அரி அயன் ஏனோர் அழுக்கறுத்து என் பயன் --- விஷ்ணுவும் பிரமனும் மற்றை இந்திராதி தேவரும் பொருமைப்படுதலால் யாது பிரயோஜனமாகும் (எ---று.) (உக)

என்பதிகந்தனையேந்துங் குடங்கையிறைவனரு
ளென்பதிகந்தனைமுல்லையிற் சேர்ந்திலையிந்நுடக்கா
மென்பதிகந்தனையன்புவி பொன்பொருளென்றறிவ
தென்பதிகந்தனையைய சொல்லோபுகலேழைநெஞ்சே.

(இ-ள்.) என்பதி—எனக்குத் தலைவரும்,—கந்தனை ஏந்துங் குடங்கை இறைவன் அருள் என்பது இகந்தனை—(பிரம) கபாலத்தைத் தாங்குகின்ற அகங்கையையுடைய ஈசருமாகிய சிவபிரானது கருணையைப் பற்றிலை,—முல்லையிற் சேர்ந்திலை—(அன்றி அவர் எழுந்தருளியிருக்கும்) திருமுல்லைவாயிலை (க்காயத்தால்) அடைந்தாயில்லை; இந் நுடக்காம் என்பு அதிகம்—இந்த(அக)ப்பற்றாகிய உடம்பும் மிக்க கசமையாயிருக்கவும்,—தனையன் புவி பொன் பொருள் என்று அறிவது என்—(புறப்பற்றாகிய) புத்திரனும் பூமியும் திரவியமுமே பொருளென்ன (மதித்துக்) கெடுவது யாது,—ஐய சொல்லோ பதிகந்தனைப்புகல் ஏழை நெஞ்சே—ஐயையோ (இனியாதல் உய்யும்வண்ணம் என்னைத் தமிழ்வேதமாகிய தேவாரத்) திருப்பதிகங்களை (பலகால்மேனுமேவாக்கினாலே) ஓதக்கடவாய் பேதைமனமே—(எ—று.)

என்பு—ஆகுபெயர்; உம்மைத்தொகை. சொல் ஓ அசைகள். உடம்பும்மிக்கசமையென்பது "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கலுற்றார்க் குடம்பு மிகை" என்னுந் திருக்குறளானுமுணர்க.

சேவடிவானவரேத்தத்திசை முகன்றேர்செலுத்தச்
சேவடிவானரிதாங்கப் புரஞ்செற்றதென்முல்லையாய்
சேவடிவானரமேவுங் கயிலைச்சிலம்பினர
சேவடிவானறுந்தீந்தமிழ் பாடவுஞ்செய்தருளே.

(இ-ள்.) வானவர் சேவடி ஏத்த—தேவேந்திரன்முதலிய தேவர்கள் சிவந்த திருவடிகளைத் துதிசெய்யவும்,— திசைமுகன் தேர்செலுத்த—பிரமன் (பூமியாகிய) இரதத்தை நடாத்தவும்,— அரி சேவடிவான் தாங்க—விஷ்ணு இடபவடிவங்கொண்டு (திருமேனியைத்) தாங்கவும்; —புரம் செற்ற தென் முல்லையாய்—(பகைவருடைய) நகரங்கள் (மூன்றையும்) அழித்தருளிய அழகுபெற்ற திருமுல்லைவாயிலையுடையவரே;—சே அடி வான்ரம் மேவும்கயிலைச்சிலம்பின் அரசே-சேமரத்தின் அடியிலே குரங்குகள் நெருங்கும் திருக்கைலாசமலையின்கண் எழுந்தருளியிருக்கின்ற நாயகரே,—வடி வான் நறும் தீந் தமிழும் பாடச் செய்தருள்—தெளிவும் மேம்பாடும் அமைந்த நல்லமதுரமாகிய செந்தமிழ்ச் செய்யுள்களும்(ஏனைமுறுகியசெய்யுள்களும்) இயற்றும்படிசெய்தருளும்—(எ—று.)பாடவும் உம்மை எதிரதுதழீஇயது. முறுகிய செய்யுள்கள் சித்திரகவிமுதலியன. (உ௬)

அருளாதரித்திரந்தன்பு செய்வேங்கட்கமருலகோர் [ளா
பொருளாதரித்திரந்தானிற்குமோமுல்லைப்பொன்னையுள்
மருளாதரித்திரந்தேர்ந்தறியா ரம்மடவரையே
வெருளாதரித்திரந்தோ வினைகாளிங்குமேவரிதே.

(இ-ள்.) அருள் ஆதரித்து இரந்து அன்பு செய்வேங்கட்கு —கருணையைப் பாதுகாத்து யாஜித்துப் பத்திசெய்கின்ற எங்களுக்கு,—அமரர் உலகு ஓர் பொருளா—தேவருலகம் ஒரு பொருளாகுமா,—தரித்திரந்தான் நிற்குமோ—(இவ்விடத்து) நல்குரவானது நிலைபெறுமா,—முல்லைப் பொன்னை உள்ளா மருள் ஆதர் இத் திரம் தேர்ந்து அறியார்—திருமுல்லைவாயிலின் கண் எழுந்தருளியிருந்து (புத்திமுத்திகளைத் தந்தருளும் பரம்) பொருளைச் சிந்தியாத மயக்கத்தையுடைய மடவோர் இந்தத்துணிவைத் தெளிந்துணரார்,—(ஆதலால்) —அம் மடவரையே அந்தோ வினைகாள் வெருளாதுஅரித்திர்—அந்தஅறிவிலிகளையே ஐயோ கன்மத்தொகுதிகளே அஞ்சாமற் கெடுங்கள்,—இங்கு மேவு அரிது—இங்கே(எங்களிடத்தே) அடைதல்(உங்களுக்குப்)பொ

ருந்தாது—(எ—று.) அமரருலகு அமருலகுஎனக் கடைக்குறைந்துநி ன்றது. மேவுதல் மேவு என முதனிலைமாத்திரையாகநின்றது. (உ௰)

மேவருந்தென்றலுக்காற்றா தென்மான்வெம்பினைந்துந்
யேவருந்தென்றனக்கார்துணையாவரென்றேங்கியிந்த[னி
நோவருந்தென்றயனேன் விதித்தானென்றுநொந்தழுமா
பாவருந்தென்றமிழ்முல்லைப் பிரானருள்பாலிப்பையே[ல்

(இ-ள்.) என் மான் மேவரும் தென்றலுக்கு ஆற்றாது—என்னுடைய பெண்ணானவள் விரும்பத்தக்க தென்றற்காற்றுக்குச் சகிக்காமல்,—வெம்பி னைந்து தனியே வருந்து என்றனக்கு—வாடித் தளர்ந்து தனிமையாகத் துன்பப்படுகின்ற எனக்கு,—ஆர் துணை ஆவர் என்று ஏங்கி-யாவர் சகாயஞ்செய்வார் என்று இரங்கியும்,—இந்த நோவு அருந்து என்று அயன் ஏன் விதித்தான் என்று நொந்து அழும் ஆல்—இந்த நோயை அநுபவிப்பாயெனப் பிரமன் எதன்பொருட்டுப் படைத்தான் என்று வருந்தியும் அழுவாள்,—(ஆதலால்)—அரும் தென் தமிழ்ப்பா முல்லைப் பிரான் அருள் பாலிப்பை—அரிய செந்தமிழ்ப்பாடல்களையுடைய திருமுல்லைவாயிலையுடைத்தாகிய கடவுளே கருணைசெய்யும் (எ—று.) ஆல் அசை. [நற்றாயிரங்கல்] (உ௧)

பாலிவடகரைகோடியுமொன் றெனப்பார்ப்பவர்வாழ்
பாலிவடகரைமுல்லைப் பிரான்பழிதீரவருள்
பாலிவடகரைவேலெம ரென்னினைப்பாரெனுமைம்
பாலிவடகரையன்னையர் நேர்ந்தும்பசப்புறினே.

(இ-ள்.) இவ் அடகு பால் அரை கோடியும் ஒன்று எனப் பார்ப்பவர் வாழ்—இந்த இலைக்கறியும் பாலன்னமும் அரைப்பணமும் கோடிபொன்னும் ஒருசமமென்று நோக்கும் பெருந்துறவினோர்வசிக்கும், பாலி வடகரை முல்லைப் பிரான்—பாலி நதியின் வடகரையிலுள்ள திருமுல்லைவாயிலை யுடைய கடவுளே,—பழி தீர அருள்பாலி—(இப்) பழிமொழி ஒழியும்வண்ணம் கருணைசெய்யும்,—வடகு அரை வேல் எமர் என் நினைப்பார் எனும் ஐம்பால் இவள்—தோலை அரையிலுடைய வேலையேந்திய எங்கள் சுற்றத்தார் யாது கருதுவாரோ வென்று நினைக்கின்ற அளகத்தையுடைய இத்தலைவியானவள்,—அன்னையர் தகரை நேர்ந்தும் பசப்பு உறின்—தாய்மார் ஆட்டுக்கடாவை (முருகக்கடவுளுக்குப் பலிகொடுப்பதாகப்) பிரார்த்தித்தும்பசலைபூத்தலை

அடைவளானால்(எ—று.)என்னை செய்யலாம் ஆதலால் என்பது எஞ்சிநின்றது. ஒழியும் வண்ணம் கருணைசெய்யுமென்பதை இறுதியிற் கூறிக்கொள்க. முதலடியில் இவ்வடகு எனற்பாலது இவடகு என வகரமெய் விகாரத்தாற் றொக்கது. அடகாலாகிய கறியை அடகென்றும் பாலாலாகிய அன்னத்தைப் பாலென்றும் உபசரித்தார். மூன்றாமடியில் வடகமென்பது வடகு என ஈறுகெட்டது. [அலரறிவுறுத்திவரைவுகடாதல்] (உசு)

உறுமாசிலாமணிமாயையென்றேகொள்ளுயிர்க்கிவற்றைத்
தெறுமாசிலாமணிவள்ளல்வெற்பாவுனைத்தேடிக்கண்ணீ
ரறுமாசிலாமணிவைத்த மண்பாவையன்னேனெனுஞ்சீர்
பெறுமாசிலாமணிகேட்குமுன் சோருமிப்பேதையின்றே.

(இ-ள்.) மண் இ மாயையே ஆசு உறும் இலாம் என்றுகொள் உயிர்க்கு—(காரியமாகிய) பிருதிவிமுதலிய தத்துவங்களும் (காரணமாகிய) இந்தமாயையுமே குற்றம்பொருந்திய வீடாமென்றுகொள்ளுகின்ற (பரிபக்குவமுடைய) ஆன்மாக்களுக்கு,—இவற்றைத் தெறும் மாசிலாமணிவள்ளல் வெற்பா—காரியகாரணங்களாகிய இவைகளைக் கெடுத்தருள்கின்ற மாசிலாமணியீசருடைய மலையின்கண் இருக்கும் தலைவரே,—உனைத்தேடிக் கண்ணீர் அறுமா—உம்மைத் தேடி(க்கண்டு கண்(களினின்றும் வழிகின்ற)நீரானது ஒழியப்பெறுவாளா—சிலா மணிவைத்த மண்பாவை அன்னேன் எனும்-கல்லின்கண் அலங்கரித்து வைத்த மண்ணாலாகிய பிரதிமைபோலும் (பயனற்ற) யான் என்று சொல்லித் துக்கப்படுகின்ற,—சீர் பெறும் ஆ சில ஆம் மணி கேட்கும் முன் சோரும் இப்பேதை இன்று—மகிமைபெற்ற பசுக்களினது சிலவாகிய மணிகளின் ஓசை கேட்குமுன்பே தளர்கின்ற இத்தலைவியானவள் இற்றைநாளிலே (எ—று.) நீரானது ஒழியப்பெறுவாளாவென்பதை இறுதியிற் கூறிக்கொள்க. முதலடியில் மண் உபலக்கணம். இம்மாயை இமாயையென மகரவொற்றுத் தொக்கது. இல்லாமென்பது இலாமெனவும், மூன்றாமடியில் மண்ணியென்பது மணியெனவும், இடைக்குறைந்து நின்றன. இறுதியடியில் சிலவாமென்பது சிலாமென அகரம் தொக்கது. மணிஆகுபெயர். துக்கப்படுகின்ற தளர்கின்ற தலைவியென்க. [இரவுக்குறி நேரும்பாங்கி தலைவிபருவரலுரைத்தல்.] (உஎ)

இன்றகலங்கலவாதொழிந் தாலுமெடுத்தசிலைக் [ன்
குன்றகலங்கலநன்கொன்றையேனுங்கொடுத்தியன்றே

மன்றகலங்கலனே தூணிகட் புனல்வாரவிடா
நின்றகலங்கலர்காணுத முல்லைதிருமலனே.

(இ-ள்.) இன்று அகலம் கலவாது ஒழிந்தாலும் — இத்துறைநான் (எங்கள்) மார்பத்தை (நீர்) அணையாது விடினும்,—எடுத்துமேலைக் குன் று—மேருமலையைவில்லாகக் கைக்கொண்டவரே,—கலங்கலம்—(யா ங்கள்)மயங்கமாட்டோம்,—நன் கொன்றை எனும் கொடுத்தி—(நீ ங்கள்) அணிந்துள்ள) நல்லகொன்றைப் பூமாலையாயினும் தந்தருளும், —அ ன்றேல்—அங்ஙனம தந்தருளாவிடில்,— மன்ற-அம்பலத்தையுடை யவரே, கலம்கலனே தூணி கட்புனல் வாரவிடா நின்று அகலம் - கல னே தூணியோ(என்னும் அளவுபெறுவனவாம்)கண்ணீரை ஒழுகவிடக் கொண்டு (உமது சந்நிதியைவிட்டு)விலகமாட்டோம்,— கலர்காணாத முல்லைதிருமலனே—(புறச்சமயிகளாகிய கீழ்மக்களால் காணப்படாத திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற (அநாதி) மலத் த திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற (அநாதி) முத்த ரே (எ—று.) திருநாமங்களையடுக்கிமுதலின் உரைத்துக்கொள்க. (உ௰)

[மாலைவிருப்புரைத்தல்.]

நிருதியமனனலிந்திரனாதியர்நேர்ந்திறைஞ்சிக்
கருதியமனனார்ச்சிக்க நல்குங்கடிமுல்லைத்தலை
வருதியமனனல்காதி யுலாவரைவாழ்த்துவமினிப்
பருதியமனனயப் பேமலமலைப்பாழ்ங்குழிக்கே.

(இ-ள்.) நிருதி யமன் அனல் இந்திரன் ஆதியர் நேர்ந்து இறைஞ்சி—நிருதியும் இயமனும் அக்கினியும் தேவேந்திரன் முதலிய தேவரும் எதிர்ப்பட்டு வணங்கி—அர்ச்சிக்க,— மனன் கருதிய நல்கும் கடி முல்லைத் தலைவர் - (அர்ச்சித்த வானவர்கள் மனதில் எண்ணி யவைகளை (எண்ணியபடி அவருக்குக்) கொடுத்தருளுகின்ற காவலை யுடைய திருமுல்லைவாயிலுக்கு நாயகரும்,—உதியமனனன் ஆதி உலாவரை வாழ்த்துவம் - சேரமான் பெருமாணாயனார் (திருக்கைலா சமலையின்கண்) எதிர்த்த ஆதித்திரு வுலாவையுடையவருமான சிவபிரானைத் துதிக்கப்பெற்றோம்,—இப்பர் பயம் - (ஆதலால் இனி) இப்பூமியின்கண்ணே பிறக்கமாட்டோம்,—மலப் பாழ்ங்குழிக்கு மனல் நயப்பேம் அலம் - (அன்றியும்)வினையாயுடையபாழ்நரகத் திற் பொருந்துதலை விரும்பவுமாட்டோம் (எ—று.) மோக்ஷவீட்டு லகத்தையே அடைவோமென்பதுஎஞ்சிநின்றது. மூன்றாமடி நான்காமடிகளில் மன்னன் மன்னல் இடைக்குறை. முதலடியென்பதா ருபுமயக்கம். (உக)

மன்றகலங்கலனே தூணிகட் புனல்வாரவிடா
நின்றகலங்கலர்காணுத முல்லைதிருமலனே.

(இ-ள்.) இன்று அகலம் கலவாது ஒழிந்தாலும் — இப்பொழுதான் (எங்கள்) மார்பத்தை (நீர்) அணையாது விடினும், — எடுத்து மலைக் குன்று — மேருமலையை வில்லாகக் கைக்கொண்டவரே, — கலங்கலம் — (யாங்கள்) மயங்கமாட்டோம், — நன் கொன்றை எனும் தொடுத்தி — (நீர் அணிந்துள்ள) நல்லகொன்றைப் பூமாலையாயினும் தந்தருளும், — அன்றேல் — அங்ஙனம தந்தருளாவிடில், — மன்ற — அம்பலத்தையுடையவரே, கலங்கலனே தூணி கட்புனல் வாரவிடா நின்று அகலம் — கலனே தூணியோ (என்னும் அளவுபெறுமென்னும்) கண்ணீரை ஒழுக்கிக் கொண்டு (உமது சந்நிதியைவிட்டு) விலகமாட்டோம், — கலர்காணுத முல்லைதிருமலனே — (புறச்சமயிகளாகிய கீழ்மக்களால் உணரப்படாத திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற (அநாதி) முத்தரே (எ—று.) திருநாமங்களை அடுக்கிமுதலின் உரைத்துக்கொள்க. (கஎ)

[மாலைவிருப்புரைத்தல்.]

நிருதியமனனலிந்திரனாதியர்நேர்ந்திறைஞ்சிக்
கருதியமனனார்ச்சிக்க நல்குங்கடி முல்லைத்தலை
வருதியமனனல்காதியுலாவரைவாழ்த்துவமிப்
பருதியமனனயப் பேமலமலப்பாழ்ங்குழிக்கே.

(இ-ள்.) நிருதி யமன் அனல் இந்திரன் ஆதியர் நேர்ந்து இறைஞ்சி — நிருதியும் இயமனும் அக்கினியும் தேவேந்திரன் முதலிய தேவரும் எதிர்ப்பட்டு வணங்கி — அர்ச்சிக்க, — மனன் கருதிய நல்கும் கடி முல்லைத் தலைவர் - பூசித்தவர்களின் மனதில் எண்ணியவைகளை (எண்ணியபடி அவருக்குக்) கொடுத்தருளுகின்ற காவலையுடைய திருமுல்லைவாயிலுக்கு நாயகரும், — உதியமனன் நல்கு அ திருலாவரை வாழ்த்துவம் - சேரமான் பெருமாணாயனார் (திருக்கைலாயமலையின்கண்) ஏற்பித்த ஆதித்திருவுலாவையுடையவருமாகிய சிவபிரானைத் துதிக்கப்பெற்றோம், — இப் பருதி யம் - (ஆதலால் இனி) இப்பூமியின்கண்ணே பிறக்கமாட்டோம், — மலப் பாழ்ங்குழிக்கு மனல் நயப்பேம் அலம் - (அன்றிப்பசியையுடைய பாழ்நரகத்துக்குப் பொருந்துதலை விரும்பமாட்டோம் (எ—று.) மோக்ஷவீட்டுலகத்தையே அடைவோமென்பது எஞ்சிநின்றது. மூன்றாமடி நான்காமடிகளில் மன்னன் மன்னல் இடைக்குறை. குழிக்கென்பது உருபுமயக்கம். (கஅ)

பத்தர்களாகிய ஒருவருக்கத்தை யுடையவருமாகிய சிவபெருமான், முல்லை ஊரில் வந்து இ நாள் அறுத்தான்-திருமுல்லைவாயிலாகிய திருப்பதியின்கண் எழுந்தருளி இக்காலத்தே கெடுத்தருளினார் (எ—று) சிவபெருமான் பிறவியைக் கெடுத்தருளினாரெனக்கூட்டுக. இந்நாள் இநாளென நகரவொற்றுத் தொக்குநின்றது. (௩௧)

வந்தனையாற்றமவாக்கொண்டு தாளிணைவாழ்த்துமெய்த்த
வந்தனையாற்றமர்வார்க்கருள்வான் றருமையல்கொண்டு
வந்தனையாற்றமர்காணிலென்று மென்றனைவெதனைந்தை
வந்தனையாற்றமருண்டே னருண்முல்லைவான்பொருளே.

(இ-ள்.) இணைத்தாள் தமவாக் கொண்டு வந்தனையால் வாழ்த்தும்—இரண்டு திருவடிகளையும் தம்முடையனவாக(மனசின்கண்ணே)பற்றி (க்காயிக) வணக்கத்தோடு (வாக்கினாலே) புகழ்கின்ற,—மெய்த்தவந் தன் ஐ ஆற்று அமர்வார்க்கு அருள்வான் தரும் மையல் கொண்டு வந்தனை ஆல்—உண்மைத்தவத்தினது அழகிய நெறியிலே தங்குகின்ற தொண்டர்களுக்குக் கருணைசெய்வாராகிய சிவபெருமான்கொடுத்த மயக்கம்பூண்டு வந்தாய்,—தமர் காணில் என்றும் என்று எனை வைது வைது—(இதனை நம்முடைய) சுற்றத்தார் கண்டால்யாதாகுமென்று சொல்லி என்னைத் திட்டி (முதுகு) வைதுவந்து,—அனை ஆற்ற மருண்டேன்—மாதாவானவள் சாந்தஞ்செய்யவும்மயங்கினேன்-, முல்லை வான் பொருளே அருள்—(ஆதலால்) திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிராநின்ற பரம்பொருளே கருணைசெய்யும் (எ—று,) மூன்றாமடியில் ஆல் அசை. மெய்த்தவம் தன் ஐயாற்று அமர்வார்க்கு என்பதற்கு—உண்மைத்தவத்தைத் தமதுதிருவையாற்றில்வதிபவர்க்கெனப்பொருள் கூறினும் பொருந்தும். [சிவபெருமானைப் பவனியிற் கண்ணுற்று மால்கொண்டமாது சொல்லியது.] (௩௨)

பொருதவிசாகரஞ்சத்தியுங் கும்பனும்பொற்பழிக்க
விருதவிசாகரந்தானும் வருந்துமெய்யன்பருள்ள
மொருதவிசாகரந்தென்முல்லை யாவுடையாரருளா
ரிருதவிசாகர நெஞ்சே யல்லாற்செயலியாதுனக்கே.

(இ-ள்.) பொருத விசாகர் அம் சத்தியும் கும்பனும் பொற்பு அழிக்க—(சூரபன்மனோடு)பொருத முருகக்கடவுளுடைய அழகிய வேற்படையும் அகத்திய மகாமுனிவரும்(முறையே கலக்கியும் உண்டும்பொ)

லிவினைக் கெடுத்தமையால்,—விருது அவி சாகரந்தானும் வருத்தும்-வெற்றியழிந்த கடலும் அன்பப்படுத்தும்,—மெய் அன்பர் உள்ளம் ஒரு தவிசு (ஆ)—உண்மைநாயன்மாருடைய இருதயமானது ஒப்பற்ற ஆதனமாகவும்,—தென் முல்லை ஆகரம் ஆ உடையார் அருளார் —அழகையுடைய திருமுல்லைவாயிலானது எழுந்தருளியிருக்கும் தானமாகவுமுடைய சிவபெருமான் கருணைசெய்வாரு மல்லர்,—நெஞ்சே இரு தவி கர சா அல்லால் உனக்குயாதுசெயல்—(ஆதலால்) மனமே இருப்பாயாக (அல்லது) இளைப்பாயாக (அல்லது) ஒளிப்பாயாக (அல்லது) சாவாயாக (இங்ஙனம்) அன்றி உனக்கு என்னை தொழிலிருக்கின்றது (எ—று.) [தலைவி நெஞ்சொடு புலத்தல்]. (௩௩)

யாதவமாதவனாரணனா ரின்னுநாடியறி
யாதவமாதவடன்பால் வளரெழின்முல்லையினை
யாதவமாதவமன்றோ வென்னேரிரங்காதிருத்தல்
யாதவமாதவர்வெற்பா வறியவியம்புகவே,

(இ-ள்.) யாதவ மாதவன் ஆரணனார் இன்னும் நாடி அறியாதவ — யாதவ குலத்திற் பிறந்த விஷ்ணுவும் பிரமனுமாகிய இருவரும் இன்னமும் தேடிக் காணப்படாதவரே; — மாது அவள் தன்பால் வளர் எழில் முல்லையின் ஐயா - உமாதேவியாருடைய பாகத்தில் எழுந்தருளியிருக்கும் அழகையுடைய திருமுல்லைவாயிலுக்கு நாயகரே; — தவமா தவம் அன்றோ என் நேர் இரங்காது அவம் இருத்தல் யாது — (எளியேன் செய்தல்) தவமோ (அல்லது) அவமோ (அதனை நோக்காது பெருங்கருணையினாலே) அடியேன் முன்னே (எழுந்தருளித்) திருவருள்செய்யாது சும்மாவிருத்தல் என்னை, — மாதவர் வெற்பா - பெரியமேருமலையை வில்லாகவுடையவரே, — அறிய இயம்புக—தெளியும் வண்ணம் சொல்லியருளும்(எ—று.)அவள் பகுதிப் பொருள்விகுதி. திருநாமங்களை அடுக்கி யுரைக்க. (௩௪)

இயம்புகவேதனையா மந்திரப்பொருளென்றுசிறைக்
கயம்புகவேதனைவீழ்த்தோன் புகழ்முல்லைக்கண்ணிருவ
பயம்புகவேதனை நாடரிதாவளர்பண்ணவன்கா
லியம்புகவேதனையுற்றேற் கருண்மிகவைப்பதென்றே.

(இ-ள்.) வேத அனையாம் மந்திரப் பொருள் இயம்புக என்று, வேத மாதாவாகிய பிரணவப்பொருளைச் சொல்லக்கடவாயென்று (வினவியதற்குத் தடுமாறினமைபற்றி)—சிறைக்கயம் புக வேதனை வீழ்

த்தோன் புகழ் முல்லைக்கண்—காவற் கூடமாகிய அகழியினுள்ளே செல்லும்பொருட்டு நான்முகக்கடவுளை அமிழ்த்திய அறுமுகக்கடவுளாலே துதிக்கப்பெற்ற திருமுல்லைவாயிலின்கண்ணே,—இருவர் பயம் புகத் தனைநாட அரிதாவே வளர்பண்ணவன்—பிரமவிஷ்ணுக்கள் இருவரும் அச்சமுற்றுத் தம்மை ஆராய்ந்து காணுதற்கு அருமையாகவே ஓங்குகின்ற (முதற்) கடவுளே,—காவி அம்பு உக வேதனை உற்றேற்கு மிக அருள் வைப்பது என்று —(மன்மதனனவன்) கருங்குவளைமலராகிய பாணத்தைத் தொடுத்தல் பற்றி வருத்தமடைந்த என்பொருட்டு (நீர்) பெருங்கருணைசெய்தல் எந்நாளோ (எ—று.) யானறியேனென்பது எஞ்சிநின்றது. முதலடியில் வேதவனனவேதனையென அகரந்தொக்கியும், இடைக்குறைந்தும் நின்றன. இறுதியடியில் உருக்கவென்னும் பிறவினை உகவெனத்தன் வினைபோல நின்றது. [தலைவனீடத்தலைவி வருந்தல்.] (கூ0)

வைப்பதுமத்தகமீதோர் விழிமுல்லைமாநகர்வ
சிப்பதுமத்தகயத்துரி போர்ப்பதுதேவிசர
ணப்பதுமத்தகம்வைப்பார்க் கறுப்பதுநான்கிரண்டு
முப்பதுமத்தகவாளர்க் கென்றோமயன்மூண்டதுவே.

(இ-ள்.) மத்தகம்மீது வைப்பது ஓர் விழி—நெற்றியிலே தரிப்பது (அக்கினியாகிய) ஒருகண்ணே,— வசிப்பது மாமுல்லைநகர் —எழுந்தருளியிருப்பது பெரிய திருமுல்லைவாயிலென்னுந் திருப்பதியே,—போர்ப்பது மத்த கயத்து உரி— (திருமேனியிற் போர்த்துக்கொள்வது மதத்தையுடைய யானைத்தோலே,—தேவி சரணப் பதுமத்து அகம்வைப்பார்க்கு-(தம்முடைய அருட்சத்தியாகிய) உமாதேவியாரது பாதாரவிந்தங்களிலே சிந்தையைச் செலுத்தும் அடியவருக்கு, —அறுப்பது முப்பதும் நான்கு இரண்டும்—கெடுப்பது முப்பத்தாறு தத்துவங்களுமே,—அத்தகவாளர்க்கு மயல் மூண்டது என்றோ- அந்த மேம்பட்டகுணமுடைய சிவபிரான் பொருட்டு மோகம் மிகுத்தது என்னையோ (எ—று.)பெண்ணரசி சொல்லுவாயாக வென்பது எஞ்சிநின்றது. தத்துவங்கள் முப்பத்தாறுவன, ஆன்மதத்துவம் இருபத்துநான்கும், வித்தியாதத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்துமெனவிவை. [பாங்கி தலைவி குறிப்பறிதல்.] (கூக)

மூண்டவிக்காமன்றனைக் கம்பலர்மொழிநாணிரிவின்
னீண்டவிக்காமன்னவைத்தமை போர்நெடுங்காமடகந்

நீண்டவிக்காமன்வருத்தாதெமைக்கொக்கிழுன்மிடற்றி
றீண்டவிக்காமன்மிசைதடஞ்சூழ்முல்லைச்சிற்பரனே.

(இ-ள்.) மூண்ட இக் காமன்றனக்கு அம்பு அலர் மொழி நாண் அரி வில் நீண்ட இக்காம்—(போரின்) மூளுதலுற்ற இந்த மன்மதனுக்கு அம்பு மலரும் சொல்லுகின்ற நாணி வண்டும் வில்லு நெடியகரும்பும் ஆகும்,—அன்ன வைத்து அமை போர் நெடுங் காமம் அகத்து எமை வருத்தாது ஈண்டு அவிக்காம் மன்—அப்படிப்பட்ட கருவிகளைப் பொருத்தி நடாத்தும் போரால் மிக்க காமநோய் மனசிலே (தங்கி) எங்களைத் துன்பஞ்செய்யாமல் விரைவிலே கெடுக்கமாட்டோம் கெடுத்தால் உடனே கருணைக்கு இலக்காவோம்,—கொக்கு இழுன் மிடற்றில் நீண்ட விக்காமல் மிசை தடம் சூழ்—கொக்குகள் மீன்களைக் கழுத்திலே தண்டும்படி விக்கிக்கொள்ளாது விழுங்கப்பெற்ற வாவிகள் சூழ்ந்த,—முல்லைச் சிற்பரனே-திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற ஞானவடிவாகிய கடவுளே (எ—று.) மூன்றாமடியில் மன் ஒழியிசை. (௩௭)

பரம்பரன்பண்டரங்கன்முல்லைவாணனெண்பாற்குணமு
நிரம்பரன்பண்டரங்கன்றேட நீண்டநிமலனெண்டிக்
கோரம்பரன்பண்டரங்கண்டோதும் பத்திரவுத்தமயாழ்
நரம்பரன்பண்டரங்கஞ் சேரருட்கடலாந்தெய்வமே.

(இ-ள்.) பரம்பரன்—முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளும்,—பண்டரங்கன்-பாண்டரங்கமென்னுந் திருக் கூத்தையுடையவரும்,—முல்லை வாணன்—திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்றவரும்,—எண்பாற் குணமும் நிரம்பு அரன்—எண்வகைக் குணங்களு நிறைந்த அரனென்னுந் திருநாமத்தையுடையவரும்,—அரங்கன் பண்டு தேட நீண்ட நிமலன்—திருவரங்கஸ்தலத்தையுடைய திருமால் பண்டைக்காலத்தே தேடும்படி (அக்கினிப்பிழம்பாக) ஓங்கிய (அநாதி) மூர்த்தரும்,—எண் திக்கு ஓர் அம்பரன்-எட்டுத்திசைகளையும் ஒருவஸ்திரமாகக் கொண்டவரும்,—பண் தரம் கண்டு ஓதும் பத்திர நரம்பு உத்தம யாழர் அன்பு—பண்களின் முறைமையை நோக்கிப் பாடுகின்ற திரண்ட தந்திகள்பொருந்திய உத்தமமுள்ள யாழ்ப்பாணரது பத்தி(வலையிற்படுவோரும்),—அண்டர் அங்கம் சேர் அருட்கடல்—(பிற்காலத்துள்ள தேவர்கள் செருக்கடையாதபடி பண்டைத்)தேவர்களுடைய எலும்புகளையணிந்த கிருபாசமுத்திரமுமா

கிய சிவபெருமானே,—நம்தெய்வம்-நம்முடைய கடவுளாம்(எ—று) எண்வகைக் குணங்களாவன, அளவிலாற்ற லுடைமை, இயல்பாகவே பாசங்களினீங்குதல் இயற்கையுணர்வினனாதல், தன்வயத்தனாதல், முற்றுமுணர்தல், பேரருளுடைமை, தூயவுடம்பினனாதல், வரம் பிலின்பமுடைமை எனவிவை. (௧௮)

நந்தமருமந்தமெய்வாழ்வுமற்றைநலங்களுந்தி
கந்தமருமந்தவான்புகழ்சேர்முல்லைக்கண்ணிருந்த
பந்தமருமந்தமெல்விரல்பாகன்பகைவருரந்
சிந்தமருமந்தனைப்போலுஞ்சூலத்திருக்கரனே.

(இ-ள்.) நந்தம் அருமந்த மெய் வாழ்வும் மற்றை நலங்களும் - நம்முடைய அருமருந்தன்ன நித்தியமாகிய (முத்திச்) செல்வமும் ஏனை (இகபர) போகங்களும்,---திக் அந்தம் மரும் அந்த வான் புகழ் சேர் முல்லைக்கண் இருந்த - திசைகளினது முடிவிடத்தைச் (சென்று) பொருந்திய அந்த மேம்பட்ட கீர்த்திபெற்ற திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருந்த,--- பந்து அமரும் அந்தம் மெல் விரல் பாகன் - பந்து பொருந்திய அழகையுடைய மிருதுவாகிய விரல்களையுடைய கையையுடைய உமாதேவியாரைப் பாகத்திலுடையவரும், ---பகைவர் உரம் சிந்த மருமந்தனைப் போலும் சூலத் திருக்கரனே - பகைவருடைய வலிமை கெடும்பொருட்டு (அவர்கள்) மார்பத்தைப் பிளக்கின்ற முத்தலைப்படையை (ஏந்திய) திருக்கையை யுடையவருமாகிய சிவபிரானே (ஆவர்) (எ—று.)

இருந்த சிவபிரானே செல்வமும் போகங்களும் ஆவரெனக் கூட்டுக. இரண்டாமடியில் மருவுமெனற்பாலது மருமென நின்றது. மெல்விரல் அன்மொழித்தொகை. இறுதி ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது. (௧௯)

திருமுல்லைவாயின் மருவுமெந்தாயிளஞ்சேய்க்கழகு
தருமுலைவாயின்வைத்தாலன்றி யுண்ணுந்தகுதியுண்டே
வருமுலைவாயினற்பட்டமுந்தா தெமையாண்டமனை
மிருமுலைவாயின்மெழுகாயுருகச்செய்தேன்றுகொள்ளே.

(இ-ள்.) திருமுல்லைவாயில் மருவும் எந்தாய் - திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிராநின்ற என்னுடைய பிதாவே, --- இளஞ்சேய்க்கு அழகு தரும் முலை வாயின் வைத்தால் அன்றி உண்ணும் தகுதி

உண்டோ—இளமைப் பருவமுள்ள குழந்தையின்பொருட்டு (அன்னையானவள் இரங்கி) அழகுபொருந்திய தனத்தை (அக்குழந்தையினது) வாயில் வைத்தாலல்லது (பசிநீங்கும் பொருட்டுப் பாலைக்) குடிக்குந்தன்மை யுளதோ [ஒருநாளும் இல்லையென்றபடி] —,உலவு ஆய் அரும் இனற் பட்டு அழுந்தாது எமை ஆண்டு—(அதுபோலப் பிறவியின்கண்) அச்சமுடைத்தாய்ப் பெருந்துன்பக் கடலிலே அகப்பட்டு மூழ்காது (கருணை கூர்ந்து குருமூர்த்தியை அதிட்டித்து வலிதிலே) எங்களை அடிமை பூண்டு,—மனம் இரும் உலை வாய் இன் மெழுகு ஆய் உருகச்செய்து—மனசானது (கொல்லனது) பெரிய உலைமுகப்பட்ட இனிய மெழுகுபோலும் இளகச்செய்து,—ஏன்றுகொள்—(உமது திருவடிக்கீழ்த் தூங்கும்படி) அமைத் தருளும் (எ—று.) முதலடியில் முல்லை முலையென இடைக்குறைந்து நின்றது. (௪0)

கொள்ளுந்திகம்பரமுல்லைப்பிரான் பைங்குழவிநிலா
வெள்ளுந்திகம்பரவுஞ்சடையான்வெற்பினீர்ச்சுழியைத்
தள்ளுந்திகம்பரநேர்களங்கண்ணிதருநலத்திற்
குள்ளுந்திகம்பரமெல்லாமதிப்பினுமொப்பல்லவே.

(இ-ள்.) திக் அம்பரம் கொள்ளும் முல்லைப் பிரான்—திக்குகளை வஸ்திரமாகத் தரிக்கின்ற திருமுல்லைவாயிலையுடைய கடவுளும்,—பைங் குழவி நிலா வெள் உந்தி கம் பரவும் சடையான் வெற்பின்—மிக்க இளமையாகிய சந்திரனும் வெண்மையாகிய கங்காநதியும் (ஈகு) சிரமும் (தங்கிய) விரிந்த சடையை யுடையவருமாகிய சிவபிரானது மலையின்கண்ணே,—நீர்ச் சுழியைத் தள் உந்தி கம்பு அரம் நேர் களம் கண்ணிதரு நலத்திற்கு—நீரிலே (தோன்றிய) சுழியை (ச்சமமல்லவென்று) தள்ளுகின்ற நாபியையும் (முறையே) சங்கையும் அரத்தையும் போன்ற கழுத்தையும் கண்ணையுமுடைய தலைவி தரப்பெற்ற இன்பத்திற்கு,—உள்ளுந்து இகம் பரம் எல்லாம் மதிப்பினும் ஒப்பல்ல—(யாவரும்) மதிக்கத்தக்க பூவுலகத்தும் தேவுலகத்தும் (பொருந்திய இன்ப) முழுவதையும் (அளவுசெய்து) கருதினாலும் ஒரு சமமாகாது (எ—று.) ஆதலால் மனமே இதனைச் சிந்திப்பாயாக வென்பது எஞ்சி நின்றது. இறுதியடியில் உள்ளுமென்பது உள்ளுந்தென நின்றது எதுகைநோக்கி. [கலவியின் மகிழ்தல்] (௪க)

அல்லியந்தாமரையாளிடமோர்பொழுதவ்வளம்போய்
வல்லியந்தாமரையாளிடமாமதைவாழ்த்திடன்மின்
பல்லியந்தாமரையாமத்திலுங்கண்படாமுல்லையார்ப்
புல்லியந்தாமரையாசையின்வாழ்த்தும்புலவர்களே.

(இ-ள்.) அம் அல்லித் தாமரையாள் இடம்—பீரிளிடத்தாகிய அகவிதழ்களையுடைய செந்தாமரைப்பூவை ஆதனமாக வுடைய இலக்குமியிருக்கும் இடமாகிய நாடானது,—ஓர் பொழுது அவ் வளம் போய் வல்லியம் தாம் மனை ஆர் இடம் ஆம்—ஒருகாலத்தில் அந்தப் பொலிவு கெட்டுப் புலியும் தாவுகின்ற மனையும் ஆருகின்ற இடமாகியகாடாகும்,—அதைவாழ்த்திடன்மின்—(ஆதலால் அநித்தியமாகிய) அவ் (வுலகச்சிறு) வாழ்வைப்பற்றிப் புகழாதேயுங்கள்,—பல் இயந்தாம் அரை யாமத்திலும் கண்படா முல்லையார்ப் புல்லி—பலவித வாத்தியங்களானவை அர்த்தயாமத்திலும் உறங்குதலின்றி (முழங்குந்) திருமுல்லைவாயிலை யுடையானை அடுத்து,—அம் தாமரை ஆசையின் வாழ்த்தும் புலவர்களே—அழகிய சோதிவடிவாகிய (அச்) சிவபெருமானைச் சிரத்தையோடு (நித்தியமாகிய முத்திப் பெருவாழ்வைவேண்டிப்) புகழுங்கள் அறிஞர்களே (எ—று.) இரண்டாமடியில் தாவுமென்பது தாமெனநின்றது. முல்லை ஆர்ப் புல்லி அம் தாமரை என்பதற்கு திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிராநின்ற ஆத்திமலரினது புறவிதழாலாகிய அழகிய மாலையை யுடையவனை என்று பொருள் கூறினும் பொருந்தும். (௩௨)

புலத்தலைவாவினியாற்றேமென்றெய்துநர்புந்திவெந்திப்
புலத்தலைவாவினுங்கைகொடுப்பார்முல்லைப்பூவைவிடு
புலத்தலைவாவிநன்னீர்விளையாடிப்புணருதும்வா
புலத்தலைவாவிங்ஙனென்றருள்வாய்மலர்ப்பூங்கொடியே.

(இ-ள்.) புலத்து அலைவு ஆ இனி ஆற்றேம் என்று எய்துநர் புந்தி-அறிவின்கண்ணே சஞ்சலமுண்டாக (அப்பொழுதே) இனிப் பொறுக்க மாட்டோமென்று (அடைக்கலமாக) அடைகின்ற பத்தர்களது புத்தியானது,—வெந்திப் புலத்தலை வாவினும் கை கொடுப்பார் முல்லைப் பூவை-வெவ்விய தீய விடயக் (கடல்) விலே (வீழும்படி ஒருபோது) தாவினும் (அங்ஙனம் தாவவொட்டாது தடுத்தும்

கருணைக்) கையைத் தந்தருள்வாராகிய சிவபெருமானது திருமுல்லைவாயிலின்கண் இருக்குந் தலைவீ, — புலத்தலை விடு - ஊடுதலை ஒழி (ஒழிந்தபின் முதலிலே),— வாவி நல் நீர்ப் புணருதும் விளையாடி - தடாகத்திலுள்ள சுத்த ஜலத்திலே சேர்ந்து விளையாடுவோம், — தலைவா மலர்ப் பூங் கொடி வாய் இங்ஙன் புல் வா என்று அருள்— (பின்பு) தலைவரே மலர்களையுடைய பொலிவாகிய கொடிகள் செறிந்த இவ்விடத்தே தழுவும் வண்ணம் வருவீராக என்று (நீயே) சொல்லுவாயாக (எ - று.) எனத் தலைவன் கூறினனென்பது எஞ்சி நின்றது. இறுதியடியில் புல்லவென்பது புலவென இடைக் குறைந்தது. [இடம்பெற்றுத்தழால்.] (சங)

கொடியானையந்தநல்லூரனையாண்டநங்கோனைமதக்
கொடியானையந்தகனைச்சீறிமுல்லையுட்கோவைமுல்லைக்
கொடியானையந்தபவாண்டானையீண்டுறற்குக்கரைந்தாற்
கொடியானையந்தமுள்ளாய்க்கிடுவேன் கொளுமூன்பலியே.

(இ-ள்.) கொடி ஆனை அந்த நல்லூரனை ஆண்ட நம் கோனை- கொடியின்கண் இடபத்தையும் உயர்ச்சிபெற்ற திருநாவலூராகிய சுந்தரமூர்த்தி நாயனாரையும் ஆண்டருளிய நம்முடைய தலைவரும், —மதக் கொடியானை அந்தகனைச் சீறு - மன்மதனாகிய கொடியவனையும் இயமனையும் கோபித்த,— இ முல்லையுட் கோவை முல்லைக் கொடியான் ஐயம் தப ஆண்டானை-இத்திருமுல்லைவாயிலின்கண்ணே சோழராஜனை (அவனது யானையை) முல்லைக்கொடியினாலே (தடைபடச்செய்து பின்பு அச்) சந்தேகம் போம்படி (வெளிப்பட்டு) ஆண்டருளியவருமாகிய சிவபிரானை,— ஈண்டு உறற்குக் கொடி கரைந்தால் - இவ்விடத்தே எழுந்தருளும் நிமித்தமாகக் காகமே (நீ)அழைத்தால்,— ஐ அந்தம் உள்ளாய்க்குக் கொளும் ஊன் பலி யான் இடுவேன் - ஐந்தாகிய அழகிய குணங்களையுடைய உனக்குக் கொள்ளத்தக்க புலாலுணவை நான் எந்நாளும் வைத்துவருவேன்(எ-று.) முதலடியில் அந்த வென்னுஞ்சுட்டு உயர்ச்சியின்மேற்று. இம் முல்லை இ முல்லையென நின்றது. இறுதியடியில் அந்தம் ஆகுபெயர். குணங்கள் ஐந்தாவன மறைந்த புணர்ச்சித்தாதலும், கலங்காமையும், பொழுதிறவாதிடம் புகுதலும், நெடுகக்காண்டலும், மடியின்மையும். [கொடிக்குறிபார்த்தல்.] (சச)

ஊன்காளத்திக்குச்சுவையுளதோதிண்ணுடற்கறைக்கா
ஞன்காளத்திக்குத்தெளிவுளதோமுல்லைநாயகனெங்
கோன்காளத்திக்குத்தரனலம்யானறிகொள்கையல்லான்
மான்காளத்திக்குக்கியாராவர்போலுமற்றெங்கையரே.

(இ-ள்.) ஊன் காள் அத்திக்குச் சுவை உளதோ - புலால் கழிந்த எலும்புக்கு இரதமுண்டோ,— திண் உடல் கறை நான்கு கால் ஆள் அத்திக்குத் தெளிவு உளதோ - திண்ணிய உடம்பையும் உரல் போன்ற நான்கு பாதங்களையும் உடைத்தாகிய (மத) யானைக்குப் புத்திப்பிரகாச முண்டோ,— முல்லை நாயகன் எம் கோன் காளத்திக்குத் தான் நலம் — (ஆதலால்) திருமுல்லைவாயிலுக்கு நாயகரும் எங்கள் முதல்வருமாகிய சிவபெருமானுடைய திருக்காளத்திமலைக்குரிய தலைவர் (தரும்) இன்பத்தை,— யான் அறி கொள்கை அல்லால் - நானே உணர்ந்து (அநுபவிக்கும்) தகுதியல்லது,— மான் காள் அத்திக்குக்கு மற்று எங்கையர் யாராவர்போலும் - மான்போலுந் தோழியரே அம்மலையினது திசைக்குத்தான் என்றங்கைமார் யாராவர்போலும் (எ-று.) நீங்கள் சொல்லுங்களென்பது எஞ்சிநின்றது. முதலடியில் கால்காள்என லகரளகரங்கள் அபேதமென்னும் வழக்குப்பற்றி வந்தது. அஸ்திக்குச் சுவையின்மைபோலக், காமக்கிழத்தி காதற்பரத்தையராகிய எங்கையரிடத்தே இன்பமில்லை எனவும், யானைக்குத் தெளிவின்மைபோலத், தலைவர் இதனைத் தெளியாதிருந்தார் எனவும் உள்ளுறைகாண்க. மற்று அசை. [பரத்தையைப் பழித்தல்.] (சரு)

கைக்கவிகமகனைந்தழுங்கிக்கலங்காதருள்சேர்
கைக்கவிகமகவாதியிலாசைகருத்துள்ளுக
கைக்கவிகமகனுதியர்வாழ்முல்லைகாவலன்புன்
கைக்கவிகமகவுங்கொடுபாய்கழுக்குன்றனையே.

(இ-ள்.) அகம் இகம் கைக்க - மனமே இவ்வுலகத்துப் பொருட்சார்பில் அருவருப்படையக்கடவாய்,— நைந்து அழுங்கிக் கலங்காது அருள் சேர்கைக்கு— (பிறவியின்கண்) வருந்தி அழுது மயங்காது திருவருட்சத்தி பதியும்பொருட்டு,— மகவு ஆதியில் ஆசை அவிக - மக்கள் மனைவி முதலிய உயிர்ச்சார்பில் (வைத்த) ஆசையை ஒழியக்கடவாய்,— கருத்து உள்ளுக—(உன்னுடைய) எண்

னத்திற் (பிறழாது) சிந்தனைசெய்யக்கடவாய், —கைக்கவி கமகன் ஆதியர் வாழ் முல்லை காவலன் - நல்லொழுக்கமுடைய கவி கமக வாதி வாக்கியாகிய நால்வகைப் பண்டிதரும் வாழ்ப்பெற்ற திருமுல்லைவாயிலுக்கு நாயகரும், —புன் கைக்கவி மகவும் கொடு கம் பாய் கழுக்குன்றனை - சிறிய கைகளையுடைய மந்திகள் (தம்மைப்பற்றிய) குட்டிகளையும் (விடாது)கொண்டு ஆகாயத்திலே தாவுகின்ற திருக்கழுகுமலையை யுடையவருமாகிய சிவபெருமானது திருவுருவை (எ-று.) மனமே பதியும் பொருட்டு அருவருப்படையக் கடவாய் ஒழியக்கடவாய் திருவுருவைச் சிந்தனைசெய்யக்கடவாயெனக் கூட்டுக. முதலடியில் இகத்திலுள்ள பொருட்சார்பை இகமென்று உபசரித்தார். விடுதல் பற்றுதலாகிய இருவழியிலும் ஒருங்கு பயில வேண்டுமென்பது கருத்து. (௪௬)

குன்றத்தஞ்சாதிமலர்க்கூந்தன்மாதிடங்கொண்டிருந்த
னன்றத்தஞ்சாதிவழாமுல்லைவாணனடித்தனன்றென்
மன்றத்தஞ்சாதிநெஞ்சேநமக்கென்குறைவாழ்வுபெற்றேம்
பின்றத்தஞ்சாதிரிமாயாயென்றேவெற்றிபேசுவமே.

(இ-ள்.) அம் சாதி மலர்க் கூந்தற் குன்றத்து மாது இடம் கொண்டு இருந்தனன் - அழகிய தேன்பொருந்திய பூக்களை (அணிந்த) அளகத்தையுடைய பார்ப்பதிதேவியாரை வாமபாகத்தில் வைத்துள்ளவராய், — தத்தம் சாதி வழா முல்லை வாணன் — (மாநுடர்) தங்கள் தங்கள் வருண (நெறி)யில் வழுவாமைக்கிடமாகிய திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற சிவபிரான், —தென் மன்றத்து நடித்தனன்-(யாவரும் எளிதிலே தரிசித்து உய்யும்பொருட்டு) அழகிய (கனக) சபையிலே திருநிருத்தஞ் செய்தருளினார், — நெஞ்சே அஞ்சாதி நமக்கு என்குறை வாழ்வுபெற்றேம்-(ஆதலால்) மனமே பயப்படாதே நமக்கு யாது குறையுளது (திருவடியைத் தரிசித்துப் பேரின்ப) வாழ்வை அடைந்தோம், — திரி மாயாய் பின் தத்தம் சா என்றே வெற்றிபேசுவம்-(உணர்வை) மாறுபடுத்துகின்ற மாயையே (உனக்குப்) பிற்பட்டு ஓடமாட்டோம் (நீ) கெடுவாயாக என்றே (இனி) வெற்றி கூறுவோம் (எ—று.) (௪௭)

பேசித்திருந்தநம்முல்லையில்வந்தெமைப்பேணித்தொண்டர்
பூசித்திருந்தம்வினைதீர்த்துமென்றருள்பொற்பர்வெற்பி

னேசித்திருந்தண்புனலீர்க்கும்போதூற்றுநேர்ந்தெடுத்தா
ராசித்திருந்தபடிபோலொருவரஞ்சாதியென்றே.

(இ-ள்.) தொண்டீர் நம் முல்லையில் வந்து எமைத் திருந்தப் பேணிப் பேசிப் பூசித்திர்-பத்தர்களே (நீங்கள்) நமது திருமுல்லை வாயிலின்கண் வந்து நம்மைத் தெளிவுபட (மனசினாலே) தியானித்து (வாக்கினாலே) துதித்து (க்கைகளினாலே) அருச்சனை செய்வீராக,—உந்தம் வினை தீர்த்தும் என்று அருள் பொற்பர் வெற்பில்-உங்களுடைய கர்மங்களை ஒழிப்போமென்று திருவாய்மலர்ந்தருளுகின்ற அழகினை யுடையாராகிய சிவபெருமானது மலையின்கண்ணே,—இரும் தண்புனல் ஈர்க்கும்போது நேர்ந்து உற்று நேசித்து-மிகுந்த குளிர்மையுடைய (சுனை) நீர் இழுக்கும்பொழுது எதிர்ப்பட்டுவந்து ஆசைகொண்டு,—ஒருவர் அஞ்சாதி என்று ஆசித்து இருந்தபடிபோல் எடுத்தார் - ஒருதலைவர் அஞ்சாதேயென்று சொல்லி ஆச்சரியம் (தமக்குச்) சித்திருந்தாற்போல (அச்சுனையில் அமிழாவண்ணம் என்னைக்) கரையேற்றினார் (எ—று.) என்னை பெண்ணே கூறுவாயாக வென்பது எஞ்சிநின்றது. [புனறருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்]()

சாதிப்பரியதவத்தார்க்குமுல்லைத்தலத்தினுண்மை
போதிப்பரியனலம்பாடுதும்புல்லறிவுபரம்
பாதிப்பரியமனைதோறும்வண்டுபகர்ந்ததுமுன்
காதிப்பரியகளிற்றுரிபோர்த்ததுங்கட்டுரைத்தே.

(இ-ள்.) சாதிப்பு அரிய தவத்தார்க்கு-(பிறராலே) சாதித்தற்கரிய தவத்தையுடைய முனிவர்களுக்கு,—முல்லைத்தலத்தின் உண்மை போதிப்பர் இயல் நலம் பாடுதும் - திருமுல்லைவாயிலாகிய திருப்பதியில் எழுந்தருளியிருந்து மெய் (ப்பொருளை) விளக்கியருள்வாராகிய சிவபிரான் (பெத்த முத்தியிரண்டிலும் உயிர்களுக்குச்) செய்து (வரும்) உபகாரத்தை (எடுத்துத்) துதிக்கப்பெற்றோம்,—புல்லறிவு பரம்பாது-விடயவுணர்வுமேலிடாவண்ணம்,—இயம் இப்பர் மனைதோறும் முன் வண்டு பகர்ந்ததும் - வாத்தியங்கள் (முழங்குகின்ற) செட்டிப்பெண்களுடைய வீடுகள்தோறும் (போய்) முன்பு வளையல் விலைப்படுத்திய எளிமையும்,—காது இப் பரிய களிற்று உரிபோர்த்ததும் கட்டுரைத்து-(தோட்டியினாலே) தாக்கப்பெற்ற இந்தப் பெரிய யானைத் தோலை (உரித்து)ப் போர்த்துக்கொண்ட வலிமையும் உறுதியாகச்சொ

ல்லி (எ—று.) விடயவுணர்வுமேலிடாவண்ணம் உறுதியாகச் சொல்லித் துதிக்கப்பெற்றோமெனக்கூட்டுக. (௪௯)

கட்டோம்புதலெனக்காமாதியாறுங்கரிசறுத்தோ
முட்டோம்புதவுதிறந்தின்பவீடுபுக்குச்சரித்தோஞ்
சிட்டோம்புதல்விமண்ணோருந்திகஞ்சந்தெளிவின்முன்பின்
விட்டோம்புதலுறுநள்ளெழுத்தான்முல்லைமேவப்பெற்றே.

(இ-ள்.) புதல் எனக் காமாதி கரிசு ஆறும் கட்டோம் அறுத்தோம் - சிறுதூர்களைப்போலக் காமமுதலிய (புறக்) குற்றமாகிய சடூர்மிகளையும் களைந்து ஒழித்தோம்,— உள் தோம் புதவு திறந்து இன்ப வீடு புக்குச் சிட்டோம் உச்சரித்தோம் - அகக்குற்றமாகிய (ஆணவமலக்) கதவினைத் திறந்து ஆனந்தமயமாகிய வீட்டின்கண்ணே புகுந்து (அந்த) ஞானார்த்தத்தையுடைய பிரணவத்தை (மானசிகமாக) ஓதினோம்,—புதல்வி மண் ஓர் உந்தி கஞ்சம் தெளிவின் முன் பின் விட்டு - குமாரி காசினி ஒப்பற்ற பாலாறு தாமரை துணிவு என்னும் நாமங்களிலே முதலினும் இறுதியினும் உள்ள எழுத்துக்களை ஒழித்து,— ஓம்புதல் உறும்நள் எழுத்தான் முல்லை மேவப்பெற்று— (பத்தர்களாற்) பாதுகாக்கப்படும் இடையினுள்ள எழுத்துக்களாலாகிய மாசிலாமணியீசரது திருமுல்லைவாயிலை அடைந்து (எ-று.) திருமுல்லைவாயிலை அடைந்தென்பதை முதலிற்கூறிக்கொள்க. கட்டோம் முற்றெச்சம். காமமுதலிய சடூர்மிகளாவன காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் எனவிவை. சித்தோம் சிட்டோமென நின்றது. சிட்டோமெனவேகொண்டு (மந்திரங்களின் ஆதாரமாய்) மேம்பட்ட (அந்தப்பொருளைத்தரும்) பிரணவமெனினும் அமையும். (௫௦)

பெற்றவரம்பலவுங்குன்றயான்பிணைபோல்வெருள
வுற்றவரம்பலங்கோதவென்பேதையொருதனியே
முற்றவரம்பலசெய்தகன்றாளென்னைமுல்லைப்பிரான்
கற்றவரம்பலவற்பணியாரிற்கடுஞ்சுரமே.

(இ-ள்.) யான் பெற்ற பல வரமும் குன்றப்பிணைபோல்வெருள —நான் அடைந்த பல மேன்மைகளும் கெட்டொழியவும் மான்போல அச்சமுறவும்,—அங்கு உற்றவர் அம்பல் ஓத - அவ்வூரிலுள்ளார் பழிமொழி கூறவும்,— என் ஒரு பேதை தனியே முற்றவரம்பு

அல செய்து அகன்றாள் - என்னுடைய ஒப்பற்ற பெண்ணானவள் (துணையின்றி) ஏகமாக முழுவதும் முறையல்லாதவைகளைச் செய்து போயினாள்,—என்னை-(இச்செய்கை இருந்தபடி) என்னை,—முல்லைப் பிரான் கல் தவர் அம்பலவற் பணியாரின் கடுஞ் சுரமே - திருமுல்லை வாயிலுக்கு முதல்வரும் மேருமலையை வில்லாகக்கொண்ட கனகச பையை யுடையவருமாகிய சிவபிரானை வழிபடாதாரைப்போலும் கொடிய பாலைநிலத்திலே(எ-று.) ஒழியவும் அச்சமுறவும் கூறவும்பெண் நிலத்திலே போயினாள் என்னையெனக்கூட்டுக. [நற்றாயிரங்கல்.]

கடுத்தியம்பாம்பன்மலரானையாதுகவலைநெஞ்சே
விடுத்தியம்பாம்பனல்வாயாற்புகழ்ந்தின்றுமேவுதுமுட்
படுத்தியம்பாம்பனுரிபிறைமான்வெம்பரசொடுந்து
வடுத்தியம்பாம்பணிமுல்லையுளம்பலவாணனையே.

(இ-ள்.) நெஞ்சே - மனமே,—அம்பாம் பல் மலரால் நையாது கடுத்தி—(மன்மதனாலே தொடுக்கப்படும்) பாணங்களாகிய பலவகைப்பட்ட புஷ்பங்களால் வருந்தாமல் (அவற்றைச்) சினந்தொழிப்பாய்,—கவலை விடுத்து ஆம்பல் இயம்பு நல்வாயாற் புகழ்ந்து உட்படுத்தி இன்று மேவுதும்—(பின்பு) சஞ்சலத்தைப் போக்கி அல்லிமலர்போலும் சொல்லத்தக்க சுத்தமாகிய வாக்கினாலே துதித்துக் கருத்தின் அமைத்து இற்றைநாள் (நாங்கள்) அடைவோம்,— அம்பு பிறை ஆம்பல் உரி மான் வெம் பரசொடும்— (திருமுடியிலே) கங்கைநீரும் இளஞ்சந்திரனும் (திருமேனியிலே) யானைத்தோலும் (திருக்கைகளிலே) மானும் வெவ்விய மழுப்படையும் ஆகிய இவைகளோடு,—துவள் துத்தி அம் பாம்பு அணி முல்லையுள் அம்பலவாணனையே- அசைகின்ற படப்பொறிகளையுடைய அழகிய பாம்புகளை (அவயவங்கள் முழுவதினும்) அணிந்துதிருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிராநின்ற அம்பலவாணரையே(எ-று.) மனமே ஒழிப்பாய் பின்பு அம்பலவாணரையே அடைவோமெனக்கூட்டுக. மானுடப்பதரையும், ஏனைச் சிறுதெய்வங்களையும், புகழ்ந்தறியாத, சுத்தவாக்கினாலென்பார், நல்வாயாலென்றார். இறுதி ஏகாரம் தேற்றம். (௫௨)

அம்பலவாணன்மடவார்விழியென்றழிந்துழலு
மம்பலவாணங்கனையவியாகியமார்ந்தருளு
மம்பலவாணன்றிருமுல்லைவாயிலழகன்றில்லை
யம்பலவாணன்வழியினில்லா வென்னறிவுகளே.

(இ-ள்.) நல் மடவார் விழி அம்பு அல வாள் என்று அழிந்து உழலும் அம்பல - அழகிய பெண்களுடைய கண்கள் பாணங்களாகும் அல்லது வாட்படைகளாகும் என்று (புதிது புதிதாகப்) புகழ்ந்து உருகி (வீணுகப் பிறவியிலே) சுழலும், (அதனுற்) பழிமொழிகளையுடையன (அன்றி),—ஆண் அங்கனை அல் ஆகி அமர்ந்தருளும் ஆனன்-ஒருவன் ஒருத்தி ஒன்றென்று (சுட்டப்பட்ட) பிரபஞ்சமெல்லாமாய் (அல்லவாய்)எழுந்தருளியிருக்கின்ற அன்புருவானவரும்,—பலஅந்திருமுல்லைவாயில் அழகன்- பலவகை அழகுபெற்ற திருமுல்லைவாயிலையுடையஅழகரும்,—தில்லை அம்பலவாணன் வழியில் நில்லா-தில்லைப் பதியினிடத்ததாகிய(கனக)சபையை யுடையவருமாகிய சிவபெருமான்அருளிய வீட்டு நெறியிலே நிலைபெறுவன வல்ல,—என் அறிவுகள்-என்னுடைய உணர்வுகளானவை (எ-று.) செல்லும்வழி பலவாதல் பற்றி அறிவுகளெனப்பன்மைப் பாலாற் கூறினுர். சிற்றின்பத்திற்குக் காரணமாகிய பெண்களைத் துறந்து, பேரின்பத்திற்குக் காரணமாகிய வீட்டு நெறியைக் கேட்டுச், சிந்தித்துத், தெளிந்து, நிட்டைகூடிச், சிவபிரான் திருவடிவியாபகத்துள், வியாப்பியமாய் நிற்க வேண்டுமென்பது கருத்து. (௩௩)

அறிவறியாகமெதுவதுவாகமல்லாதவென்றுங்
குறிவறியாகடிமுல்லையிற்சேர்புழுக்கூட்டைவிண்டு
தறிவறியாகஞ்செயன்பாலெனையர்ச்சனைசெயுன்பாற்
செறிவறியாகந்தருவலென்றுண்டனன்சின்மயனே.

(இ-ள்.) அறிவு அறி ஆகம் எது அது ஆகம் அல்லாத என்றும் குறி-(தத்துவ) உணர்வை ஆராய்தற்கு (க்கருவியாகக்கிடைத்த) உடம்பு எதுவோ அதுவே உடம்பாகும் மற்றையுடம்பு ஏதாகும் [பயனில்லாததே என்றபடி] (இதனை) மதிப்பாயாக (மதித்து),—வறியா கடி முல்லையிற் சேர் - நுண்ணறிவில்லாதவறியனே காவலுள்ள (நம்முடைய) திருமுல்லைவாயிலை அடைவாயாக (அடைந்து),—புழுக்கூட்டை விண்டு உதறு இவறி யாகம் செய் அன்பால் எனைஅர்ச்சனை செய்-கிருமிகள்பொருந்திய (உனது) உடம்பில் வைத்த ஆசையைவிட்டொழி (ஒழித்து நமது திருவடிகளிலே) இச்சைவைத்து (ஜெப ஓம) வேள்விகளைச்செய் (செய்து மந்திரக்கிரியா பாவனைகளிலே குறைவின்றி அகத்தும் புறத்தும்) பத்திமையோடு நம்மைப் பூ

ஜைசெய்வாயாக (இங்ஙனம்விரத்தியும் பிரத்தையுங் கொண்டு முறையே சரியை கிரியாயோகங்களைச் செய்தால்),—உன்பாற் செறிவல் தியாகம்தருவல் என்று சின்மயன் ஆண்டனன்-(அவைகளாலே சுத்தம்பொருந்திய) உன்னிடத்தே (இரண்டறக்) கலப்போம் (கலந்து நிரதிசயவின்பப் பெருவாழ்வாகிய) கொடையைக் கொடுப்போமென்று திருவாய்மலர்ந்து ஞானமூர்த்தியாகிய சிவபிரானவர் (நாயினேனை) அடிமைபூண்டருளினர் (எ-று.) (௰௪)

மயங்காதுவரையும்பொய்ப்பொருளியாவும்வரையச்செய்ய
பயங்காதுவரையுண்மால்போற்றுமுல்லைநம்பாவிழிப்பங்
கயங்காதுவரையுநீள்சீர்க்கொடியிடைகாதலசூர்
சயங்காதுவரையுமைங்கரனையுந்தந்தவனே.

(இ-ள்.) வரையும் பொய்ப் பொருள் யாவும் மயங்காது வரையச் செய்ய அபயம்-ஒழிக்கத்தக்க அநித்தியமாகிய செல்வங்கள் எல்லாவற்றினும் மயங்காமல் (ஆசை) ஒழியும்படி செய்து (அடியேனைக்) காத்தருளும் (உமக்கு) அடைக்கலம்,— துவரையுள் மால்போற்றும் முல்லை நம்பா-துவாரகாபுரியிலுள்ள விஷ்ணுவினால் வழிபடப்பெற்ற திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற நம்பனென்னுந் திருநாமத்தையுடையவரே,—விழிப் பங்கயம் காது வரையும் நீள் சீர்க் கொடியிடை காதல-கண்களாகிய தாமரைமலர்கள் செவியளவும் நீண்ட அழகிய கொடியிடை யம்மைக்கு நாயகரே,— சூர் காது சயம் உவரையும் ஐங்கரனையும் தந்தவனே - சூரபன்மனைக் கொன்று வெற்றிகொண்ட உந்த இளையபிள்ளையாரையும் ஐந்துதிருக்கைகளையுடைய மூத்தபிள்ளையாரையும் பெற்றருளியவரே (எ-று.) செய்-முற்றெச்சம். (௰௫)

தவத்துக்கணிகலனட்டோனென்றுணரிற்றவறுமவை
பவத்துக்கணிகலனெஞ்சேயிவைவிடப்பார்வடிவ
நவத்துக்கணிகலன்மாவாக்குமுல்லையினாரியா
யவத்துக்கணிகலந்தோர்பான்மருவுமெம்மண்ணலையே.

(இ-ள்.) தவத்துக் கண் இகலன் நட்டோன் என்று ணரிற் தவறும் - தவஞ்செய்தற்கண் (இவன்) பகைவன் (இவன்) நண்பன் எனப் பகுத்து உணரில் (அத்தவம்) அவமாம்,—நெஞ்சே அவை பவத்துக்கு அணிகலன் இவை விடப் பார் - மனமே அப் பகுப்புகள்

பிறவிக்கு ஆபரணமாம் (ஆதலால்) இப்பகுப்புகள் ஒழியும்படி சிந்திக்கக்கடவாய்,—நவ வடிவத்துக்கண் - உருவம்நான்கும் அருவம் நான்கும் உபயம் ஒன்றுமாகிய நவவடிவத்தை யுடைய கண்போல்பவரும்;—இகலன் மா ஆக்கும் முல்லையினன்-நரிகளைப் பரிகளாகச் செய்தருளிய திருமுல்லைவாயிலையுடையவரும்,—அரி ஆய வத்துக்கு அணி கலந்து ஓர்பால் மருவும் எம் அண்ணலை - திருமாலாகியபொருளுக்கு (மண) மாலை சூட்டி ஒருபுறத்தே பொருந்தச்செய்த எங்கள் கடவுளுமாகிய சிவபிரானை (எ-று.) மனமே ஒழியும்படி சிவபிரானைச் சிந்திக்கக்கடவாயெனக் கூட்டுக. தவஞ்செய்தலைத் தவமென உபசரித்தார். பிறவிக்கு ஆபரணமாவது பிறவியை வளர்த்தல். தார்க்கிகர்மதம்பற்றி அரியாயவத்துவென்றார். மருவிக்குமென்னும் பிறவினை மருவுமெனவிவ்விகுதி விகாரத்தாற் றொக்கது. (௩௪)

அண்ணலந்தோயமனைவீட்டிமுல்லையிலார்ந்ததுவு
மெண்ணலந்தோயமுடித்ததுமற்றெம்மிறைவியைப்போ
லுண்ணலந்தோயவிழைந்திரந்தேங்கியுளைந்துநந்தம்
பெண்ணலந்தோயவெளிவந்தருளுமெய்ப்பேறன்றியே.

(இ-ள்.) அண்ணல் யமனை வீட்டி அந்தோ முல்லையில் ஆர்ந்ததுவும்-பெருமையிற் சிறந்தவராகியசிவபிரானே (நீர்) இயமனைக் கொன்று ஐயோ திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருந்ததும்,—தோயம் முடித்ததும் எண்ணலம்-கங்கை (யின்செருக்கை அடக்கித் திருமுடியிலே) தரித்ததும் (ஆகிய வெற்றிகளை) நினைக்கமாட்டோம்,—மற்று எம் இறைவியைப்போல் நலம் தோய உள் விழைந்து-எங்கள் பிராட்டியாராகிய உமாதேவியாரைப்போலும் (உம்மைக்கலந்து) சுகத்தை அநுபவிக்கும்பொருட்டு மனசிலே விரும்பி,—நந்தம் பெண் இரந்து ஏங்கி உளைந்து அலந்து ஓய - எங்களுடையபெண் (உமது தரிசனத்தை) வேண்டிப் பயந்து வருந்தித் துன்பமுற்றுத் தளரும் பொழுதிலே,— எளி வந்து அருளும் மெய்ப்பேறு அன்றி-(நீர்) எளிதாக (ப்பவனி) வந்து கருணைசெய்யும் உண்மைப் பயனையல்லது (எ—று.) உண்மைப்பயனையல்லது வெற்றிகளை நினைக்கமாட்டோமெனக் கூட்டுக. மற்றுஅசை. [நற்றாயிரங்கல்] (௩௫)

அன்றினங்காதரமாய்நின்றுகத்துமலைகடலெம்
முன்றினங்காதரவத்துக்களவிலைமூரிமதன்

கன்றினங்காதரவாருளரோவிருகண்ணுந்துஞ்சா
வின்றினங்காதரமாமுல்லைவாணமற்றெங்களையே.

(இ-ள்) அன்றில் நம் காதரமாய் நின்று கத்தும் - அன்றில் நமக்குத் துன்பந்தருவதாய் (க் கொம்பிலே) இருந்து கூவும்,— அலை கடல் எம் முன் தினம் காது அரவத்துக்கு அளவு இலை - திரையை யுடைய சமுத்திரம் எங்கள் முன்னே நாடோறும் மோதுகின்ற முழக்கத்திற்கோ முடிவு சொல்லக்கூடாது,— மூரி மதன் கன்றின் அங்கு ஆதரவு ஆர் உளர் ஓ - (இச்சமயத்திலே) வலிமையுடைய மன்மதன் கோபித்தால் அவ்விடத்தே பற்றுக்கோடாக (ஆற்றுவிப்பார்) யாவர் உள்ளார். [ஒருவருமில்லை யென்றபடி] ,— இரு கண்ணும் துஞ்சா இனம்— (இவ்வாறாகிய கவலைகள்பற்றி) இரண்டு கண்களும் நித்திரைசெய்யமாட்டா இன்னமும்,— தரம் மா முல்லைவாண மற்று எங்களை இன்று கா— (ஆதலால் திருவடியார்) திருக்கூட்டமுள்ள பெரிய திருமுல்லை வாயிலின் கண் எழுந்தருளி யிருக்கின்ற மாசிலாமணியீசரே எங்களை இப்பொழுதே (அங்கீகரித்துக்) காத்தருளும் (எ-று.) ஓ மற்று அசைகள். [பவனிபோந்த மாசிலாமணியீசரை நோக்கி மையலுற்ற மகளிர் சொல்லியது. (௫௮)

களைகண்டனம்புயமாமுல்லைக்கோன்வெற்பகாதன்மிக்க
கிளைகண்டனம்புயன்மேவுந்தடவரைக்கீழொருசார் [பங்
விளைகண்டனம்புயங்கஞ்சேல்வல்வேய்சொன்னடைநிதம்
திளைகண்டனம்புயமாக்கொண்டுநிற்குமோர்தீங்கரும்பே.

(இ-ள்.) களை கண்டன் அம்புயம் மாமுல்லைக் கோன்வெற்ப— (துன்பத்தை) விலக்கிய (கரிய) கழுத்தையுடையாரும் (செந்) தாமரைமலரில் இருக்கும் இலக்குமி (தங்கப்பெற்ற) திருமுல்லைவாயிலுக்கு முதல்வருமாகிய சிவபிரானது மலையையுடைய தலைவரே,— காதல் மிக்க கிளை கண்டனம் - அன்பு மிகுந்த (பெண்கள்) கூட்டத்திலே (நாங்கள்) கண்டோம்,—புயல் மேவும் தடவரைக் கீழ் ஒரு சார் - மேகங்கள் அமைந்த பெரிய மலைச்சாரலின் ஒருபுறத்தே,— விளை கண்டு அனம் புயங்கம் சேல் வல் வேய்—(கருப்பஞ்சாற்றிலே உண்டாகிய கற்கண்டையும் அன்னநடையையும் பாம்பின்படத்தையும் மீனையும் சூதாடுகருவியையும் மூங்கிலையும்,—சொல் நடை நிதம்பம் திளை கண் தனம் புயம் ஆக் கொண்டு நிற்கும் ஓர் தீங்கரும்பு- (முறையே) சொல்லும் நடையும் அல்குலும் (அழகு) நிறைந்த கண்

ணும் கொங்கையும் தோளுமாகப் பெற்றுநிற்கின்ற ஒப்பற்ற இனிய கரும்புபோலும் தலைவியை (எ-று.) தலைவரே ஒருபுறத்தே பெண்கள் கூட்டத்திலே தலைவியைக் கண்டோமெனக் கூட்டுக. களைகண்டன் என்பதற்கு அழகிய (நீல) கண்டரெனப் பொருள்கூறினும் பொருந்தும். அன்னமும் புயங்கமும் ஆகுபெயர். தீங்கரும்பு அன்மொழித்தொகை. [தலைவன்றனக்குத்தலைவிநிலைகூறல்.] (௫௯)

தீங்கரும்புங்கவறாடிப்பயனிலைசெப்பின்மின்னார்
தாங்கரும்புங்கவலாக்கனியும்மெனச்சாற்றியந்தோ
நீங்கரும்புங்கவசையுறுவீர்முல்லைநீணகரின்
பாங்கரும்புங்கவரும்போற்றுமீசனைப்பாடுமினே.

(இ-ள்.) இங்கு அரும்பும் கவறு ஆடி - பொல்லாங்கு விளைதற்கு (ஏதுவாகிய) சூதாடலைச்செய்தும்,— செப்பில் பயன் இலை— (ஆராய்ந்து) சொல்லுமிடத்து (இத்தீத்தொழில்களாற் சிறிதும்) பிரயோசனமில்லையாம்,— மின்னார்தாம் கரும்பும் கவலாக்கனியும் எனச்சாற்றி - மங்கையரானவர் கரும்பும் கன்றுத பழமும் ஆவர் என்று புகழ்ந்தும்,— அந்தோ நீங்க அரும் புங்க வசை உறுவீர் - ஐயோ ஒழியக்கூடாத(பாவத்தோடு)மிக்க பழியை அடைகின்றீர்கள்,—முல்லை நீள் நகரின் பாங்கரும் புங்கவரும் போற்றும் ஈசனைப் பாடுமின் —(ஆதலால் நண்பர்களே) திருமுல்லைவாயிலாகிய பெரியதிருப்பதியின் பக்கத்தும் தேவரும் சூழ்ந்து வழிபடுகின்ற சிவபெருமானையே (புகழ்ந்து) பாடுங்கள் (எ-று.) சூதாடலைச் செய்தும் புகழ்ந்தும் பழியை அடைகின்றீர்கள்; சொல்லுமிடத்து இத்தீத்தொழில்களாற் பிரயோசனமில்லையாம்; ஆதலால் சிவபெருமானையே பாடுங்க ளெனக்கூட்டுக. கனியும்மென மகரவொற்று விரித்தல் விகாரம். நீங்கவரும் நீங்கருமென அகரம் தொக்கது. புகழ்ந்துபாடினல் புலமை நிலைமைபெற்றுப் போகமும் வீடுபேறும் அடைந்து உய்யலாமென்பது கருத்து. (௬௦)

பாடகமன்னவருந்துயர்தீரப்பரன்புகழ்வாய்
பாடகமன்னவருங்குணம்போனலம்பார்த்தெடுத்துப்
பாடகமன்னவருளான்றன்பாற்பைங்கொடியிடையென்
பாடகமன்னவரும்போற்றவாழ்முல்லைப்பண்ணவனே.

(இ-ள்.) பாடகம் அன்ன வரும் துயர் தீர — பாடகத்தினது
தொடர்ச்சிபோல (த் தீவினைக் கீடாக) வருகின்ற துன்பங்கள் நீங்கு
ம் பொருட்டு,—பரன் புகழ் வாய்பாடு - சிவபெருமானுடைய கீர்த்தி
களாகிய வாய்பாடுகளை, — அகம் - மனமே (நீ கற்றவைகளின் மற்ற
வைகளை விட்டு) ,—அன்ன அரும் குணம்போல்—(நீரொடு கலந்துள்
ள பாலைப் பிரித்துண்ணும்) அன்னப்புள்ளினது அரிய குணம்போல,
—நலம் பார்த்து எடுத்துப் பாடு—நன்றாக நோக்கிச் சிறப்பித்துப் பா
டுவாயாக,—அகம் மன்ன அருளான் - (பாடினோற் றுன்பங்களையும்
போக்கிப் பின்னும்) பாவங்களை அடையச் செய்வாரல்லர்—தன் பா
ற் பைங்கொடி யிடை என்பாள் தக - தம்முடைய பாகத்திலே பசிய
கொடியிடையம்மை உரிமையோடு (தங்கும்வண்ணம்) ,— மன்னவ
ரும் போற்ற முல்லை வாழ் பண்ணவன் - (தேவுலகத்தும் பூவுலகத்
துமுள்ள) வேந்தரும் வழிபடப்பெற்ற திருமுல்லைவாயிலின்கண் எழு
ந்தருளியிருக்கின்ற (அக்) கடவுள் (எ-று.) அன்னப்புள்ளின் குணம்
போல மனமே விட்டு வாய்பாடுகளை நீங்கும் பொருட்டுப் பாடுவாயா
க; பாடினால் கடவுள் பாவங்களை அடையச் செய்வாரல்லரெனக் கூ
ட்டுக. வாய்பாடு ஆன்றோர் வாக்கின் ஆளப்பட்டு வருதல். (௪௧)

பண்ணகங்காரிகைபான்முல்லைவாயும்பதிந்திருந்தோய்
வண்ணகங்காரிகைமற்றுமென்போற்பகர்வாரிலையென்
றெண்ணகங்காரிகைதூவாதியற்றுமிருவினையாந்
திண்ணகங்காரிகைதீண்டுமெந்தாய்கெடச்செய்தருளே.

(இ-ள்.) காரிகை பால் முல்லை வாய்ப் பண் அகமும் பதிந்து இரு
ந்தோய் - உமாதேவியாரைப் பாகத்திலே கொண்டருளித் திருமுல்
லை வாயிலினிடத்ததாகிய அழகையுடைய திருக்கோயிலினும் (திரு
வடியாரது திருவுளக்கோயில் வேதசிரசு முதலியவற்றினும்) இடை
விடாமல் எழுந்தருளியிராநின்ற சிவபிரானே,—காரிகை மற்றும் வ
ண்ணகம் என்போற் பகர்வார் இலை என்று என் அகங்காரி - கட்ட
ளைக் கலித்துறையும் மற்றும் முடுகியற்பாக்களும் என்னைப்போல (அ
மைத்து) ப் பாடுவோர் (தமிழ்வழங்கும் நிலத்திலே) இல்லையாகுமெ
ன்று மதிக்கின்ற அகந்தையை யுடையேன்,—கைதூவாது இயற்றும்
இருவினையாம் திண் நகம்—ஒழியாது செய்கின்ற கன்மமாகிய திண்
ணிய மலையை,—காரி கைதீண்டும் எந்தாய்—(கடலினுண்டாகிய) நஞ்
சை அமுதுசெய்தருளிய என்னுடைய பிதாவே,—கெடச்செய்தருள்

—(உமதருட்பார்வையாற்) போக்கியருளும் (எ-று.) சிவபிரானே பிதாவேயென அடுக்கியுரைக்க. வாயுமென்னும் உம்மை எதிரது தழீஇயது. (௬௨)

செய்தவமாயத்தன்செல்வமுநீயெனச்சிந்தைசெய்யா
தெய்தவமாயத்தன்மங்களைமாற்றியியற்றுமென்றன்
கைதவமாயத்தன்மைக்கோரளவில்லைகண்ணருளாற்
பொய்தவமாயத்தன்முல்லையுள்ளாய்நலம்போதிப்பையே.

(இ-ள்.) செய் தவம் ஆய் அத்தன் செல்வமும் நீ எனச் சிந்தை செய்யாது - செய்கின்ற தவமும் மாதாவும் பிதாவும் செல்வமுமாகிய எல்லாம் நீரென்று புத்திபண்ணுமல்,—எய்து தன்மங்களை மாய மாற்றி அவம் இயற்றும் -.பொருந்திய புண்ணியங்களை மறையும்படிகைவிட்டுப் பாவங்களைச் செய்கின்ற,—என்றன் கைதவம் மாயத்தன்மைக்கு ஓர் அளவு இல்லை - என்னுடைய வஞ்சகமாகிய மாயத்தன்மைக்கு ஒரு பிரமாணம் இல்லையாம்,— அருட் கண்ணால் பொய் தவ மாயத்தன் முல்லை உள்ளாய் நலம் போதிப்பை - (ஆதலால்) அருட்பார்வையால் அசத்திய (முழுதும்) ஒழிய (ச் செய்து) விஷ்ணுவுடைய முல்லைநிலத்தின் கண்ணதாகிய திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே (சிவ) தருமங்களை உபதேசித்தருளும் (எ-று.) சிவபெருமானே யென்பதை முதலின் எடுத்துரைக்க. (௬௩)

திப்பியமாவடுதண்டுறைக்கண்ணுந்திருந்துநிலை
தப்பியமாவடுத்தீர்முல்லையூரினுஞ்சந்தமுலை
யம்பியமாவடுவார்கண்ணிபாகனமர்ந்துபுகழ்
பப்பியமாவடுநாமமொன்றுக்கொண்டுபோரிப்பதே.

(இ-ள்.) திப்பியம் - திவ்வியமாகும்,—தண் ஆவடுதுறைக் கண்ணும்—குளிர்ந்த நீர் சூழ்ந்த திருவாவடுதுறையென்னுந் திருப்பதியிலும்,—திருந்து நிலை தப்பிய மா வடுத் தீர் முல்லை ஊரினும் - திருத்தம் அடைதற்கேதுவாகிய வருணாச்சிரம தருமங்களினின்றும் வழுவிய பெருங்குற்றங்கள் ஒழிதற்கிடமாகிய திருமுல்லைவாயிலென்னுந் திருப்பதியிலும்,—சந்தம் அப்பிய முலை மா வடு வார் கண்ணி பாகன்-சந்தனம் பூசிய தனங்களையும் மாவடுவின் (பிளவு) போலும் நீண்ட கண்களையுமுடைய உமாதேவியாரைப் பாகத்திலுடைய சிவபிரான்,

—அமர்ந்து புகழ் பப்பி அமா அடு நாமம் ஒன்றாக் கொண்டு பாரிப்ப து - விரும்பிக் கீர்த்திகளைப் பரப்பிப் பொருந்திய (மாசிலாமணி யீச ரெனத்)திருநாமமும் ஏகமாகவேகொண்டருளித்தோற்றியது (எ-று.) திவ்வியமாகுமென்பதை இறுதியிற் கூறிக்கொள்க. தண், ஆகுபெயர். இறுதியடியில் அம்மாவென்னும் உரையசை அமாவெனத் தொகுத்த ல் விகாரம்பெற்று நின்றது. (சாசு)

பாரகந்தைக்குமரும்புகழ்சேர்முல்லைப்பாலவருள்
பாரகந்தைக்குமதியார்பின்சென்றுதண்பாலிநதிப்
பாரகந்தைக்கும்வழியின்றிவாடும்பரிசுநன்றோ
பாரகந்தைக்குமைக்குங்கயஞ்செற்றபராபரனே.

(இ-ள்) பாரகம் தைக்கும் அரும் புகழ் சேர் முல்லைப்பால - உல கம் (முழுவதும்) வியாபித்த பெரிய கீர்த்திகள் அமைந்த திருமுல்லை வாயிலைக் காப்பவரே,—அருள் பார் - (ஆதலால்முத்திப் பெருஞ்செல் வம் பெறும்படி) கருணையோடு திருநோக்கஞ் செய்தருளும்,—அகந் தைக் குமதியார் பின் சென்று - (உலகச் சிறுசெல்வச்) செருக்கை யுடைய புல்லறிவாளர் பின்னே போய்,—தண் பாலி நதிப் பார -கு ளிர்மையுடைய பாலியாற்றின்கரையை யுடையவரே,—கந்தைக்கு ம்வழி இன்றிவாடும் பரிசு நன்றோ-பீறற்றுணிக்கும்வழியில்லாது மெ லியுந்தன்மை நன்மையாமா,— பார கந்தைக் கும்மைக்கும் கயம் செ ற்றபராபரனே-தேவதாருவனத்து முனிவர் விடுத்த) பெரிய கட்டுத் தறியைக் கொல்லும் யானையைக் கொன்றருளிய (உலகத்தோற்ற மி றுதிகட்கு) முன்னும் பின்னு முள்ள கடவுளே (எ-று.) காப்பவரே உ டையவரே கடவுளே போய்மெலியுந்தன்மை நன்மையாமா? ஆதலா ல் திருநோக்கஞ் செய்தருளுமெனக் கூட்டுக. (சாரு)

பரங்கிரியாவிகள்சூழ்முல்லைபோற்பரிந்தென்னுளமா
மரங்கிரியாவிடையாரருளுண்மையறிவினின்ற
வரங்கிரியாவியினுள்ளேயழுத்தும்வகையறியேன்
சிரங்கிரியாவிதியாற்றுஞ்செல்லேனுய்யுஞ்செய்கையென்னே.

(இ-ள்.) பரங்கிரி ஆவிகள் சூழ் முல்லைபோல் - (சிறந்த) தி ருப்பரங்குன்றத்தினும் வாவிகள் சூழ்ந்த திருமுல்லைவாயிலினும் போல,— என் உளமாம் அரங்கு பரிந்து இரியா விடையார் -(சி

ந்வாத) என்னுடைய இருதயமாகிய சபையிலும் (திருவுளம்) இரங்கி நீங்காமல் எழுந்தருளி யிருக்கின்ற இடபவாகனத்தையுடையார்,— அருள் உண்மை அறிவின் நின்று - (குருமூர்த்தியை அதிட்டித்து) உபதேசித்தருளிய தத்துவவுணர்வின் (வழியே) நின்று,— அவர் அங்கிரி ஆவியின் உள்ளே அழுத்தும் வகை அறியேன் - அச்சிவபிரானுடைய திருவடிகளை ஆன்மாவினிடத்தே அழுந்தச் செய்யும் (நிட்டையின்) முறைமையை உணர்கிலேன்,—சிரம் கிரி கிரியாவிதி ஆற்றும் செல்லேன் (அன்றி அத்தத்துவ வுணர்விற்கு வாயிலாகிய) உயர்ச்சியுடைய (உண்மைக்) கிரியாவிதி மார்க்கத்திலும் புகமாட்டேன்,—உய்யும் செய்கை என் - (இங்ஙனமாயிற்) பிழைக்குந்தொழில் என்னையோ (எ—று.) ஆப்தர்களே நீங்கள் சொல்லுங்களென்பது எஞ்சிநின்றது. கடைப்பட்ட உலகவியலினிற்றல் குற்றமென்பது கருத்து. (சுசு)

செய்வசித்தாந்தமிழ்முல்லையுளீசசெவ்வேமநய
வைவசித்தாந்தம்பொருளைந்துடையவவற்றிரண்டு
நைவசித்தாந்தவிர்மூன்றுமொன்றொன்றினணுகுமென்னுஞ்
சைவசித்தாந்தநெறியுபதேசந்தனையெமக்கே.

(இ-ள்.) தமிழ் ஆம் முல்லையுள் ஈச வசித்துச் செய் - தமிழ் வளர்கின்ற திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்குங் கடவுளே (உமது) வசமாக்கிச் செய்தருளும்,— செவ்வே ம ந ய ஐ வ சித்தாம் தம் பொருள் ஐந்து உடைய - முறையே மகர நகர யகரங்களும் அழகிய வகர சிகரங்களுமாகிய திருவைந்தெழுத்துக்கடாம் (பாசமுதலியவாகத்) தமக்குரிய பொருள்கள் ஐந்தினை உடையனவாகும்,—அவற்று இரண்டு நைவ-அவைகளில்(மலதிரோதங்கள்) இரண்டும்ஒழியத்தக்க(அசேதனப்)பொருளாகும்,—தவிர்மூன்றும் சித்து ஆம் ஒன்று ஒன்றின் நணுகும் என்னும் - எஞ்சிய பசுவும் அருளும் பதியு மாகிய) திரிபதார்த்தங்களுஞ் சேதனப் பொருளாகும் (பாசங்களினின்று நீங்கிய) பசு அருளோடுகூடிப் பதியின்வியாபகத்துள்வியாப்பியமாக (இரண்டறக்) கலக்குமென்று (வேதசிவாகமங்களின்) எடுத்தோதுகின்ற,—சைவசித்தாந்த நெறி உபதேசந்தனை எமக்கு - சித்தாந்தசைவமார்க்க உபதேசத்தை அடியேங்களுக்கு (எ-று.) கடவுளே வசமாக்கி அடியேங்களுக்கு உபதேசத்தைச் செய்தருளுமெனக்கூட்டுக. ம ந ய என்றும், தவிர் மூன்றுஞ் சித்

தாம் என்றும், கூட்டிப்பிரித்தமையால் சத்தொடுகூடிச் சத்தாயும் அசத்தொடுகூடி அசத்தாயும் நிற்குஞ் சதசத்துப் பசுவென்பதும், ஒன்றொன்றினணுகும் என்றமையால், பசு தூலசித்தென்பதும், அருளும் பதியும் சூக்குமசித்தென்பதும், பெறப்படும். இவற்றின் விரியெல்லாம் குருமுகத்தாற் கேட்டுணர்க. (கஎ)

தனையரியானனநான்கானுந்தேடிடத்தான்முடியாஞ்
சினையரியானனமார்தடஞ்சூழ்முல்லைச்சிற்பரனென்
வினையரியானருள்சேர்ந்துநீயொருமின்னின்விழி
யினையரியானனனேர்மெழுகாயினென்னும்பிறிதே.

(இ-ள்.) அரி ஆனனம் நான்கானும் தனைத் தேடிட - விஷ்ணுவும் நான்கு முகங்களையுடைய பிரமனும் தம்மைத் தேடியவழி,—தாள் முடி ஆம் சினை அரியான் - (முறையே) அடியு முடியுமாகிய திருவுறுப்புக்களை (அவருக்கு) க் காட்டாதவராயும்,—அனம் ஆர் தடம் சூழ் முல்லைச் சிற்பரன் - அன்னங்கள் பொருந்திய வாவிகள் சூழப்பெற்ற திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற ஞானரூபியாகிய கடவுளாயும்,—என் வினை அரி ஆனன் அருள் சேர்ந்தும் - என்னுடையகன்மங்களை ஒழிக்கின்ற இடபாரூடராயுமுள்ள சிவபிரானது கருணையைப்பெற்றும்,— நீ ஒரு மின்னின் ஐ அரியின் விழியான் அனல் நேர் மெழுகு ஆயின் - நீ ஒரு பெண்ணினது அழகிய வரிகளையுடைய கண்ணின் பார்வையால் அக்கினி முகம்பட்ட அரக்குப்போல உருகுவாயானல்,—பிறிது என் ஆம் - வேறே (யான் சொல்லத்தக்கது) யாதாகும் (எ-று.) [கற்றறிபாங்கன் கழறல்.] (கஅ)

தேவருந்தானவருங்காரி கண்டஞ்சித்தீவினையா
னேவருந்தானவனும் பகுப்பற்றவர்நேர்முல்லைநம்
பாவருந்தானவவென்றே விடப்பண்டருந்தியுமந்
தோவருந்தானவபீதறியார் சிலர்தொண்டர்களே.

(இ-ள்.) தேவரும் தானவரும் காரி கண்டு அஞ்சி - தேவரும் அசுரரும் (திருப்பாற்கடலி னின்றுந் தோன்றிய) ஆலாகல விடத்தைக் கண்டு பயந்து,—தீ வினையானே வரும் தான் அவன் ஆம் பகுப்பு அற்றவர் நேர் முல்லை நம்பா - கொடிய கன்மத்தொடர்பினாலே வருகின்ற நான் அவன் என்கிற சுட்டுணர்வு கெட்ட அனுபூதிச் செல்வர் அணுகப்பெற்ற திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிராநி

ன்ற நம்பனென்னுந் திருநாமத்தையுடையவரே,— ஆனவ - இடப வாகனத்தை யுடையவரே,—அருந்து என்று ஓவிட (அந்நஞ்சத்தை) உண்டு காத்தருளுமென்று முறையிட்ட வளவிலே,—பண்டு அருந் தியும் வருந்தான் - (பெருங்கருணையினால் அச்சிவபிரான்) பண்டைக் காலத்திலே அமுதுசெய்தருளியும் துன்பம் அடைந்திலர் ,—(இங் ஙனமாகியும்) — அந்தோ தொண்டர்களே நவம் ஈது சிலர் அறியார் —ஐயையோ அடியார்களே புதுமையாகிய இவ்வற்புதத்தை (இன் னமும்) சில புன் மதத்தர் உணரமாட்டார் (எ-று.) அவரது அறி யாமை இருந்தபடி என்னையென்பது எஞ்சிநின்றது. பகுக்கும் உ ணர்வைப் பகுப்பென்று உபசரித்தார். (சுகூ)

தொண்டையநாடுகடீரச்செய்யாமற்றுவரிதழ்வாய்த்
தொண்டையனுடுமலர்க்கூந்தலார்க்குடைந்தும்பிழைத்தேன்
றொண்டையனுடுபுகழோங்குமுல்லையிற்றோன்றுமுருத்
தொண்டையனுடுமலரடிக்கீழின்றுதொண்டுசெய்தே.

(இ-ள்.) அ நாள் தொண்டைத் துகள் தீரச் செய்யாமல்-ப ண்டைக் காலத்தே அடிமைத்திறத்தை ஆணவமலம் நீங்கும் வண் ணம் கைக்கொள்ளாது,— துவர் இதழ் தொண்டை வாய் அல் நா டும் மலர்க் கூந்தலார்க்குஉடைந்தும் - பவளம்போன்றஅதரத்தையு ம் கொவ்வைக்கனிபோன்ற வாயையும் இருளும் ஆராயத்தக்கபூக் களை அணிந்தஅளகத்தையுமுடைய பெண்கள் பொருட்டு(மனம்)தள ர்ந்தேனுயினும்,—பிழைத்தேன்-உய்ந்தேன்,— தொண்டையன் நாடு புகழ் ஓங்கும் முல்லையில் தோன்றும் - தொண்டைமானால் ஆள ப்பட்ட தொண்டைமண்டலத்தின்கண்ணே கீர்த்திகள் உயர்கின்ற திருமுல்லைவாயிலினிடத்தே எழுந்தருளிய,—தொண்டு உரு ஐயன் ஆடும் மலர் அடிக் கீழ் இன்று தொண்டு செய்து - நவவடிவத்தை யுடைய பிதாவாகிய சிவபிரானுடைய (கனகசபையிலே) திருகிரு த்தஞ்செய்கின்ற செந்தாமரை மலர்போலும் திருவடிக்கீழ் இக்கா லத்தே வழிபாடுசெய்து (எ—று.) உய்ந்தேனென்னும் பயனிலையை இறுதியிற் கூறிக் கொள்க. (எ0)

செய்யுடையல்குலைக்காட்டிமய்க்குநர்தீமைகெடச்
செய்யுடையல்குலைப்பால்வளைவெண்ணித்திலம்பரப்புஞ்
செய்யுடையல்குலையாவளமுல்லையிற்சேர்ந்துபகர்
செய்யுடையல்குலைத்தாரானைப்பால்வைத்ததேவைநெஞ்சே.

(இ-ள்.) செய் உடை அல்குலைக் காட்டி மயக்குநர் தீமை கெ
டச் செய் உடையல் - செவ்விய ஆடைசூழ்ந்த அல்குலை (அந்தர
ங்கத்திலே) காண்பித்து அறிவைக் கெடுக்கின்ற பெண்கள் (செய்
யும்) தீங்கு நீங்கும்பொருட்டு (முயற்சி) செய்வாயாக, (அம்முயற்சி
யாவது) குலைப்பால் வ
யிலே) தளர்ச்சி அடையற்க,— (அம்முயற்சியாவது) குலைப்பால் வ
ளை வெள் நித்திலம் பரப்பும் செய் உடை - வரம்புகளிலே சங்கு
கள் வெள்ளிய முத்துக்களை (உமிழ்ந்து) நிறைக்கின்ற கழனிகளை
யுடைமையால் ,—உலையா வளம் அல்கு முல்லையிற் சேர்ந்து செ
ய்யுள் பகர் — கெடாத வளப்பம் தங்கிய திருமுல்லைவாயிலை அ
டைந்து பாடல்கள் (இயற்றித்) துதித்தலேயாம் ,— தையல் குலை
த் தாரானைப் பால் வைத்த தேவை - உமாதேவியாரையும் துளசி
மாலையையுடைய விஷ்ணுவையும் பாகத்திலே கொண்டருளிய கட
வுளை,— நெஞ்சே - மனமே (எ-று) மனமே தீங்கு நீங்கும்பொரு
ட்டு முயற்சிசெய்; அம் முயற்சியாவது திருமுல்லைவாயிலை அடைந்
து கடவுளைத் துதித்தலேயாமெனக் கூட்டுக. பகர்தல் பகர் எனப் பகு
திமாத்திரையாகி நின்றது. இறுதியடியில் குல்லை குலையென இடைக்
குறைந்து நின்றது. (எக)

நெஞ்சலமந்திரங்கக்கூற்றந் தோன்றினுநெக்குருகி
யஞ்சலமந்திரந்தான் முதலாறுமற்றேழுறுந்தேஞ்
சஞ்சலமந்திரம்பெற்றுள முல்லைத்தலத்தழகு
துஞ்சலமந்திரந்தன்னிலெங் கோனைத்துதிக்கப்பெற்றே.

(இ-ள்.) நெஞ்சு அலமந்து இரங்கக் கூற்றம் தோன்றினும் நெ
க்கு உருகி அஞ்சலம்—(ஆதலால்) மனம் சுழன்று பரிதபிக்கும்வ
ண்ணம் இயமன் எதிர்ப்படினும் உடைந்துருகி அஞ்சமாட்டோம்,—
மந்திரம் தான் முதல் ஆறும் அற்றேம் — மந்திரம் ஆதியாகிய
சடத்துவாக்களின் (பந்தம்) ஒழிந்தோம், — சஞ்சலம் அறுத்தேம்-
(அப்பந்தங்காரணமாகவரும்) கவலையையும் களைந்தோம்,— அம் தி
ரம் பெற்று உள முல்லைத் தலத்து - நீர் (வளம்) நிலைபெறாறுள்ள
திருமுல்லைவாயிலாகிய திருப்பதியில்,— அழகு துஞ்சல் அ மந்திரம்
தன்னில் எம் கோனைத் துதிக்கப்பெற்று - அழகு நிலைபேறுடைய
அந்தத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிராநின்ற நம்முடைய
முதல்வராகிய சிவபிரானை வாழ்த்தப்பெற்று (எ-று.) சிவபிரானை
வாழ்த்தப்பெற்றுப் பந்தம் ஒழிந்தோம்; கவலை களைந்தோம்; ஆதலா

ல் அஞ்சமாட்டோமெனக் கூட்டுக. தான் அசை. சடத்துவாக்க ளாவன மந்திரம், பதம், வன்னம், கலை, தத்துவம், புவனம் என விவை. இறுதியடியில் அம்மந்திர மெனற் பாலது அமந்திரமென நின்றது. (எஉ)

பெற்றத்திருந்துறுவாழ் வெமக்கியப்பெருகுவள
முற்றத்திருந்துறுமுல்லையின் முல்லையின்முல்லையில்வாழ்
நற்றத்திருந்துறுநீர்வேணியீர் நள்ளுமன்பரென்னுஞ் [னே.
சுற்றத்திருந்துறுகண்டீர்த் தெமைத்தொண்டுகொள்ளுமி

(இ-ள்.) பெற்றத்து இருந்து எமக்கு உறு வாழ்வு ஈய - இடபத் தின்மேல் எழுந்தருளி எங்களுக்கு (த் தரிசனந் தந்து முத்தி) ப் பெருவாழ்வைக் கொடுக்கும் பொருட்டு,—பெருகு வளம் முற்றத் திருந்துறும் முல்லையின் முல்லையின் முல்லையில் வாழ்-(உலகத்தின்)மி குந்தவளப்பம் முழுவதும் விளங்கப்பெற்றமுல்லைநிலத்தின்கண்ணதா கிய திருமுல்லைவாயிலின்கண் முல்லைக்கொடி நீழலில் வீற்றிருந்த ருளும், — தத்து நல் நீர் துறு இரும் வேணியீர் - தாவுகின்ற சுத் தமாகிய கங்கைநீர் நெருங்கிய பெருமையாகிய சடையை யுடைய வரே,—நள்ளும் அன்பர் என்னும் சுற்றத்திர் - நேசிக்கின்ற பத்தர் களாகிய நல்லினங்களை யுடையவரே,— எமை உந்து உறுகண் தீர் த்துத் தொண்டு கொள்ளுமின் - எங்களைத் துரக்கும் (வினை)த்துன் பத்தைப் போக்கி அடிமையாகக் கொண்டருளும். (எ-று.) (எங)

மின்பங்கம்பொன்றுந்துமேருவில் லோடமர்வேதியவென்
றன்பங்கம்பொன்றுந்துறைகாட்டி முத்தியிற்சாரவரு
ளன்பங்கம்பொன்றுந்துபியோசை யென்றுமறுமுல்லையா
யின்பங்கம்பொன்றுந்துவர்க்கையற் கீந்தருளென்னரசே.

(இ-ள்) ஒன்று அம்பு உந்து மேரு வில்லோடு மின் அமர் ப ங்கு வேதிய - (விஷ்ணுவாகிய) ஒருபாணம் பொருந்திய மகாமேரு மலையென்னும் வில்லோடும் உமாதேவியார் தங்கியபாகத்தை யுடை ய (தேவப்) பிராமணரே,— என்றன் பங்கம் பொன்றும் துறை கா ட்டி - என்னுடைய (மும்மலக்) குற்றம் ஒழிதற்கேதுவாகிய (சன்) மார்க்கத்தை விளக்கி,—முத்தியில் சார அன்பு அங்கம் அருள் — பரமுத்தியிற் கலக்கும் வண்ணம் பரபத்தியையும் (அதற்கு) அங்

(இ-ள்.) செய் உடை அல்குலைக் காட்டி மயக்குநர் தீமை கெ
டச் செய் உடையல் - செவ்விய ஆடைசூழ்ந்த அல்குலை (அந்தர
ங்கத்திலே) காண்பித்து அறிவைக் கெடுக்கின்ற பெண்கள் (செய்
யும்) தீங்கு நீங்கும்பொருட்டு (முயற்சி) செய்வாயாக, (அம்முயற்சி
யிலே) தளர்ச்சி அடையற்க,— (அம்முயற்சியாவது) குலைப்பால் வ
ளை வெள் நித்திலம் பரப்பும் செய் உடை - வரம்புகளிலே சங்கு
கள் வெள்ளிய முத்துக்களை (உமிழ்ந்து) நிறைக்கின்ற கழனிகளை
யுடைமையால் ,—உலையா வளம் அல்கு முல்லையிற் சேர்ந்து செ
ய்யுள் பகர் — கெடாத வளப்பம் தங்கிய திருமுல்லைவாயிலை அ
டைந்து பாடல்கள் (இயற்றித்) துதித்தலேயாம் ,— தையல் குலை
த் தாரானைப் பால் வைத்த தேவை - உமாதேவியாரையும் துளசி
மாலையையுடைய விஷ்ணுவையும் பாகத்திலே கொண்டருளிய கட
வுளை,— நெஞ்சே - மனமே (எ-று) மனமே தீங்கு நீங்கும்பொரு
ட்டு முயற்சிசெய்; அம் முயற்சியாவது திருமுல்லைவாயிலை அடைந்
து கடவுளைத் துதித்தலேயாமெனக் கூட்டுக. பகர்தல் பகர் எனப் பகு
திமாத்திரையாகி நின்றது. இறுதியடியில் குல்லை குலையென இடைக் (எக)
குறைந்து நின்றது.

நெஞ்சலமந்திரங்கக்கூற்றந் தோன்றினுநெக்குருகி
யஞ்சலமந்திரந்தான் முதலாறுமற்றேழுறுந்தேஞ்
சஞ்சலமந்திரம்பெற்றுள முல்லைத்தலத்தழகு
துஞ்சலமந்திரந்தன்னிலெங் கோனைத்துதிக்கப்பெற்றே.

(இ-ள்.) நெஞ்சு அலமந்து இரங்கக் கூற்றம் தோன்றினும் நெ
க்கு உருகி அஞ்சலம்—(ஆதலால்) மனம் சுழன்று பரிதபிக்கும்வ
ண்ணம் இயமன் எதிர்ப்படினும் உடைந்துருகி அஞ்சமாட்டோம்,—
மந்திரம் தான் முதல் ஆறும் அற்றேம் — மந்திரம் ஆதியாகிய
சடத்துவாக்களின் (பந்தம்) ஒழிந்தோம், — சஞ்சலம் அறுத்தேம்-
(அப்பந்தங்காரணமாகவரும்) கவலையையும் களைந்தோம்,— அம் தி
ரம் பெற்று உள முல்லைத் தலத்து - நீர் (வளம்) நிலைபெற்றுள்ள
திருமுல்லைவாயிலாகிய திருப்பதியில்,— அழகு துஞ்சல் அ மந்திரம்
தன்னில் எம் கோனைத் துதிக்கப்பெற்று - அழகு நிலைபெறுடைய
அந்தத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிராநின்ற நம்முடைய
முதல்வராகிய சிவபிரானை வாழ்த்தப்பெற்று (எ-று.) சிவபிரானை
வாழ்த்தப்பெற்றுப் பந்தம் ஒழிந்தோம்; கவலை களைந்தோம்; ஆதலா

ல் அஞ்சமாட்டோமெனக் கூட்டுக. தான் அசை. சடத்துவாக்க ளாவன மந்திரம், பதம், வன்னம், கலை, தத்துவம், புவனம் என விவை. இறுதியடியில் அம்மந்திர மெனற் பாலது அமந்திரமென நின்றது. (௭௨)

பெற்றத்திருந்துறுவாழ் வெமக்கீயப்பெருகுவள
முற்றத்திருந்துறுமுல்லையின் முல்லையின்முல்லையில்வாழ்
நற்றத்திருந்துறுநீர்வேணியீர் நள்ளுநயன்பரென்னுஞ் [ளே.
சுற்றத்திருந்துறுகண்டீர்த் தெமைத்தொண்டுகொள்ளுமி

(இ-ள்.) பெற்றத்து இருந்து எமக்கு உறு வாழ்வு ஈய - இடபத் தின்மேல் எழுந்தருளி எங்களுக்கு (த் தரிசனந் தந்து முத்தி) ப் பெருவாழ்வைக் கொடுக்கும் பொருட்டு,—பெருகு வளம் முற்றத் திருந்துறும் முல்லையின் முல்லையின் முல்லையில் வாழ்-(உலகத்தின்)மி குந்தவளப்பம் முழுவதும் விளங்கப்பெற்றமுல்லைநிலத்தின்கண்ணதா கிய திருமுல்லைவாயிலின்கண் முல்லைக்கொடி நீழலில் வீற்றிருந்த ருளும்,— தத்து நல் நீர் துறு இரும் வேணியீர் - தாவுகின்ற சுத் தமாகிய கங்கைநீர் நெருங்கிய பெருமையாகிய சடையை யுடைய வரே,—நள்ளும் அன்பர் என்னும் சுற்றத்திர் - நேசிக்கின்ற பத்தர் களாகிய நல்லினங்களை யுடையவரே,— எமை உந்து உறுகண் தீர் த்துத் தொண்டு கொள்ளுமின் - எங்களைத் தூக்கும் (வினை)த்துன் பத்தைப் போக்கி அடிமையாகக் கொண்டருளும். (எ-று.) (௭௩)

மின்பங்கம்பொன்றுந்துமேருவில் லோடமர்வேதியவென்
றன்பங்கம்பொன்றுந்துறைகாட்டி முத்தியிற்சாரவரு
ளன்பங்கம்பொன்றுந்துபியோசை யென்றுமருமுல்லையா
யின்பங்கம்பொன்றுந்துவர்க்கையற் கீந்தருளென்னரசே.

(இ-ள்) ஒன்று அம்பு உந்து மேரு வில்லோடு மின் அமர் ப ங்கு வேதிய - (விஷ்ணுவாகிய) ஒருபாணம் பொருந்திய மகாமேரு மலையென்னும் வில்லோடும் உமாதேவியார் தங்கியபாகத்தை யுடை ய (தேவப்) பிராமணரே,— என்றன் பங்கம் பொன்றும் துறை கா ட்டி - என்னுடைய (மும்மலச்) குற்றம் ஒழிதற்கேதுவாகிய (சன்) மார்க்கத்தை விளக்கி,—முத்தியில் சார அன்பு அங்கம் அருள் — பரமுத்தியிற் கலக்கும் வண்ணம் பரபத்தியையும் (அதற்கு) அங்

கமாகிய நல்லொழுக்கத்தையும் கொடுத்தருளும்,—பொன் துந்துபி ஓசை என்றும் அறு முல்லையாய் - இலக்குமியும் வாத்தியங்களின் முழக்கமும் எந்நாளும் நீங்காத திருமுல்லைவாயிலையுடையவரே,— கம்பு ஒன்றும் அவர்க்கையற்கு இன்பம் ஈந்தருள் என் அரசே- சங்கம் பொருந்திய சிவந்த கையையுடைய விஷ்ணுவுக்கு ஆனந்த த்தைத் தந்தருளிய என்னுடைய முதல்வரே (எ-று.) பிராமணரே உடையவரே முதல்வரே என அடுக்கி யுரைத்துக்கொள்க. (எச)

அரங்கந்திருவம்பலமுக்கணனுக்கமர்விடஞ்சீ
ரிரங்கந்திருவம்பலர்தொறும் வாழுவிலங்கும்பிர
மரங்கந்திருவம்பலபாடும் வாவிகண்மல்குமுல்லைப்
புரங்கந்திருவம்பலங்கும் கொடியிடைப்பூண்முலையே.

(இ-ள்.) முக்கணனுக்கு அரங்கம் - மூன்று கண்களையுடைய சிவபிரானுக்குத் (திருகிருத்தஞ்செய்யுஞ்) சபை,—திரு அம்பலம்— (தில்லைப்பதியிடத்ததாகிய) அழகிய (கனக) சபையே ,—அமர்வு இடம் - எழுந்தருளியிருக்கும் இடம்,— இரங்கு சீர்த் திரு வாழ இலங்கும் அம் வம்பு அலர் தொறும் - (யாவரும் எடுத்து) முழக்கும் சிறப்பினையுடைய இலக்குமி தங்கும்படி விளங்குகின்ற அழகும் மணமும் பொருந்திய செந்தாமரை மலர்கள் தோறும்,—பிரமரம் கந்திருவம் பலபாடும் வாவிகள் மல்கு முல்லைப் புரம் - வண்டுகள் கந்தருவமுதலிய பலவகைப் பண்களைப் பாடப்பெற்ற தடாகங்கள் மிகுந்துள்ள திருமுல்லைவாயிலென்னுந் திருப்பதியே,—கந்து - பற்றுக்கோடு,—வம்பு அலங்கும் பூண் இரு முலைக் கொடியிடை—கச்சின்மேல் விளங்கும் ஆபரணங்களையணிந்த இரண்டு தனங்களையுடைய கொடியிடையம்மையே. (எ-று.) (எரு)

பூண்டிலஞ்சித்தத்துமெய்யன்பெவ்வாறினிப்பொன்பெண்மண்ணாந், தூண்டிலஞ்சித்தத்துவங்கடந்தானந்தந்தோய்வுறவூர்,பாண்டிலஞ்சித்தத்துவாத்துடக்கொக்கப்பறித்தருள்வா, யாண்டிலஞ்சித்தத்துநீர்புடைசூழ்முல்லையங்கணனே.

(இ-ள்.) சித்தத்து மெய் அன்பு பூண்டிலம் - (யாங்கள்)மனதின்கண்ணே மெய்ப் பத்தியைக் கொண்டிலோம்,—இனி எவ்வாறு பொன் பெண் மண் ஆம் தூண்டில் அஞ்சி - இனி எப்படிப் பொன்னும் பெண்ணும் மண்ணுமாகிய தூண்டிலுக்குப் பயந்து,—

தத்துவம் கடந்து ஆனந்தம் தோய்வுறல் - (மாயாகாரியமாகிய) கருவிகளை நீங்கி (உமது திருவடி) இன்பப் பெருக்கின் மூழ்குதல்,— அம் பாண்டில் ஊர் சித்து - அழகிய இடபவாகனத்தைச் செலுத்துகின்ற ஞானமூர்த்தி,— அத்துவாத் தொடக்கு ஒக்கப் பறித்து ஆண்டருள்வாய் - (ஆதலால் நீர்குருமூர்த்தியாகி எழுந்தருளிச் சிவதீக்கை செய்து) சடத்துவாக்களின் பந்தம் முழுவதும் களைந்து (அப்பத்தி முத்திகள் சித்திக்கும் பொருட்டு) அடிமைகொண்டருளும்,— தத்து நீர் இலஞ்சி புடை சூழ் முல்லை அம் கணனே - தாவுகின்ற நீரையுடைய தடாகங்கள் புறத்தே சூழுந் திருமுல்லைவாயிலையுடைய அருட்கண்ணரே (எ—று.) ஞானமூர்த்தி அருட்கண்ணரே என்பவைகளை முதலின் ஒதிக்கொள்க. பாண்டில் இவ்விடத்தே அறிவைக்கவருங் கருவி. (எசு)

அங்கங்கரகரவென்றோதம்போலொலியார்ப்பவன்பர்
சங்கங்கரகரகத்தோர்துதிக்கத்தண்ணீற்றினொளி
பொங்கங்கரகரமுல்லையுள்ளாரெனைப்பொத்திக்கொண்ட
பங்கங்கரகரநின்றாலுனைப்பற்றிக்கொல்லுவரே.

(இ-ள்.) அங்கு அங்கு ஓதம் போல் அன்பர் அர அர என்று ஒலி ஆர்ப்ப - அங்கங்கே கடல்போலப் பத்தர்கள் அரகரவென்று பெருமுழக்கஞ்செய்யவும்,— கரகம் சங்கம் கரத்தோர் துதிக்க - கமண்டலத்தையும் சங்கையும் (முறையே) கைகளிற்கொண்ட பிரமாவும் விஷ்ணுவும் (வேதசிவாகமங்களை எடுத்து) ஓதவும்,— தண் நீற்றின் ஒளி பொங்கு அங்கர் முல்லை அகரம் உள்ளார் - தண்ணிய திருநீற்றினது விளக்கம் மிகுந்த திருமேனியையுடையவராகிய சிவபெருமான் திருமுல்லைவாயிலென்னுந் திருப்பதியின் கண் எழுந்தருளியிருக்கின்றார் (ஆதலால்),— எனைப்பொத்திக்கொண்ட பங்கம் கர கர - என்னை மூடிக்கொண்ட (ஆணவமலமாகிய) களங்கமே ஒளித்துவிடு ஒளித்துவிடு,—நின்றால் உனைப் பற்றிக் கொல்லுவர் - தங்கி நிற்பாயாயின் உன்னை அகப்படுத்திக் கொன்றுவிடுவர் (எ—று.) அன்பர் சங்கம் கர கரகத்தோர் என்பதற்கு அன்பர்குழாமும் கையிலே கமண்டலத்தையுடைய முனிவரும் எனப் பொருள் கூறலும் ஒன்று. (எஎ)

பற்றிக்கொல்லாதொழிவேனேவினிமலப்பாவமறங், கற்றிக்
கொல்லாருலைவேற்கண்ணிபால்கவர்முல்லைப்பிரான், பெற்

றிக்கொல்லாதவர்போலென்றனையெண்ணும்பேதையெண்ணம்,
முற்றிக்கொல்லாம்வருகின்றனைபாரின்றென்முன்னர்வந்தே.

(இ-ள்.) மலப் பாவம் இனிப் பற்றிக் கொல்லாது ஒழிவேனோ - மூலமலமாகிய பாதகமே இனி (உன்னை) அகப்படுத்திக்கொல்லாமல் விடுவேனோ,—மறம் கற்று இக் கொல் உலை ஆர் வேற் கன்னி பால் கவர் - கொல்லுந்தொழிற்கண்ணே பழகி இந்தக் கொல்லன் உலைமுகத்திற் காயப்பெற்ற வேல்போலும் கண்களையுடைய உமாதேவியாரது பாகத்தைக் கவர்ந்து,—முல்லைப் பிரான் பெற்றிக்கு ஒல்லாதவர்போல் - திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கும் முதல்வருடைய திருவருணீர்மைக்குப் பொருந்தாதவன்பர் போலும்,—என்றனை எண்ணும் பேதை எண்ணம் முற்றிக் கொல்லாம் வருகின்றனை — என்னை நினைக்கின்ற மடமைக்கருத்து முதிர்ந்தல்லவா (இதுவரையும் தொடர்ந்து) வருகின்றாய்,—இன்று என் முன்னர் வந்து பார் - இப்பொழுது (அச்சிவபிரானுடைய பெருங் கருணைபெற்ற) என்முன்னேவந்து பார்ப்பாயாக (எ-று.) (எ.அ)

வந்தியன்றேவரை நின்னன்றியான் முல்லைவாணனென்றே
வந்தியன்றேவரை யாதருளாமைமன் முற்றும்பெற்றும்
வந்தியன்றேவரைமாமாதுநீயுமவ்வாறுநின்செவ்
வந்தியன்றேவரைவாட்கரித்தான்கெடவைத்தவனே.

(இ-ள்.) முல்லை வாண - திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற சிவபிரானே,—நின் அன்றித் தேவரை யான் வந்தியேன் —(பதி யாகிய) உம்மையல்லது (பசுக்களாகிய) தெய்வங்களை நான் வணங்கமாட்டேன் ,—வரையாது இயன்றே வந்து அருளாமை என்றோ - (ஆதலால் அடியேனைத்) தள்ளிவிடாது (திருவுளம்) பொருந்தியே எழுந்தருளிக் கருணைசெய்யாமை என்னையோ,—மன் முற்றும் பெற்றும் மா வரை மாது வந்தி அன்றே நீயும் அவ்வாறு— பிருதிவி (முதலிய சடமும் சித்துமாகிய பிரபஞ்சங்களை) யெல்லாம் பெற்றருளியும் மகிமைபொருந்திய பார்ப்பதிதேவி பெருதகன்னிகையல்லவா (அப்பார்ப்பதிதேவிக்குத் தலைவராகிய) நீரும் பிரமசாரியே,—நின் செவ்வந்தி அன்றே வரைவாட்கு அரித்தான் கெடவைத்தவனே - உமது (திருமேனிப்பாங்காகப்பெற்ற) செவ்வந்திமலர்களை முற்காலத்தே தன்னுடைய மனைவி (குடும்) பொருட்டு (த்

திருச்சிராப்பள்ளியிலே) முற்றுங்கவர்ந்த பராந்தகச் சோழனை அழியும்படி செய்தவரே (எ-று.) சிவபிரானே பிரமசாரியே செய்தவரே யென அடுக்கியுரைக்க. மண் - உபலக்கணம். (எக)

வைத்தலைவாளிநிகர்விழியாள் மதனம்புடல்சு
வைத்தலைவாளினியாற்றகில்லாண்மன்னச்செய்தியருள்
வைத்தலைவாளினிதார்முல்லைவாண்மதிக்குடைக்கோ
வைத்தலைவாளினிலேற்றன்றிச்சாந்தம்வாரதிவட்கே.

(இ-ள்.) வைத் தலை வாளி நிகர் விழியாள் - கூரிய நுனியையுடைய அம்புபோலும் கண்களையுடைய என்னுடைய பெண்ணானவள், — மதன் அம்பு உடல் சுவைத்து அலைவாள் இனி ஆற்றகில்லாள்—மன்மதனுடைய பாணங்களாலே (தனது) உடம்பு (முழுவதும் புண்ணாகத் துளைத்து) உண்ணப்பட்டுச் சுழலுகின்றாள் இனிப் பொறுக்கமாட்டாள் போலும், —அருள் வைத்து மன்னச்செய்தி - (ஆதலால்) கருணைசெய்து (அங்கீகரித்து அவளறிவு) நிலைபெறும்படி செய்தருளும், —அலை இனிது ஆர் வாள் முல்லைவாண - இருளை இனிதாக உண்ணுகின்ற ஒளியையுடைய திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே, —மதிக் குடைக் கோத் தலையை வாளினில் ஏற்று அன்றி - சந்திரனாகிய குடையையுடைய அரசனாகிய (அம்) மன்மதனது தலையை வாளாயுதத்தால் வீசினாலல்லது, —இவட்குச் சாந்தம் வாரது - இவளுக்கு ஆறுதல் உண்டாகாது (எ-று.) சிவபெருமானே என்பதை முதலின் எடுத்தோதிக்கொள்க. மூன்றாமடியில் அல்லை அலையென இடைக்குறைந்து நின்றது. [நற்றாயிரங்கல்.] (அ0)

வட்காதகைதவரூரெரித்தாயுன்னைவாஞ்சித்தவி
வட்காதகைதவமிக்கோர்புகழ்மணிவார்த்தைநிறை
யுட்காதகைதவவாணர்கள்வாழ்முல்லையுத்தமனே
யுட்காதகைதவன்கைப்பிரம்பாலடியுண்டவனே.

(இ-ள்.) வட்காத கைதவர் ஊர் எரித்தாய் - கெடுதலில்லாத வஞ்சகத்தையுடைய பகைவருடைய நகரங்களைத் தகித்தவரே, — உன்னை வாஞ்சித்த இவட்குத் தகையா தவ மிக்கோர் புகழ் வார்த்தை (யா) மணி - உம்மைவிரும்பிய இத்தலைவிக்கு அழகா மிக்க தாகும் (புலமையின்) மேலாயினார் துதிக்கின்ற சொல்லா மாணிக்

கமாகும் (ஆதலால் அங்கீகரித்தருளும்),—நிறை உட்காத கைத் தவ வாணர்கள் வாழ் முல்லை உத்தமனே - மகிமை குன்றாத ஒழுக்கத்தையுடைய தவத்தினர் வாழ்கின்ற திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கும் முதல்வரே,—உட்கார்த கைதவன் கைப் பிரம்பால் அடியுண்டவனே - அஞ்சாத பாண்டியராஜனது கையிலுள்ள பிரப்பங்கோலால் அடிபெற்றவரே (எ-று.) திருநாமங்களை அடுக்கியுரைத்துக்கொள்க. ஆதலால் அங்கீகரித்தருளுமென்பது இசையெச்சம். மூன்றாமடியில் கைத்தவமெனற்பாலது கைதவவெனத் தகரவொற்றுத் தொக்குநின்றது. [பாங்கிதலைமகளதவயவத்தருமை சாற்றல்.] (அக)

உண்டாயினந்தமயல்செய்வதென்னினியோடுநெஞ்ச
மூண்டாயினந்தமதாண்டவன்முல்லையுரூருறும்புன் [ன்
கண்டாயினந்தமர்போல்வந்தெம்மான் கண்ணருள்புரிந்தா
கண்டாயினந்தமமேயுனக்கிங்கென்னகாரியமே.

(இ-ள்.) உண்டாயின் நந்த மயல் செய்வது என் இனி ஓடு—(என்னோடு) பிறந்தாயானால் (யான்) கெடும்வண்ணம் (நீ) மயக்கஞ்செய்தல் என்னை இப்பொழுதே ஓடக்கடவாய்,— நஞ்சம் உண்தாயின் நந்தமது ஆண்டவன் முல்லை உரூர் உறும் புன்கண் தாயினம் - விடத்தை உண்டருளிய, மாதாவைப்போலும் (கருணையிருந்து தேவரைக் காத்தருளிய,) நம்முடைய (அம்) முதற்கடவுளாது திருமுல்லைவாயிலை அணுகாதவர் அடையத்தக்க துன்பங்களைக் கடந்தோம்,— எம் மான் தமர் போல் வந்து அருட்கண் புரிந்தான் கண்டாய் - எம்முடைய பெரியராகிய சிவபிரான் (மாறுடச்சட்டைசாத்தி) உறவினர்போல எழுந்தருளித் திருவருட்பார்வை செய்தருளினரல்லவா,—(ஆதலால்)—தமமே இனம் உனக்கு ஈங்கு என்ன காரியம் - இருண்ட ஆணவமலமே இன்னமும் உனக்கு இவ்விடத்தே என்னகாரியமிருக்கின்றது (எ—று.) சிவபிரான் திருவருள்செய்தருளினார் ஆதலால் துன்பங்களைக் கடந்தோம் ஆணவமலமே என்னோடு பிறந்தாயானால் மயக்கஞ்செய்தல் என்னை ஓடக்கடவாய் இன்னமும் என்னகாரியமிருக்கின்றதெனக்கூட்டுக. (அஉ)

மேதக்கசிந்தனைத்தாபதர்வாழ்முல்லைமேவுநம்ப
வாதக்கசிந்தனைத்தாவீரமென்றட்டுமன்மதனைக்

காதக்கசிந்தனைத்துங்குடியார்முடிக்கண்ணுதலென்
றோதக்கசிந்தனைக்கென்னெஞ்சமேகுறையோதுதியே.

(இ-ள்.) மேதக்க சிந்தனைத் தாபதர் வாழ் முல்லை மேவு நம்ப- மேம்பட்ட (திருவடித்) தியானத்தையுடைய துறவிகள் வாழும் திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற நம்பனென்னுந் திருநாமத்தையுடையவரே,—தக்க சிந்தனை வா வீரம் தா என்று அட்டு மன்மதனைக் காது அக்க - தகுதியுடைய குறள்வடிவினனாகிய விஷ்ணுவை வருவாயாக (உனது) வலிமையைத் தருவாயாக என்று சொல்லி அழித்து மன்மதனை எரித்துக் கொன்ற (அக்கினிக்) கண்ணையுடையவரே,— சிந்து அனைத்தும் குடியார் முடிக் கண்ணுதல் என்று ஓத - கங்கையாறு முழுவதும் தங்கப்பெற்ற திருமுடியையுடைய சிவபிரானே என்று (திவ்வியநாமங்களை) எடுத்துப் புகழ்ந்த மாத்திரையில்,—கசிந்தனைக்கு நெஞ்சமே குறை என் ஓதுதி - உருகியவனுக்கு மனமே குற்றம் ஏது சொல்லுவாயாக (எ-று.) (அங)

துதிப்பருந்தாதவிழ்பூம்பொய்கைசூழ்முல்லைத்தொன்னகர்வாழ்
மதிப்பருந்தாதகிகொன்றைச்சடாதரவானியங்குங்
கதிப்பருந்தாதரவாயென்னுடம்பிற்கசியும்புலாற்
குதிப்பருந்தாதமுன்வந்தென்றனைத்தொண்டுகொண்டருளே.

(இ-ன்.) துதிப்பு அரும் தாது அவிழ் பூம் பொய்கை சூழ் முல்லைத் தொல் நகர் வாழ் -புகழ்தற்கரிய இதழ்கள் விரிந்த பூக்களையுடைய வாவிகள் சூழ்ந்த திருமுல்லைவாயிலென்னும் பழைய திருப்பதியின்கண் எழுந்தருளியிராநின்ற,—மதி பருந் தாதகி கொன்றைச் சடாதர - சந்திரனையும் பெரிய ஆத்திப்பூமாலையையும் கொன்றைப்பூமாலையையும் அணிந்த சடையை யுடையவராகிய சிவபெருமானே,—வான் இயங்கும் கதிப் பருந்து - ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற நடையுள்ள பருந்தானது,—என் உடம்பின் கசியும் புலால் ஆதரவாய்க் குதிப்பு அருந்தாத முன் வந்து - என்னுடைய உடலினின்றும் வழிகின்ற ஊனை விருப்பமாகப் பாய்தலுற்றுப் புசிக்குமுன்னமே எழுந்தருளி,—என்றனைத் தொண்டு கொண்டருள்—என்னை அடிமைபூண்டருளும் (எ-று.) (அச)

அருந்துதியானன்பினேத்தவைத்தாரருள்கற்பினல
மருந்துதியானம்புவிக்களித்தாரதுளாரமுதை

யருந்துதியானம்புரிமனமேவிரைந்தாள்வரெம்மை
யருந்துதியானன்கவர்முல்லைக்கேசொல்லுமவ்வெண்ணமே.

(இ-ள்.) அருந்துதி யான் அன்பின் ஏத்த அருள் வைத்தார்—அருமையாகிய (தேவாரமுதலிய) தோத்திரங்களை அடியேன் பத்திமையோடு எடுத்தோதும்பொருட்டுக் கருணைசெய்தவரும்,—கற்பின் நலம் அருந்துதியான் அம் புவிக்கு அளித்தார் - கற்பினது நன்மையை அருந்ததிமுகமாக அழகிய பூவுலகத்திற்குக் கொடுத்தவருமாகிய சிவபிரானுடைய,— ஆர் அருள் அமுதை அருந்து தியானம் புரி - நிறைந்த அருளாகிய அமிர்தத்தைப் புசித்தற்கு (உரிய) தியானம் செய்யக்கடவாய்,—மனமே எம் ஐயர் விரைந்து ஆள்வர் - (அங்ஙனஞ்செய்தால்) நெஞ்சமே நம்முடைய (அக்) கடவுள் விரைவில் எழுந்தருளி அடிமைபூண்டருளுவர்,—நன்கு அவர் முல்லைக்கே செல்லும் அவ் எண்ணம் உந்துதி ஆல் - (ஆகையால்) நன்மையாக அச்சிவபெருமானது திருமுல்லைவாயிலுக்கே செல்லுகின்ற அக்கருத்தினைச் செலுத்துவாயாக (எ-று.) இரண்டாமடியில் அருந்ததி அருந்துதியென மரீஇயிற்று. நான்காமடியில் ஆல் அசை. (௮௫)

எண்ணப்படிகடியாதன்பர்க்கீந்தெழின்முல்லையினுங்
கண்ணப்படிகடியானத்துந்தோன்றுமிக்கான்கழற்கீழ்
நண்ணப்படிகடிநெஞ்சேயவனம்பிழையெண்ணினுந்
தண்ணப்படிகடிதாறுதல்போலுமத்தன்மையனே.

(இ-ள்.) கடியாது எண்ணப்படி அன்பர்க்கு ஈந்து எழில் முல்லையினும் - தள்ளிவிடாமல் எண்ணியவண்ணம் பத்தர்களுக்குக் கொடுத்தருளி அழகையுடைய திருமுல்லைவாயிலின்கண்ணும்,—கண்ணப்ப அடிகள் தியானத்தும் தோன்றும் மிக்கான் - கண்ணப்பசுவாமிகளுடைய (அத்துவித) பாவனையின்கண்ணும் வெளிப்பட்டருளுகின்ற மேலானவருடைய,—கழற்கீழ் நண்ணப் படி கடி நெஞ்சே—திருவடி (வியாபகத்தில்) வியாப்பியமாகக் கலக்கும்பொருட்டு உண்மைநிட்டையைக் குருமுகமாகப்) பயிற்சி செய்வாயாக விளக்கமுள்ள மனமே,—அவன் நம் பிழை எண்ணினும் - அச்சிவபிரான் (இதுவரை வீணாகப்போக்கிய) நம்முடைய குற்றங்களைத் திருவுளத்துக் கருதினும்,— தண் அப்பு அடி கடிது ஆறுதல்போலும் அத்தன்மையனே - குளிர்ந்த நீரில் அடிக்கப்பட்டவடு விரைவிலே ஒழிதல்

போல (க்கருணைசெய்கின்ற) அவ்வருளுடையவரேயாவர் (எ-று) கண்ணப்பவடிகள் கண்ணப்படிகளென நின்றது. (௮௬)

அத்தன்மையர்ந்தெரியற்குழலாரமர்முல்லைநில
யத்தன்மையாந்தெரிமூழ்காமலுண்மையருவுருக்கா
ரத்தன்மையாந்தெரியக்குருவாய்வந்தனைத்துமல்லா
வத்தன்மையாந்தெரிவைபாகத்தாமறியென்றனனே.

(இ-ள்.) அத்தன் - பிதாவும்,—தெரியல் மையாம் குழலார் அமர் முல்லை நிலயத்தன் - மலர்மாலை (அணிந்த) கருமையாகிய கூந்தலையுடைய மங்கையர் தங்கப்பெற்ற திருமுல்லைவாயிலின்கண்ணதாகிய திருக்கோயிலையுடைய வரு'மாகிய சிவபிரான்,—மையாந்து எரி மூழ்காமல் - (சிறியேன் உலகவியலிற்) சுழன்று எரிவாய் நிரயத்திலே அழுந்திவிடாது,— அருக் காரத்து உரு உண்மை அல் மை ஆம் தெரியக் குருவாய் வந்து - (கன்மத்துக்கீடாகக்கூட்டுவித்த) தத்துவமாகிய (மாயா) காரியத்தினது சொரூபவுண்மையும் இருண்ட ஆணவமலத்தினது (சொரூபவுண்மையும்) பசு (வாகிய எனது சொரூபவுண்மையும்) அறியும்பொருட்டுக் குருமூர்த்தியாகி எழுந்தருளி (அறிவித்து),—அனைத்தும் அல்லா அத்தன்மையாம் - (எழுத்துக்கள்) எல்லாம் (ஆகியும்) ஆகாத அகரத்தின் இயல்பு (போல உலகெலாமாகியும் வேறாகிய அகளவடிவை) உடையாம்,—தெரிவை பாகத்தாம் - (உயிர்களுக்குப் போகமும் வீடுபேறும் கொடுக்கும்பொருட்டுப்) பராசத்தியைப் பாகத்திற் (கொண்ட சகளவடிவையும்) உடையாம்,— அறி என்றனன் - உணர்வாயாகவென்று (பதியாகியதம்முடைய சிறப்புருவம் பொதுவுருவங்களையும் முறையே) உபதேசித்தருளினார் (எ—று.) ஆதலால் அப்பெருமானுடைய கருணை இருந்தபடி என்னையென்பது எஞ்சிநின்றது.()

அறிவென்றவவழிச்செல்லார்தமையுமடக்குங்கண்ணாய்
குறிவென்றவவடியேற்களித்தாயிணைக்கூற்றின்மையாற்[வை
பொறிவென்றவவர்பெறும்பேற்றையொக்குமிப்பொன்னுரு[ச்
செறிவென்றவவலியென்றேவெம்மான்முல்லைத்தீங்கரும்பே.

(இ-ள்.) அறிவு என்று அவ வழிச் செல்லார்தமையும் அடக்கும் கண்ணாய் - அவ (மாகிய உலக) வழியிற் செல்லுதலை அறிவெ

ன்று கொள்ளாத அறிஞரையும் அகப்படுத்துகின்ற கண்ணையுடை யவளே,— குறி வென் தவ அடியேற்கு அளித்தாய் - (நீ) குறித்த மு துகாகியபுறத்தை மிகவும் எளியேனுக்குத் தந்தருளினை,—இணைக் கூறு இன்மையால் - சமமாகிய கூறுபாடில்லாமையினால்,—பொறி வென்ற அவர் பெறும் பேற்றை ஒக்கும் இப்பொன் உருவைச் செ றிவு - இந்திரியநிக்கிரகஞ் செய்த அத்துறவிகளால் அடையத்தக்க (முத்திப்) பயனைப் போலும் இப்பொன் போன்ற சரீரத்தை அணை தற்கு,—தவ வலி என் என்றோ - (இவனுக்குத்) தவவலிமை யாது ளதென்று கருதியோ,—எம் மான் முல்லைத்தீங்கரும்பே - எம்பெரு மானுடைய திருமுல்லைவாயிலின்கண் இருக்கும் இனிய கரும்பு போ ல் பவளே (எ-று.) கண்ணையுடையவளே கரும்புபோல்பவளே ச மமில்லாமையினால் அணைதற்குக் கருதியோ நீ தந்தருளினை யென க்கூட்டுக. [புறங்காட்டல்.) (அஅ)

கருப்பந்தங்குங்குறியான்முல்லைவாணகதிகடொறுந்
திருப்பந்தங்குங்குமலமரல்போன்றுதெரிவையரைப் [பூழிப்பா
பொருப்பந்தங்குங்குமக்கொங்கையென்றோதிப்பொய்யாதொ
யுருப்பந்தங்குங்குலியக்கலயன்றொழுமுத்தமனே.

(இ-ள்.) முல்லைவாண - திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானே,— கருப்பம் தங்கும் குறியால் - (திரு ம்பவும்) கருப்பத்திற் பொருந்துதற்கேதுவான (தீய) கருத்தால்,— கதிகள் தொறும் திருப் பந்து அங்கு உங்கும் அலமரல் போன்று- தேவகதி மானுடகதி மிருககதி நரககதியாகிய நாற்கதிகளினும் அழ கிய பந்து அவ்விடத்தும் உவ்விடத்தும் சுழலுதல்போல (ச்சுழன் று),—தெரிவையரைப் பொருப்பு அந்தம் குங்குமக் கொங்கை எ ன்று ஓதிப் பொய்யாது - பெண்களை மலைபோலும் அழகையுடைய செஞ்சாந்தணிந்த தனங்களையுடையாரென்று புகழ்ந்து பொய்ம் மையுடையேனாகாது,— உருப் பந்தம் ஒழிப்பாய் - தேகபந்தத்தை விடுவித்தருளும்,—குங்குலியக்கலயன் தொழும் உத்தமனே - குங்கு லியக்கலயநாயனாரால் வழிபடப்பெறற முதல்வரே (எ-று.) சிவபெ ருமானே முதல்வரே எனவும் சுழன்று என்றதன்பின் திரும்பவும் கருத்தால் எனவும் உரைத்துக்கொள்ள. குங்குமக் கொங்கை அன் மொழித்தொகை. (அக)

தமக்கடியாகமையொன்றித்தவஞ்செய்யுந்தன்மையிலா
தமக்கடியாகமுதவாரைச்சாரத்தருமுனக்குத்
தமக்கடியாகமறையாளர்முல்லைத்தலத்திறைவர்
தமக்கடியாகமெய்த்தொண்டுசெய்வேங்களைச்சார்வரிதே.

(இ-ள்.) தமக் கடியா - இருள்வடிவாகிய ஆணவக்கொடியாய்,—ஈமை ஒன்றித் தவம் செயும் தன்மை இலாத மக்கள் - (துறவறத்தினின்றும் துன்பங்களைப்) பொறுத்தலாகிய குணத்தைப் பொருந்தித் தவங்களைச் செய்கின்ற இயல்பில்லாத மாநுட (ப்பதரையும்,— தியாகம் உதவாரைச் சார உனக்குத் தரும் - (இல்லறத்தினின்றும் துறவறத்தாருக்கு உணவுமுதலிய) கொடுத்தலை உபகரியாதவ (ராகிய பாமர) ரையுமே பந்திக்க உனக்கு அருகமாகும்,— உத்தமக் கடி யாகம் மறையாளர் முல்லைத் தலத்து இறைவர்தமக்கு - மேம்பட்ட விளக்கமுள்ள வேள்விகள் (செய்கின்ற) பிராமணர்களுடைய திருமுல்லைவாயிலாகிய திருப்பதிக்கு முதல்வராகிய சிவபெருமானுக்கு,— அடியாக மெய்த்தொண்டு செய்வேங்களைச் சார்வு அரிது - (பிறவிகடோறும்) அடிப்பாடாக மெய்ப்பணிகளைச் செய்கின்ற எங்களைப் பொருந்துதல் (உனக்கு) அருகமல்ல (எ—று.) தமக்கடியாவென்பதனை இயமன்மேலேற்றிப் பொருள்கூறினும் பொருந்தும். (சு0)

சார்வருந்திப்பியமால்கொள்வதென்னை தண்முல்லைநகர்ச்
சார்வருந்திக்குடையார்செயல்கேட்டிதருவர்கட
மூர்வருந்திக்கெடப்புன்மூரல்கொள்ளுவரோரெருதை
யூர்வருந்திப்புனல்சூடுவராடுவரொண்ணுதலே.

(இ-ள்.) சார்பு அருந் திப்பியம் மால் கொள்வது என்னை- (ஆதலால் இத்தன்மையுடையாரிடத்தே) அடைதற்கரிய மிக்க ஆசைகொள்ளுதல் யாது (காரணம்),—தண் முல்லை நகர்ச்சார்வருந்திக்கு உடையார் செயல் கேட்டி - தண்ணியநீர் சூழப்பெற்ற திருமுல்லைவாயிலென்னும் திருப்பதியின்கண்ணே (பவனி) வருகின்ற திக்குகளை வஸ்திரமாகக் கொண்டவராகிய மாசிலாமணியீசருடைய சரிதங்களைக் கேட்பாயாக,—தருவர்கள் தம் ஊர் வருந்திக் கெடப் புன்மூரல் கொள்ளுவர் - அசுரர்களுடைய (முப்) புரங்களும் துன்பப்பட்டுக் கெடும்பொருட்டு இளநகை செய்தவர்,—ஓர் எருதை

ஊர்வர் - ஒன்றுகிய இடபத்தைச் செலுத்துபவர்,— உந்திப் புனல்
சூடுவர் - கங்கையாற்று நீரைத்(திருமுடியிலே) தரிப்பவர்,—ஆடுவர்-
(மயானத்தின்கண்ணே) திருநடஞ்செய்பவர்,—ஒள் நுதலே - அழகி
ய நெற்றியையுடைய பெண்ணே (எ-று.) பெண்ணே என முதலினு
ம் ஆதலால் ஆசைகொள்ளுதல் யாதுகாரணம் என இறுதியினும் கூ
றிக்கொள்க. தண் - ஆகுபெயர். ஒண்ணுதல் - அன்மொழித்தொகை.
[பாசிலாமணியீசர் பவனிபோதலைத் தரிசித்து மால்கொண்ட மாதை
நோக்கி நற்ருய்கூறியது. (கூக)

ஒண்ணுதலங்கனைமாரிடந்தோறுமுவந்துநடம்
பண்ணுதலங்கனையக்குழைத்தார்முல்லைப்பாடியினை
யண்ணுதலங்கனையானைத்தொழலிவையன்றிநெஞ்சின்
கண்ணுதலங்கனைமுன்னீருலகிற்கருமங்களே.

(இ-ள்.) இடந்தோறும் ஒள் நுதல் அங்கனைமார் - அரங்கங்கள்
தோறும் ஒளிபொருந்திய நெற்றியையுடைய பெண்கள்,—உவந்து
நடம் பண்ணுதல் அம் கல்லையைக் குழைத்து ஆர் - மனமகிழ்ந்து
நடனஞ்செய்கின்ற ஒலியான்து அழகிய கல்லும் உடையும் வண்
ணம் குழைத்து நிரம்பப்பெற்ற,—முல்லைப் பாடியினை அண்ணுதல்
அங்கு அனையானைத் தொழல் இவை அன்றி - திருமுல்லைவாயிலை
அடைதலும் அவ்விடத்தே எழுந்தருளியிருக்கின்ற தாய்போலும்
(கருணையுடைய) சிவபெருமானை (விதிப்படி) வழிபடுதலுமாகிய இ
ச்சிவதன்மங்களையல்லது,—கனை முந்நீர் உலகின் கருமங்கள் நெஞ்
சின்கண் நுதலம் - முழங்குகின்ற கடலாற் சூழப்பட்ட உலகத்தி
ன்கண்ணே (பிறிதொரு) கருமங்களை மனசிலே நினைத்தலும் செய்
யோம் (எ-று.) பண்ணுதல் ஆகுபெயர். மூன்றுமடியில் அன்னை அ
னையென இடைக்குறைந்து நின்றது. (கஉ)

மங்களமேவியன்முல்லைப்பிரானின்றுவைத்தனன்கா
மங்களமேவியனுட்டத்தவர்பொய்மலைமதங்கன்
மங்களமேவியசெய்தெனைவாட்டுமனமினிநீ
மங்களமேவியபுன்புதன்மானவலியிழந்தே.

(இ-ள்.) முல்லைப் பிரான் வியன் மங்களமே இன்று வைத்த
னன் - திருமுல்லைவாயிலையுடைய கடவுள் மேம்பட்ட (நித்திய)மங்
களத்தையே இப்பொழுது (எனக்குச்) செய்தருளினுர்,—(ஆதலால்)

—காமம் கள் அம் ஏ இயல் நாட்டத்தவர் பொய் மலம் மதம் கன்மம் களம்—ஆசையும் கள்ளும் அழகிய அம்பை யொத்த தன்மையுள்ள கண்களையுடைய பெண்களிடத்துச் (செய்கின்ற) பொய்யும் பாவமும் செருக்கும் (தீய) தொழிலும் வஞ்சகமுமாகியவற்றை,—மேவிய செய்து எனை வாட்டும் மனம் - விரும்பச்செய்து என்னை வருத்திய நெஞ்சமே,—இனி அளம் மேவிய புன் புதல் மான வலி இழந்து நீ மங்கு - இனி உப்பளத்தைச் சேர்ந்த சிறிய துரும்புபோலும் வலிமை கெட்டு நீ மங்குவாயாக (எ-று.) (சுஙு)

இழவாதென்போதமிழப்பித்தமுல்லைக்கிறையவனைத் [களி
தெழவாதென்போதகங்கைக்கொண் டென்றன்மைத்துரிசு
னுழவாதென்போதமெய்யன்புசெய்வீணிலுழலுமிந்தப்
பழவாதென்போதவிர்நெஞ்சேயுனக்கிதுபண்பல்லவே.

(இ-ள்) இழவாது என்போதம் இழப்பித்த முல்லைக்கு இறையவனை - (பசுவாகிய என்னை) இழக்காமல் என்னுடைய பசுத்துவத்தை இழக்கும் வண்ணம் செய்தருளிய திருமுல்லைவாயிலுக்குத் தலைவராகிய சிவபெருமானை,— தென் போது அகங்கைக் கொண்டு தொழ வா - அழகிய மலர்களை உள்ளங்கையிலே ஏந்திக்கொண்டு (மந்திரக் கிரியா பாவனைகளோடு பூஜித்து) வழிபடும்பொருட்டு வருவாயாக,— என் தன்மைத் துரிசுகளின் உழவாது என்பு ஓத மெய் அன்பு செய் - என்னுடைய பசுத்துவ (வாசனை) க் குற்றங்களின் (வழியே போய்) வருந்தாமல் என்பும் உருகியுணர்த்தச் சற்பத்தி செய்வாயாக,— வீணில் உழலும் பழ இந்த வாது என் - வம்பாகச் சுழலுகின்ற பழைமையாகிய இந்த (உலக) விவகாரம் யாது (பயன்றரும் ஆதலால்) ,—நெஞ்சே போ தவிர் இது உனக்குப் பண்பு அல்ல - மனமே (என்னைவிட்டு) நீங்கு (அல்லது விவகாரத்தை) ஒழி இது (வன்றி மறுதலைப்பட ஒழுகுதல்) உனக்கு முறையன்று (எ-று.) மூன்றுமடியில் ஓதவென்பது உபசாரவழக்கு. (சுச)

அல்லாக்குமாரிருணெஞ்சேதொழும்பர்க்கடித்தொழில்செ
யல்லாக்குமாரியென்றேத்தேலகிலமுமீன்றமுதிர்
வல்லாக்குமாரிதன்பங்காளனீலவரங்கமெல்லை
யல்லாக்குமாரியமுல்லைப்பிரானடிக்கன்புசெய்யே.

(இ-ள்.) அல்லாக்கும் இருள் ஆர் நெஞ்சே - (விடயங்களிற் சுழலுகின்ற மடமை நிறைந்த மனமே,— தொழும்பர்க்கு அடித் தொழில் செய்யல் ஆகு மாரி என்று ஏத்தேல் - குற்றேவல் செய்யுங் கீழ்மக்களுக்கு அடிமைத்தொழில் செய்யாதே (அருளிலும் பொறையிலும் கொடையிலும் முறையே) காமதேனுவும் பூமியும் மேகமும் (ஆகும்) என்று (அக்கீழ்களைப்) புகழாதே,—அகிலமும் ஈன்றும் முதிர்வு அல்லாக் குமாரிதன் பங்கு ஆளன் - (சடாசடப் பிரபஞ்சங்கள்) எல்லாவற்றையும் பெற்றும் மூப்புப்பருவமில்லாத இளமைப்பருவத்தையுடைய உமாதேவியாரது பாகத்தை ஆளுகின்றவரும் ,— நீல அரங்கம் எல்லை அல் ஆக்கும் ஆரியம் முல்லைப் பிரான் - நீலமணிகளாலாகிய நடனசபைகள் பகலை இரவாகச்செய்கின்ற பெருமையாகிய திருமுல்லைவாயிலையுடைய கடவுளுமாகிய சிவபிரானுடைய,—அடிக்கு அன்பு செய் - திருவடிகளின்பொருட்டுப் பத்திமைசெய்வாயாக (எ-று.) செய்தாற் போகமும் வீடு பேறும் பெற்றுய்யலாமென்பது கருத்து. (௫௫)

அன்புடையாளியங்காக்குறுங்கானத்திவல்கியெனத்
தன்புடையாளியங்காக்குமதர்தனியெய்தவிவ
டுன்புடையாளியங்காக்குமொலிமுல்லைத்தோன்றலதள்
வன்புடையாளியங்காக்குமிடறன்னவல்லிருளே.

(இ-ள்) அன்பு உடை ஆள் இயங்காக் குறும் கான் - (தம்மிடத்தும்) அன்பில்லாத வேடரும் சஞ்சரியாத அருநெறியையுடையகாட்டிலே,— தன் புடை அத்தி வல்கி என யாளி அங்காக்கும் அதர் - தனது பக்கங்களிலே (செல்லும்) யானைகளை உணவென்று நினைத்துச் சிங்கம் வாய்திறக்கின்ற வழியிலே,—தனி எய்த இவள் துன்புடையாள் - (ஆதலால் தலைவரே நீர்) ஏகமாக வர இத்தலைவி துக்கமுடையவளாவாள்,— இயம் காக்கும் ஒலி முல்லைத் தோன்றல் - வாத்தியங்களின் (முழக்கமும்) காவல் செய்தற்கண் உண்டாகின்றமுழக்கமும் உடைய திருமுல்லைவாயிலுக்கு முதல்வரும்,— வன்பு அதள் உடை ஆளி மிடறு அன்ன அல் இருள் அங்கு ஆக்கும் - வலிமையுடைய (புலித்) தோலை வஸ்திரமாகத் தரித்தவருமாகிய சிவபெருமானுடைய கழுத்துப்போல இரவானது இருளை அவ்விடத்தே செய்யாநிற்கும் (எ—று.) காட்டிலே வழியிலே இரவானது இருளைச் செய்யாநிற்கும்; ஆதலால் நீர் வரத் துக்கமுடையவளாவாளெனக் கூட்டுக. [இரவுவரல் விலக்கல்]

வல்லியம்போதகவண்டோடொலிக்கும்வளமுல்லைவாழ்
வல்லியம்போதகமாய்த்தபிரான்வரைமேலிடையோ
வல்லியம்போதகவாம்விழிதாமிந்தவார்முலையோ
வல்லியம்போதகரக்குழலாய்திருவாய்மலர்ந்தே.

(இ-ள்.) வல் இயம் போது அகம் வண்டோடு ஒலிக்கும் வளம் முல்லை வாழ் - வலிய வாத்தியங்கள் பூக்களிலுள்ள வண்டுகளுடன் (ஒருசமமாக) முழங்குகின்ற பெருமையாகிய திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற,—வல்லியம் போதகம் மாய்த்த பிரான் வரைமேல் - (தேவதாருவனத்து முனிவர் விடுத்த) புலியையும் யானையையும் கொன்ற கடவுளுடைய மலையில் (இருக்கும்),— இடை வல்லியோ தகவு ஆம் விழி தாம் அம்போ இந்த வார் முலை வல்லோ-இடை கொடியோ அருளுடைத்தாகிய கண்கள் பாணங்களோ இந்தக் கச்சணிந்த தனங்கள் சூதாடுகருவிகளோ,—ஓதகரக் குழலாய் திருவாய்மலர்ந்து இயம்பு - ஓ மயிர்ச்சாந்து பூசிய கூந்தலையுடையாய் (உனது) திருவாய் திறந்து செப்புவாயாக (எ-று.) மலையிலிருக்கும் கூந்தலையுடையாய் இடைகொடியோ ? கண்கள் பாணங்களோ ? தனங்கள் சூதாடுகருவிகளோ ? செப்புவாயாக வெனக்கூட்டுக. [கிளவிவேட்டல்.] (௧௭)

வாயானஞ்சக்கரமால்விடையாவைத்தமுல்லைப்பிரான்
வாயானஞ்சக்கரமோதித்தொழாதவறியர்க்கெய்த
வாயானஞ்சக்கரமீதுணவேந்திமயிலைத்துறை
வாயானஞ்சக்கரவாதழலாய்வருமம்புலியே.

(இ—ள்.) சக்கரம் மால் விடை வா யானம் ஆ வைத்த முல்லைப் பிரான் - சக்கரப்படையையுடைய விஷ்ணுவாகிய இடபத்தை வாவுகின்ற சிவிகையாகக் கொண்டருளிய திருமுல்லைவாயிலின்கண் எழுந்தருளியிருக்கின்ற கடவுளே,—வாயான் அஞ்சு அக்கரம் ஓதித் தொழாத வறியர்க்கு எய்த வாயான் - வாக்கினாலே பஞ்சாக்கரத்தை உச்சரித்து வழிபடாத அறிவிலிகளுக்குப் பொருந்த அகப்படாதவரே,—அக் கரம் மீது நஞ்சு உண ஏந்தி - அக்கைகளிலே விடத்தை யுண்டருளும்படி கொண்டவரே,—மயிலைத் துறைவா - திருமயிலைப்பதியாகிய கடற்றுறையையுடையவரே,—யான் அஞ்ச அம்புலி கரவாது அழலாய் வரும் - நான் பயமுறும்படி சந்திரன் மறைதலின்றி அக்கினிவடிவாக வெளிப்படுவன் (எ—று.)

இந்த விந்தை என்னையென்பது எஞ்சிநின்றது. முதலடியில் வாவு எனற்பாலது வா எனநின்றது. அன்றி வாய்மையான் வாயான் என மைவிகுதி தொக்கதாகக்கொண்டு அதற்குச் சற்சொரூபரே எனப் பொருள்கூறினும் பொருந்தும். [நிலவுவெளிப்படவருந்தல்.]

அம்பவளவளவாயெனக்கும்முல்லையாளர்வில்லி
னம்பவளவளவாம்விழியெங்கைக்குமன்புவைத்த
நம்பவளவளவாச்சொரிபாலொக்குநட்பறியாய்
நம்பவளவளவாவேதருமிங்குநண்ணலையே.

(இ-ள்.) அம் பவள வள வாய் எனக்கும் - அழகிய பவளம் போலும் வளப்பமாகிய அதரத்தையுடைய என்னிடத்தும்,—முல்லை ஆளர் வில்லின் அம்பு அவளவு அள் அவாம் விழி எங்கைக் கும் - திருமுல்லைவாயிலை ஆளுகின்றவராகிய சிவபெருமான் (கைக் கொண்ட) வில்லிற் (பூட்டிய விஷ்ணுவாகிய) பாணத்தினது அவ்வ ளவு (வஞ்சகம் பொருந்திச்) செவிவரையும் நீண்ட கண்களையுடைய என்றங்கையிடத்தும்,—அன்பு வைத்த நம்ப - (ஒத்தபடியாக) ஆ சை கொண்ட தலைவரே,—சொரி பால் ஒக்கும் நட்பு அளவள வா அறியாய் - சொரியாநின்ற பால்போல (க் கபடமில்லாத எனது) நண்பினை (நீர்) கலந்தும் உணர்கிலிர்போலும்,— (அ ங்ஙனமாயின்)—அவள் வள் அவாவே நம்பத்தரும் இங்கு நண்ண லை—(எங்கையாகிய) அப்பெண்ணினது மிக்க ஆசையே (உமக்கு) நம்பத்தக்கதாகலின் இவ்விடத்தே வாராதிரும் (எ-று.) எனக்கும் மென்பது வேற்றுமைமயக்கமாய் மகரவொற்று விரிந்து நின்றது. எங்கைக்குமென்பது வேற்றுமைமயக்கம். மூன்றாமடியில் அளவளா வா வெனற்பாலது அளவளவா வெனக்குறுகி உம்மை தொக்கு நின்றது. [அணைந்தவழிப்புலத்தல்.] (௯௯)

நண்ணத்திருவளவானந்தவீட்டினயந்தெண்ணிடு
மெண்ணத்திருவளகத்திகழ்ந்தேகியிரும்பரிதி
வெண்ணத்திருவளர்கையேந்திகாணரும்வேந்தனமர்
திண்ணத்திருவளமுல்லையிற்சேர்மின்றிருந்தகவே.

(இ-ள்.) வள வீட்டின் ஆனந்தத் திரு நயந்து நண்ண எண்ணி டும் எண்ணத்திர் - பெருமையுடைய வீடுபேற்றின்கண்ணதாகிய இ ன்பவாழ்வை விரும்பிச் சேரும்பொருட்டுக் கருதுகின்ற கருத்தையு டையவர்களே,—உவளகத்து இகழ்ந்து ஏகி இரும் பரிதி வெள்

நத்து வளர் இரு கை ஏந்தி காண அரும் - (திருக்கைலாசமலையின்கண்) அந்தப் புரத்திலே நிந்தைகூறிப் புகுந்த (மையால் உமாதேவியாராற் சபிக்கப்பட்ட) பிரமனும் பெரிய சக்கரப்படையையும் வெள்ளிய சங்கையும் உயர்ந்த இரண்டு கைகளிற்கொண்ட விஷ்ணுவும் தரிசித்தற்கரிய,—திண்ணத்து வேந்தன் அமர் இரு வளத் திருமுல்லைவாயில் தகச் சேர்மின் - வலிமையுடைய முதல்வர் எழுந்தருளி யிராநின்ற மிக்க அழகையுடைய திருமுல்லைவாயிலை நல்லொழுக்கத்தோடு அடையுங்கள். (எ-று.) எண்ணிய வண்ணம் அச்சிவபிரான் திருவருள் செய்வாரென்பது எஞ்சிநின்றது. ஏகி ஏந்தி என்பன பெயர்கள். காணவருமென்பது காணருமென அகரம் விகாரத்தாற் றொக்கது. உவளகத்து இகழ்ந்து ஏகி என்பதற்கு அந்தப்புரத்தில் அனுபவிக்கும் சிற்றின்பத்தை வெறுத்துச் சென்று எனப்பொருள்கூறலுமொன்று. அதற்கு உவளகத்தனுபவிக்கு மின்பத்தை உவளகமென உபசரித்ததாகக் கொள்க. (௧௦௦)

திருமுல்லைவாயிலந்தாதியுரை முற்றியது.

மெய்கண்டதேவர் திருவடிவாழ்க.

சிவஞானயோகிகள் திருவடிவாழ்க.